கல்கி

KALKI 28.12.2003 ரூ.6.00

புத்தாண்டு
ராசி பலன்
-அக்னி சர்மா



ஜெ...2004!



மாதங்களில்



மார்கழி நான்.

பகவான் கூறுகிறார் :

சூரியோதயத்துக்குச் சற்று முன்புள்ள நேரம் பிரம்ம முகூர்த்தம் எனப்படுகிறது. ஆத்ம சாதனத்துக்கு அது சிறந்த வேளையாகும். மனிதர்களுடைய ஒரு வருஷம் தேவர்களுக்கு ஒரு நாள் ஆகும். தை மாதமாகிய உத்தராய புண்ணிய காலம் அவர்களுக்கு சூரியோதயம். அதிலிருந்து உத்தராயணம் ஆறு மாதம் அவர்களுக்கு பகல். ஆடியிலிருந்து மார்கழி வரையில் தக்ஷிணாயணம் அவர்களுக்கு இரவு. அதில் மார்கழி மாதம் விடியற்காலம் தேவர்களது நாளில் பிரம்ம முகூர்த்தமாகிறது. அப்பொழுது செய்யும் தேவாராதனை, வந்தனை, வழிபாடு முதலியன மனதை நன்கு பண்படுத்த வல்லவைகளாம். இங்ஙனம் மார்கழி மாதம் புலனடக்கம், கடவுள் வழிபாடு ஆகியவைகளோடு முழுதும் இணைக்கப்பட்டிருக்கிறபடியால் மாதங்களுள் தாம் மார்கழி மாதம் என்கிறார்.

பகவான்

ஸ்வீட்களில் சிறந்தது **கிராண்ட் ஸ்வீட்ஸ்**

இனிப்புகள் : - மங்களூர் போளி, ரஸமலாய், ஸோன்பப்டி, இனிப்பு சோமாஸ், பொரிவிளங்காய் உருண்டை, தேங்காய் கோவா, குங்குமப்பூ ஹல்வா.

காரவகைகள் : - தட்டை, தேன்குழல், கைமுறுக்கு, சீடை, ஸ்பெஷல் மிக்ஸர். சீப்புச்சீடை, இரயில் கட்டிடம், வறுபயறு, விஜிடபிள் சமோசா.

பொடி வகைகள் :- கருவேப்பிலைபொடி, பருப்புப்பொடி, இட்லி பொடி, ரசப்பொடி, சாம்பார் பொடி, ஊறுகாய் பொடி.

திருமண வைபவங்களுக்கு :- சீர்முறுக்கு, சீர்அதிரசம், முள்ளுத்தேன் குழல், பருப்புத் தேங்காய் வகைகள், திரட்டுப் பால், அப்பம் முதலியன.

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

எண்.24, 2வது மெயின் ரோடு,
காந்தி நகர், அடையாறு,
சென்னை - 600 020.
போன் : 4915662, 4914213



ஜோசியம் பார்க்கிறதேய்... ஜோசியம்! 84-89

முள்ளங்கி பத்தையாட்டம்
ரூ. 10,000/-
அடிச்சது.... 16

இனி சதாம்? - 33

தியாவுக்கு றெக்கை முளைக்குமா?

- மொக்கராசு கவலை!

24-25



மிஸ்டர் நம்பகம்! 90



கல்கி
28.12.2003

✉ 'ராஜரிஷி' இலவச இணைப்பு குறையொன்றுமில்லாத சிந்தனைச் சிதறலாக, 'அகடிதகடனா' சாமர்த்தியத்துடன் தயாரிக்கப்பட்டிருந்தது என்றால் மிகையாகாது!
திருவண்ணாதபுரம், முகதி. சுபா.

✉ ராஜாஜி எழுதிய 'மதுவிலக்கு ரத்து' கவிதை கண்ணீர் சுரக்க வைத்துவிட்டது. இப்போது யார் இருக்கிறார்கள் நடக்கும் கூத்துகளைப் பார்த்து வேதனைப்பட!
ஈரோடு - 1,
சாந்தி கல்யாண்குமார்.



✉ தற்காலிகப் பணியாளர்களை 'தண்ணி' சப்ளைக்கு மாற்றிவிட்ட புரட்சியையும் தலையங்கத்தில் சுட்டிக் காட்டியிருக்கலாம்.
திருச்சி - 4, ஆர். பிரகாஷ்.

✉ எண்பத்தியேழாம் பக்க பெங்களூர் ஜோசியரின் ஆரூடம் பலிக்கட்டும்!
தக்கலை, லீலா இராம்.

✉ சைமா சங்கம் யுனெஸ்கோ விருதுக்காக பரிந்துரைக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்க விஷயம். விருது கிடைத்து விட்டால் கூடுதல் மகிழ்ச்சியே.
சித்தோடு, க. பூங்கொடி.

✉ பதினாலு வருஷம் போனால் என்ன? ரஜினியின் பேட்டி புதுசாகத்தானே இருந்தது. என்றைக்கும் பொருத்தமாய்க் கேள்விகள் கேட்ட நிருபர் யாரோ?
திருச்சி - 3, ஆர். கேசவன்.

(எஸ். சந்திரமௌலி. பெயர் விடுபட்டு விட்டது. ஸாரி!)

(- ஆர்)

✉ ரஜினியை அரசியலுக்குக் கொண்டு வராமல் ஓய்வதில்லை என்று முடிவெடுத்து விட்டன தமிழகப் பத்திரிகைகள் என்றே நினைக்கத் தோன்றுகிறது!
நெல்லை - 7, டி. ஜவகர்.

✉ எங்கள் ரஜினியின் புகழுக்குப் புகழ் சேர்த்த 'கல்கி'யே, உன்னை நேசிக்கிறேன்.
சென்னை - 117, ரஜினி உமாபதி.

✉ மகாகவி பாரதியின் பிறந்த நாளை ஒட்டி ஒரு பக்கத்தைக் கூட ஒதுக்காமல், கல்கியின் பொன்னான பக்கங்களை சூப்பர் ஸ்டாருக்காக ஒதுக்கி, மற்ற பத்திரிகைகளைப் போல் அவருக்குப் பெருமை சேர்த்த உமது புனிதப் பணியை நினைத்து உடம்பெல்லாம் சிலிர்த்தது.
சென்னை - 1,
கே.ஆர். ரவீந்திரன்.

புனிதப் பணி வாழ்க!

✉ 'ரியலு இல்ல. ரீலு!' கட்டுரை நயமான கிண்டல். 'பாஸு'க்கு செல்லமாய் ஒரு கைக் குலுக்கல்!
போடிநாயக்கனூர்,
எஸ்.எம். பாலசுப்ரமணியன்.

✉ நேற்றும் சரி... இன்றும் சரி... நாளையும்... தான் என்றும் (ெ)ச(ா)ம்பியன் என்பதை வாரந்தோறும் நிரூபித்து வருகிறார். பலே!
சென்னை - 39, சிம்மவாஹினி.

✉ மாநிலத் தேர்தல் கச்சேரிகளில் 'அபஸ்வரம்' பாடிய சோனியாவுக்குத் தலையில் குட்டுத் தந்த அபாரமான

[redacted]

கார்ட்டூனுக்கு முதுகில் ஷொட்டு.
சென்னை - 33, ஆர். கோபாலன்.

✉ குடிக்கும் தண்ணீரைப் பற்றிக் கவலைப்படாமல் அடிக்கும் 'தண்ணி'யை அனைவருக்கும் அளிப்பதற்காக போர்க்கால நடவடிக்கை எடுத்துவரும் அரசின் காதுகளில், தலையங்க வார்த்தைகள் விழுமா என்பது சந்தேகமே. அரசின் தள்ளாட்டத்தை மக்கள் தேர்தலில் நிச்சயம் தெளிய வைப்பார்கள்!
தஞ்சாவூர் - 7, வளர்மதி ஆசைத்தம்பி.

✉ 'காமராஜர், மூப்பனார் என்ற எடைக் கற்களைப் போட்டு நிறுத்தால், ஜி.கே. வாசன் எடை குறைவாகத் தெரிகிறார்' என்று தராசு பதிலளித்திருக்கிறார். எவரெஸ்டுக்கும், சிறிய அல்லது மிகச் சிறிய, குன்றுக்கும் உள்ள வித்தியாசத்தை வெறும் 'எடை குறைவு' என்றா சொல்வது?
சென்னை - 91, வி.என். கோபால்.

✉ டைடல் பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள குளிர்சாதன இயந்திரங்களின் செயல்பாடுகள் அனைத்தும் 'பில்டிங் ஆட்டோமேட்டிக் சிஸ்டம்' வசதியுடன், கம்ப்யூட்டர்களின் வாயிலாக, தானியங்கி முறையில் செயல்பட்டு வருகின்றன. இவ்வசதியினால் குளிர் சாதன வசதி ஒவ்வொரு அலுவலகத்தின் தேவைக்கேற்ப கூட்டுவதோ, குறைப்பதோ மேனுவலாக இல்லாமல், கம்ப்யூட்டர்களின் மூலமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
மேலும், பூங்காவில் ISO 14001 என்னும் சர்வதேச சுற்றுப்புறச் சூழல் திட்டம் நடைமுறைப்படுத்த ஆயத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால், 'பசுமைத் திட்டத்தை' எங்கெல்லாம் செயல்படுத்த முடியுமோ, அங்கெல்லாம் செயல்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
சென்னை - 113,
கே. பரதன்,
மேலாண்மை இயக்குனர்,
டைடல் பூங்கா.



கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் :
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
செ. ஏக்நாத் ராஜ்
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622, 23, 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யுஎஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

ஜெ...

தமிழகத்தில் இன்று எந்த மூலையில் அ.இ.அ.தி.மு.க கூட்டம் நடத்தினாலும் அதில் ஒலிக்கும் குரல் ''அம்மாவே பிரதமர்'' என்பதுதான்! தேசிய அரசியலுக்குத் தகுதியானவராக தம்மைத் தயார்ப் படுத்திக் கொண்டு விட்டாரா ஜெயலலிதா? பிரதமர் பதவி என்பது அவ்வளவு சுலபத்தில் கனிந்து வந்து விடுமா? அதை அடைவதற்கு ஜெ. வகுத்திருக்கும் யுக்திகள் என்ன?



* ஜி.கே. வாசன்



* இளங்கோவன்



* குமாரவேலு



* முருகு ராஜேந்திரன்

''பொதுவாகவே அரசியல்வாதிகள் சர்ச்சையான விஷயங்களில் கருத்துக்களைச் சொல்வதில் அடக்கி வாசிப்பார்கள். ஆனால் ஜெயலலிதா calls a spade a spade. 'வெளிநாட்டில் பிறந்த சோனியா இந்தியப் பிரதமர் ஆகக் கூடாது; பொதுச் சிவில் சட்டத்துக்கு ஆதரவு; அயோத்தியில் ராமர் கோயில் கட்ட முடியவில்லை என்றால் வேறெங்கு கட்ட முடியும்?' என்றெல்லாம் தடாலடிக் கருத்துக்களைச் சொன்னது மக்களுக்குப் பிடித்திருக்கிறது. வழ, வழ பேச்சுகளே அவரிடம் கிடையாது'' என்று வெளிப்படையாகப் பாராட்டுகிறார் மென்பொருள் பொறியாளரான ராமமூர்த்தி.

இதையே அரசியல் நோக்கர்கள் வேறு விதமாக விமர்சிக்கிறார்கள். ஜெயலலிதாவின் இந்தக் கருத்துகள் ஹிந்து அடிப்படைவாதிகளை ஈர்த்து, அதன் மூலம் பா.ஜ.கவின் மரியாதையைப் பெற்றுத் தரும் என்கிறார்கள்.

இந்த இரண்டரை வருட ஆட்சிக் காலத்தில் ஜெயலலிதாவுக்குப் பொது மக்கள் மத்தியில் பெரிதும் ஆதரவைப் பெற்றுத் தந்த ஒரு விவகாரம், அரசு ஊழியர் வேலை நிறுத்தப் பிரச்னையை அவர் கையாண்ட விதம்.

''என்னுடைய சம்பந்தி தி.மு.க அனுதாபி. ஆனால் அம்மா அரசு ஊழியர் பிரச்னையை, மிகத் திறம்பட சமாளித்ததைக் கண்டு, அ.இ.அ.தி.மு.க அனுதாபி ஆகி விட்டார்'' என்று சொல்கிறார் சென்னையைச் சேர்ந்த ஆளுங் கட்சிப் பிரமுகர் ஒருவர்.

மிகச் சாதாரண நிலையில் இருக்கும் பொதுமக்கள் கூட, ''பூனைக்கு இறுதியாக ஜெயலலிதா மணி கட்டி விட்டார்'' என்று பாராட்டுகிறார்கள்.

''இன்று எங்கள் மீது எடுக்கப்பட்ட இந்த



நடவடிக்கைகளால் சமூகத்தில் மற்ற பிரிவினர் சந்தோஷப்படலாம். ஆனால் நாளை இதே யதேச்சதிகாரத்தின் நிழல் ஒவ்வொரு பிரிவினர் மீதும் படும்போது, ஆறுதல் சொல்லக் கூட ஆள் இருக்காது என்பதைப் பொதுமக்கள் புரிந்து கொள்ள வேண்டும்'' என்கிறார் டிஸ்மிஸ் செய்யப்பட்டுள்ள அரசு ஊழியர் ஒருவர்.

ஜெயலலிதா அரசு, ஆன்மிக அரசு என்ற எண்ணம் அச்சாகப் பதிந்துவிட்டது. ''கோயில்களில் அன்னதானத் திட்டம் அறிமுகப்படுத்தியிருக்கிறார். கோயில் யானைகளுக்கு ஒரு மாத ஓய்வு கொடுத்தார்.



இன்று நாத்திகம் பேசும் தலைவர்கள் தங்கள் பெண் டாட்டி பிள்ளைகளைக் கோயில், கோயிலாக அனுப்பு கிறார்கள். போட்டிருக்கும் கலர்த் துண்டைக்கூட

2004

மாற்றத் தயங்குகிறார்கள். இந்த நிலையில் தமது நம்பிக்கைகளை மறைக்காமல் வெளிப் படையாகக் கடைப்பிடிக்கிறார்'' என்று முதல்வரைப் புகழ்கிறார் சென்னை கல் லூரிப் பேராசிரியர் ஒருவர்.

டான்ஸி தீர்ப்பு வெளியானதும் அவர் 'கடவுள் செயல்' என அதை விமர்சித்ததும், தோழியுடன் கோயிலுக்குச் சென்றதும், நேர்த்திக் கடன் செலுத்தியதும் பெரிய செய்திகளாகின. அவருடைய இறை நம்பிக் கையைப் பிரகடனப் படுத்தும் செய்திகள் அடிக்கடி வெளி வந்து கொண்டிருக்கின்றன. நமது மக்கள் ஆழ்ந்த கடவுள் நம்பிக்கை உடையவர்கள். பிற மனிதர்களிடம் காணப் படும் பக்தி - சிரத் தையைக் கொண்டு, அவர்களை எடை போடும் பழக்கம் உடையவர்கள். முதல்வரின் கோயில் கைங்கர் யங்களை அவர் கள் போற்றி, அரசியல் மதிப் பெண்களைக் கூட்டி விடுவார்கள்.

“இந்த ஆட்சியில் போலீஸுக்குத் தான் சகல அதிகாரமும். அவர்களுக்குத் தான் சலுகை என்றெல்லாம் சொல்கிறார் கள். மதுக்கடைகள் அரசு மயம் ஆனதால் பாதிக்கப்பட்டது காவல் துறைதான். கடைக்கு மாதம் ஐயாயிரம், பத்தாயிரம் என்று மாமூல் வாங்கியது இனி நடக்காதல் லவா. இதிலிருந்தே தெரியவில்லையா, இவ்வரசு போலீஸுக்கு ஆதரவு தரும் அரசு அல்ல; நியாயத்தை ஆதரிக்கும் அரசு!'' என்கிறார் ஆளுங்கட்சிப் பிரமுகர் ஒருவர்.

ஐயாயிரம் ரூபாய்க்கு மேல் வருமானம் இருந்தால்தான் ரேஷன் என்பது நடுத்தர

ATTENTION

UNEMPLOYED GRADUATES

- **Attend just 10 days in-class coaching**
- **Gain knowledge**
- **Get ready to take up the prestigious job of SALES OFFICER in pharma Industry (Reputed MNCs / Indian Companies)**
- **Salary ranges from Rs. 8,000 to Rs. 10,000 (per month)**
- **Placement Assistance assured**
- **Eligibility : All graduates / Post-graduates including B. Pharm / D. Pharm**
- **Male / Female, Age below 25**
- **Total Fee for the course Rs. 2,000 /- only.**
- **For details contact / write with self addressed long envelop, affixing Rs. 5 /= stamp.**

APSE

The Academy For Pharmaceuticals Selling Expertise

26- T, Pandu Klix Plaza,

168 Thambu Chetty Street,

Chennai - 600 001. Ph : 044 - 2535 4577

குடும்பங்களைக் கொஞ்சம் பாதித்திருக்கிறது.

''என் வீட்டில் நான் ஒருவன்தான் சம்பாதிக்கிறேன். எட்டுப் பேர் இருக்கிறோம். தனியார் வேலை. சம்பளம் ஆறாயிரம் ரூபாய். வெளி மார்க்கெட்டில் அரிசி, மற்ற பொருள்கள் வாங்கி, சமாளிக்க முடியவில்லை'' என்கிறார் கே.கே. நகர் கணேசன்.

ஆனால் இதன் மூலம் ரேஷன் கடையில் நடந்த தில்லுமுல்லுகள் ஒழிக்கப்பட்டன. ரேஷன் அரிசிக்காகக் கொடுக்கப்பட்ட அரசு மான்யம் குறைந்தது.

''கஜானாவைக் காலியாக வைத்துப் போய் விட்டார்கள், சென்ற முறை ஆண்டவர்கள். எனவே மணல் விற்பனை, மது விற்பனை, ரேஷன் அரிசி மற்றும் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் போன்ற துறைகளில் கொடுக்கப்பட்டு வந்த மான்யங்களைக் குறைத்தது தமிழக அரசு. நிதி ஆதாரங்களைப் பெருக்குவதில் அதிக கவனத்தை எடுத்துக் கொண்டுள்ளார் முதல்வர். அது பலனைக் கொடுக்கிறது'' என்று சொல்கிறார் கோட்டையின் மூத்த அதிகாரி ஒருவர்.

தமது ஆட்சியின் செயல்பாடுகளின் மூலம் தமிழ்நாட்டில் ஆதரவு மற்றும் எதிர்ப்புத் தளங்களை உருவாக்கியிருக்கும் ஜெயலலிதா, பாராளுமன்றத் தேர்தல் நெருங்கும் சூழலில், தில்லியை நோக்கி தமது காய்களை நகர்த்தத் துவங்கியிருக்கிறார்.

''தைரியம் என்பது அவருக்கு பலமாகவும் அதேசமயம் பலவீனமாகவும் போய்விட்டது'' என்று அலசுகிறார் தமிழக பா.ஜ.கவின் பொதுச் செயலாளர் குமாரவேலு.

''மூன்றாவது அணியெல்லாம் எடுபடாது. மூன்றாவது அணி என்பது முயன்று, முயன்று பார்த்து மூன்றுமுறை பொய்த்துப் போன அணி. தலைவர் இல்லாத, இலக்கு இல்லாத அணியாகத்தான் மூன்றாவது அணி இருக்கும்'' என்கிறார்.

தமிழக அரசு, பத்திரிகையாளர்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் மீது போட்டிருக்கும் அவதூறு வழக்குகள், தலைமைச் செயலகத்தை ராணி மேரிக் கல்லூரியில் வைக்கக் காட்டிய பிடிவாதம், கண்ணகி

சிலை, சிரணி அரங்கம் ஆகியவற்றை நீக்கு வதில் காட்டிய வேகம். இவையெல்லாம் மக்களை முகம் சுளிக்க வைத்தன. இந்த விஷயங்களில் குறைந்த பட்சம் அவருடன் தேர்தலில் கூட்டணி அமைத்த கட்சிகளை யாவது அவர் கலந்தாலோசித்திருக்கலாம். ஆனால் துரதிர்ஷ்டவசமாக 2001 சட்ட மன்றத் தேர்தலில் அவருடன் கூட்டு சேர்ந்த எந்தக் கட்சியும் இன்று அவருடன் இல்லை. அவர்களை அரவணைத்துச் செல்ல ஜெ. தவறி விட்டார்.

"தமிழ்நாட்டில் உள்ள தமது கூட்டணிக் கட்சிகளை அனுசரித்துப் போக முடியா தவர், மூன்றாவது அணித் தலைவர்களை எப்படி அனுசரித்துப் போவார். இது தவிர அண்டை மாநில முதல்வர்களை வார்த்தை களால் பந்தாடும் ஜெயலலிதா, உலகத் தலைவர்களோடு ஒருங்கிணைந்து செயல் படுவாரா? இதெல்லாம் ஒரு பக்கம் இருக் கட்டும். தமிழ்நாட்டு நிர்வாகத்தில் என்ன சாதித்து விட்டார் இவர்? இன்று எல்லாத் தரப்பினரும் வெறுப்புற்று இருக்கிறார்கள். ஆறு கோடி மக்களின் நல்வாழ்க்கைக்கு உத்தரவாதம் தர முடியாதவர், நூறு கோடி மக்களைப் பாதுகாக்க முடியுமா?" என்று கேட்கிறார் தி.மு.க அமைப்புச் செயலாள ரான டி.கே.எஸ். இளங்கோவன்.

தீவிரவாதம், பயங்கர வாதம் ஆகிய வற்றை எதிர்த்து நிற்பதிலும், அடக்கு வதிலும் ஜெயலலிதா காட்டும் வேகம், செயல்பாடு ஒரு பகுதியினரால் போற்றப் படுகிறது. ஆனால் அதே சமயம் அரசியல் வாதிகளையும், பத்திரிகையாளரையும் 'பொடா'வில் போட்டது, எதிர்ப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது.

ஜெயலலிதா கொண்டு வந்த சட்டங் களில் மிகவும் பிரச்னையை உண்டாக்கியது கட்டாய மதமாற்றத் தடைச்சட்டம்தான். இந்தச் சட்டம் மதச் சார்பற்ற நிலையி லிருந்து ஜெ.வை ஒதுக்கி வைத்திருக்கிறது என்றே சொல்லலாம்.

"அடிப்படை வாதம் பேசும் கட்சி களுக்கு இங்கே இடம் கிடையாது. மூன்றா வது அணி என்ற பேச்செல்லாம் எடு படாது" என்கிறார் தமிழக காங்கிரஸ் தலைவர் ஜி.கே. வாசன்.

ஜெ.வின் ஜாதகம் என்ன சொல்



"மேலும் ஒரு தமிழ்ப் பாட்டு பாடும்படி சீட்டு வந்திருக்கா?"
"இல்லே... தமிழைக் கொலை செய்தது போதும்- தொடர்ந்து தெலுங்கையே கொலை செய்யவும்னு எழுதி அனுப்பியிருக்கிறார்...!"
- ராஜிராதா

கிறது?

பிரபல ஜோதிடரான டாக்டர் முருகு ராஜேந்திரனிடம் கேட்டோம். ஜாதகக் கட் டங்களைக் காட்டி, கணிப்பைக் கொட்டி னார்.

"மிதுன லக்னம், சிம்ம ராசியில் பிறந் தவர் முதல்வர். ஜென்ம லக்னத்திற்கு ஏழில் முழு ஆட்சி பெற்று ஜென்ம லக்னத் தைப் பார்வை செய்வது ஹம்ச யோகம். அது போல மிதுன லக்னத்திற்கு யோகக் காரணனான சுக்கிரன், மீனத்தில் உச்சம் பெற்று சஞ்சரிப்பது மாளவியா யோகம் ஆகும். இது மட்டுமல்லாமல் குரு சந்திர யோகம், சந்திரமங்கள யோகம், புதாத்திய யோகம் என்று ராஜயோகங்கள் அமையப் பெற்றுள்ளன. தற்போது இவருக்கு ராகு தசையில் புதன்புத்தி 21.06.2005 முடிய நடைபெறுகிறது. மிதுன லக்னத்திற்கு 11ம் வீடாகிய மேஷத்தில் ராகு அமையப் பெற்று, ராகு தசை நடைபெறுவதும், அதிலேயே குறிப்பாக 1.4க்கு அதிபதியான புதன் புத்தி 21.06.2005 முடிய நடைபெறு வதும் அற்புதமான அமைப்பு. எனவே 2004ல் இவரது பலம் கூடும். குரு சனி வக்ர காலத்தில் சோதனைகள் உண்டானாலும், அவற்றையெல்லாம் வெற்றி பெறக் கூடிய வல்லமை இவரது ஜாதகத்துக்கு உண்டு" என்கிறார் முருகு ராஜேந்திரன்.

- ப்ரியன்

படங்கள்: ராஜன்

அட்டைப்படம்: மீடியா ராமு

காஞ்சி ஸ்ரீ மடம் நடத்தும் உல

வர்த்தமானன் பதிப்பக



வியாசபாரதம்

எளிய தமிழ் உரைநடையில் -2000 பக்கங்கள்

மூன்று தொகுதிகளில்

விலை ரூ. 450 **சலுகை விலையில் ரூ. 225 மட்டுமே!**




வேதங்களில் சொல்லப்படும் கருத்துக்கள் அனைத்தும் இதில் இடம் பெறுவதால் வியாசபாரதத்தை ஐந்தாம் வேதம் என்பர். வியாசபாரதம் ஏராளமான கிளைக்கதைகளையுடைய ஓர் ஆலவிருட்சம்!

மனித வாழ்க்கையை நெறிப்படுத்த எழுந்த இந்நூல், அற வழியில் நடக்க மனிதனைச் சிந்திக்க வைக்கிறது. இந்நூலைப் படிப்பவர் நெஞ்சில் ஓர் அமைதி ஏற்படும். மற்றவரை ஏமாற்றக் கூடாது என்ற எண்ணம் மேலோங்கும். நம்மை ஏமாற்றாமல் இருக்க விழிப்புடன் செயல்படத் தூண்டும். உலோபம், பொறாமை, கோபம் போன்ற தீக்குணங்கள் நீங்கும்; தியானம், அமைதி, அன்பு போன்ற நற்குணங்கள் துலங்கும்.

வால்மீகி இராமாயணம்

எளிய தமிழ் உரைநடையில்- 2000 பக்கங்கள் நான்கு தொகுதிகளில்

விலை ரூ. 450 **சலுகை விலையில் ரூ. 225 மட்டுமே!**



நான்மறையால் அறியத் தக்க பரம புருஷன் இராமராக அவதரிக்கவே நான்மறையும் வால்மீகியின் திருநாவிலிருந்து இராமாயண வடிவும் கொண்டு வந்தது என ஆன்றோர் கூறுவர்.

அறம், பொருள், இன்பம் என்பவற்றில் அறத்தை இராமரும்; பொருள் இன்பங்களை இராவணனும் தங்கள் இலட்சியமாகத் தேர்ந்தெடுக்கின்றனர். இராவணன் கடுந்தவம் புரிந்து தேவர்களையும் தலைமிதித்து நிற்கும் ஆட்சிப் பேற்றை வரமாகப் பெறுகின்றான். இராமரோ தன் வாழ்க்கையையே ஒரு பெரும் தவமாகச் செய்து அறத்தைக் கடைப்பிடிக்கின்றார். இராமருக்கும் சீதைக்கும் இடையே உள்ள அன்பே தருமத்தின் அரணாகிறது.

கதையில் வரும் மற்ற மாந்தரும் உயர்ந்து சிறந்து நிற்கிறார்கள். இத்தகைய மாந்தர் வாயிலாக வால்மீகி உலகப் போக்கையும், அழிவில்லாத தருமத்தையும் ஒருங்கே விளக்குகிறார்!

ஸ்ரீமத் பாகவதம்

எளிய தமிழ் உரைநடையில்- 900 பக்கங்கள் இரு தொகுதிகளில்

விலை ரூ. 200 **சலுகை விலையில் ரூ. 150 மட்டுமே!**

மகாபாரதத்தை அருளிய பின்னரும் வியாச முனிவருக்குச் சாந்தி ஏற்படவில்லை; தம் மனக் குறையை நாரதரிடம் தெரிவித்தார். நாரதர், மகாபாரதத்தில் பகவானின் கல்யாண குணங்களைவிடத் தர்மங்களை அதிகமாக விவரித்துள்ளீர். ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் மகிமைகளைச் சொல்லவில்லை. அவற்றை விரிவாக வருணிக்கும் நூல் ஒன்றைச் செய்தால் தங்கள் மனம் சாந்தி அடையும் என்றார். வியாசரும் மனமகிழ்வுடன் இந்தப் பாகவதத்தை உண்டாக்கித் தம் தவப் புதல்வரான சுக முனிவருக்கு அருளினர். அவர், மோட்சத்தை விரும்பிய பரீட்சித்து மன்னனுக்கு இதனை உபதேசித்தார். முக்தி பெற விரும்புவோர் இப் புண்ணிய நூலினைப் படித்து பயனடைவார்களாக!

காபாரத கருத்தரங்கினை ஒட்டி
ழங்கும் மாபெரும் இதிகாசங்கள்



ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர
சரஸ்வதி சுவாமிகளின் ஆசியுரை

னிதனுடைய வாழ்க்கையை நல்வழிப்படுத்துவதில் இரண்டு திகாசங்கள் இருக்கின்றன. அவை **இராமாயணம், மகாபாரதம்.** வ்விரண்டு நூல்களுமே தர்மத்தையே அடிப்படையாகக் கொண்டு ந்த நூல்கள். இராமாயணத்திலே மனிதன் எப்படி வாழ வேண்டும் ன்று தர்மத்தை மாத்திரமே அதிகம் வலியுறுத்திருக்கிறது. டத்தியும் காட்டியிருக்கிறது.

மகாபாரதம் என்ற சொல்லிலேயே மனித சமுதாயத்திலே உள்ள னைத்துப் பிரிவினருக்கும் அவரவர் தர்மங்கள் விசேஷமாகச் சால்லப்பட்டிருக்கின்றன. மகா என்ற சப்தத்திற்கு விஷயங்கள் அதிகம்; தர்மங்கள் அதிகம்; டைபிடித்தவர்கள் அதிகம்; நடைமுறைப் படுத்த வேண்டிய வழிமுறைகள் அதிகம் என்று பொருள். காபாரதம் தொடங்கிய முதலே அதர்மமும் தர்மமும் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன. ஒரு மனிதன் வறு செய்ததனால் அந்த தவறுக்கு பதிலாக சமுதாயத்தையே அழிக்க வேண்டும் என்ற எண்ணம் மகாபாரத ாலத்திலேயே தோன்றிவிட்டது. ஒரு பாம்பு கடித்து பரிக்ஷீத் இறந்ததனால் பாம்பின் சமுதாயத்தையே அழிக்க வண்டும் என்று வேள்வி செய்தார்கள். அந்த வேள்வியைத் தடுத்து நிறுத்த ஆரம்பித்ததுதான் மகாபாரதத்தின் ஆரம்பம். இந்த மகாபாரத ஆரம்ப நெறிமுறையும் அந்த வேள்வியை தடுத்து நிறுத்திய நெறிமுறையும் ன்னமும் நமக்கு தேவைப்படுகிறது. தர்மத்துக்கு விரோதமாக நடப்பவர்களை அழிக்க வேண்டும். அதுதான் னித வாழ்வின் சிறப்பு. அதுதான் தர்ம வாழ்க்கை. அவ்வாழ்வு வாழ்வதற்குதான் மனிதப்பிறவி. இந்த ண்மையை அறியாமல் சிலர் மகாபாரதம் படித்தால் சண்டை வந்துவிடும் என்று பயப்படுகிறார்கள்.

24-12-2003 முதல் நமது ஸ்ரீ மடத்தின் சார்பில் உலக மகாபாரதக் கருத்தரங்கு சென்னையில் நுங்கம்பாக்கம் வைஷ்ணவா கல்லூரியில் நடைபெற இருக்கிறது. இந்த புண்ணிய காலத்தில், பொதுமக்களுக்கு பல நல்ல ூல்களை வெளியிட்டு வரும் வர்த்தமானன் பதிப்பகம் மலிவுப் பதிப்பில் வியாச மகாபாரதத்தைக் கொண்டு ருவதைக் கண்டு மிகவும் சந்தோஷிக்கிறோம். ஒவ்வொரு தமிழரின் வீட்டிலும் இந்த நூல் வாங்கி வைக்கப்பட்டு பூஜிக்கப்பட்டு, படிக்கப்பட்டு, வாழ்க்கை நடைமுறைக்கு உதவுவதாக அமைய வேண்டும் என ாழ்த்தி ஆசிர்வதிக்கிறோம்.

- நாராயணஸ்ம்ருதி:

தனித்தனியாகத் தபால் மூலம் பெற வியாசபாரதம்; வால்மீகி இராமாயணம்; ஸ்ரீமத் பாகவதம் நூல்களுக்கான தபால் மற்றும் கட்டுச் செலவு முறையே ரூ.40; ரூ.40; ரூ.35 ஆகும்.

மூன்று நூல்களையும் ஒரே சமயத்தில் தபால் மூலம் பெறுவது மிகச் சிக்கனமானது. அதாவது மூன்று நூல்களின் சலுகை விலை ரூ.600+ தபால் மற்றும் கட்டுச் செலவு ரூ.60 சேர்த்து ரூ.660 மட்டும் தபால்காரரிடம் செலுத்தி நூல்களைப் பெறலாம்.

தபாலில் பெற கடிதம் எழுத வேண்டிய முகவரி

வர்த்தமானன் பதிப்பகம்

40, சரோஜினி தெரு, தி. நகர், சென்னை - 17.
(உஸ்மான் ரோடு கீதாஞ்சலி ஹோட்டல் அருகில்)

நேரில்,
சென்னை வர்த்தமானன் (✆ : 24350561) ;
கோவை விஜயா (✆ : 2382614 / 2394614);
சேலம் சந்திரா (✆ : 2265635);
தருமபுரி திருவள்ளுவர் (✆ : 268769);
திருச்சி திருச்சி புக் ஹவுஸ் (✆ : 2705098 /2764198);
மதுரை செல்வி (✆ : 2343510 / 2345169);
நெல்லை அருள் நந்தி சிவம் (✆ : 2339692 / 3100710)
ஆகிய இடங்களில் சலுகை விலையினை
மட்டும் ரொக்கமாகச் செலுத்தி உடனே
பெற்றுக் கொள்ளலாம்.

நேரம் காலை 10.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை
(உணவு இடைவேளையின்றி) ஞாயிறு விடுமுறை

இச்சலுகை 7.1.2004 வரை மட்டுமே!



இசைபுரு

சந்தானகோபாலன் ஓட்டிய ஆட்டோ!

சென்னையின் குறுகலான மைலாப்பூர் சந்தில் தண்ணீர் லாரி நின்றால், போக்குவரத்து என்னாகும்...? அப்படியே 'ரிவர்ஸில்' வந்து, பக்கத்து, சந்து பொந்துகளில் புகுந்து புறப்பட்டு ஒருவாறு நாம் கதிமோட்சம் பெற்றுத்தான் தெப்பக்குளத்தருகே உள்ள ஆர்.ஆர். சபாவை அடைய வேண்டியிருக்கிறது. ஆனால் ஆட்டோக்காரர் கெட்டிக்காரர். சக்கதி ராஜமார்கத்தில் சாரத்தியம் பண்ணுகிற தோரணையில் வண்டியைச் செலுத்தி, நம்மை கார்த்திக் ஃபைன் ஆர்ட்ஸ் நடத்தும் நெய்வேலி சந்தானகோபாலனின் கச்சேரியில் கொண்டு வந்து சேர்த்து விடுகிறார்!

இந்த ஆட்டோ ஓட்டுனரைக் காட்டிலும் 'மீனாக்ஷி மேமுதம் தேஹி' கீர்த்தனையில் நிரவல் செய்ய இவர் தேர்ந்தெடுத்த வரி, 'மதுமதமோதித ஹ்ருதயே சதயே...' அம்பிகை மீனாக்ஷியின் கனிந்த, தேன்பிலிற்றும் ஹ்ருதய காருண்யத்தை மென்மையாக வெளிப்படுத்தியது நிரவல். துரித காலத்திலும் கீழ் ஸ்தாயியை விட்டகலாமல், ராக பாவத்தை அவர் பொழிந்தபோது, ஆர். ஆர். சபாவின் ஓட்டை ஒடிசல் நாற்காலிகளை விட்டுப் பெயர்ந்து, பூர்வி கல்யாணியில் ஏறிக் கொண்டு, மதுராபுரிக்கே போய் விட்டோம்.

இந்த கீர்த்தனைக்கான இரண்டாம் கால ஸ்வரம், நம்மைத் திரும்பவும் ஆட்டோவில் ஏற்றி ஆர்.ஆர். சபாவிலேயே கொண்டு தள்ளி விட்டது. அத்தனை வேகம்! அந்த வேகத்திலும் அழகுணர்ச்சி கைவிடவில்லை என்பதே பாடகரின் பலம்.

ஆனந்த பைரவியில் 'ராம பத்ர ரா ரா' (தியாகராஜர்) 'பங்கஜ லோசன' (கல்யாணி) என்று கச்சேரி அமைப்பில் கவனம் செலுத்தி வளர்த்துக் கொண்டு போய், சட்டென்று சாமர்த்தியம் வாய்ந்த சமாளிப்புத் திலகம் ஒருவர் உண்டெனில், அவர் சாக்ஷாத் நெய்வேலி சந்தான கோபாலன்தான். ஒரு காலத்தில் கரைகளைத்தொட்டு ஓடிய காவிரியாக வசீகரித்த இவருடைய குரல்வளம், இன்று கமண்டலத்துள் அடைபட்ட காவிரியாக ஒடுங்கி விட்டது. ஆனால், கமண்டலத்துக்குள் இருந்தாலும் காவிரி காவிரிதான், என்று தமது சங்கீதத்தின் மூலம் ஒவ்வொரு நிமிடமும் நிரூபித்தார் சந்தானகோபாலன்! தொண்டையை அடைக்கும் முட்டுக்கட்டையோடு போராடாமல், மாற்று வழியில் சென்று ஜெயம் கொள்கிறார்; மனம் கொள்ளை கொள்கிறார் இந்தக் கலைஞர்.



• நெய்வேலி சந்தானகோபாலன்

வியந்து வியந்து அனுபவிக்க வைத்தார்.

தனியாவர்த்தனத்தில் ம்ருதுவான வாசிப்பில் ஆரம்பித்த குருவாயூர் துரை, கணகணப்பைக் கூட்டிக் கொண்டே போனதில், ஓசையும் உக்ரமும் மிக்க தீர்மானமாக முடிந்தது. அவருக்குக் கைகொடுக்கக் காத்திருந்த கஞ்சிரா மடிப்பாக்கம் முரளி பாவம், ஒப்புக்குச் சப்பாணிதான்.

மாம்பலம் சகோதரிகள் மூன்றாவது பாட்டாக 'ஆழி மழைக் கண்ணா' பாசுரம் பாடியபோது, அவர்களுடைய பாடாந்தர சுத்தம் பளிச்சிட்டது. அளவான, அழகான சங்கதிகள்; ஆனால் சித்ரா, விஜயலக்ஷ்மி




● மாம்பலம் சகோதரிகள்

குரல்கள் இணையாத இடங்களும் இருக்கின்றன... தியாகபிரும்ம கான சபாவுக்காக பிற்பகல் நான்கு மணிக்கு இவர்கள் பாடினார்கள். வாணி மஹாலின் அழகான மினி அரங்கம்... அதை நிறைத்த ரசிகர் கூட்டம்... ஆனால் அந்த வாய்ப்பையும் ஸ்தானத்தையும், சகோதரிகள் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்றே சொல்ல வேண்டும்.

ஒன்றரை மணி நேர நிகழ்ச்சியில் மூன்று கீர்த்தனைகளுக்குப் பிறகும் சட்டென்று ஆலாபனை ஒன்றைத் தொடங்காமல், 'குருவாயூரப்பனே அப்பன்' (ரீதிகௌளை) எடுத்துப் பாடினார்கள். மன்னார்குடி ஸ்ரீநிவாஸனின் மிருதங்கம் வேறு சற்று குதித்து ஓடியது.

இளைய சகோதரி சித்ரா பாடிய பூர்வி கல்யாணியில், ராக ஸ்வரூபம் பளிச்சென்று இருந்தது. ஆனால், மெருகும் முழுமையும்



● கே. காயத்ரி

'மார்கழித் திங்கள்...' என பாசுரம் பாடினார். 'நாராயணனே நமக்கே பறைதருவான்...' 'நாராயணனே' என்று நிறுத்தி, நாட்டையில் திஸ்ரமைத்துக் கொண்டு உட்கார்ந்து, கற்பனை ஸ்வரங்கள் பாடியது, அழகான ஆச்சர்யம். அதிலும் பஞ்சரத்ன கீர்த்தனையிலிருந்து ஒரு சரணத்தை சுவீகாரம் பண்ணிக் கொண்ட சாமர்த்தியம் கண்டு, ரசிகர்கள் கைகொட்டித் தீர்த்து விட்டார்கள்.

சங்கராபரணம் ஒரு குழந்தையாகி விட்டது. சந்தானகோபாலன் அதை மடியில் போட்டுக் கொஞ்சித் தாலாட்டி, அமைதியாகத் தூங்க வைத்தார். கொஞ்சம் கூட துரிதப் பிரயோகங்களைப் பாட இயலாத நிலையில், அழகான கமக சஞ்சாரங்களால் ஆலாபனையை அமைத்தார். இந்த சாத்விக பாவத்தை ஒற்றியெடுத்துக் கொண்டு வயலின் மூலம் வெளிப்படுத்தினார் வி.வி.ரவி.

கீர்த்தனை - ஸ்வர ராக சுதா...!

'மூலாதாரஜ...' - நிரவல் ஸ்வரம்... அனாயாசமான கற்பனைகள் - மேல் ஸ்தாயிக்குப் போக இயலாத குறைதெரியாதபடி, ஒவ்வொன்றையும் அழகுபடுத்திக் கொண்டே போக, அட... இது என்ன - இங்கிலீஷ் சங்கராபரணம்! இங்கே கொஞ்சம் ஹிந்தி கேட்கிறதே... ஆங், இதோ தெலுங்கு (தியாகராஜ கீர்த்தனைப் பிரயோகங்கள்) வாஹ் ரே, வா, காசி உஸ்தாதுகளின் சங்கராபரணம் அல்லவா இது! என்று

தேடியும் கிடைக்கவில்லை. மேல் ஸ்தாயிகளில் பாட ஆசை இருக்கிறது. ஆற்றல், அந்த ஆசையின் உயரத்துக்கு வளர வேண்டும்.

இந்த ஆலாபனைக்கு வயலின் மூலம் எதிரொலி தந்த மூன்றாவது சகோதரி ஹேமலதா, முதல் மதிப்பெண்ணைச் சுலபமாகப் பெற்றுச் சென்றார்.

'நடமாடும் நாதன் அடிமலரே துணை' என்ற அழகான கீர்த்தனையை எடுத்த போது, அதுவரை ஆக்கிரமித்த மிருதங்கத்தோடு கஞ்சிராவும் சேர்ந்து பொலிவு தந்தது. 'பாலகிருஷ்ணன் பாட' என்ற வாக்கேயக்கார முத்திரை வரியில் நிரவல் - சகோதரிகள் மாறி மாறிப் பாட, இட்டு நிரப்புவதற்குப் பதில் இடைவெளிதான் அதிகமாயிற்று.

மாம்பலம் சகோதரிகள் எடுத்தாண்ட மற்றொரு பிரதான ராகமான சங்கராபரணத்திலும் இதே நிறைகுறைகள் விரவி இருந்தன. சுத்தமான சஞ்சாரங்களைக் கொண்டு விஜயலக்ஷ்மி வளர்த்த ஆலாபனையில், கார்வைகள் இல்லாததால் ஒட்டுப் போட்ட துணி போலாகி விட்டது. மீண்டும் ஹேமலதாவின் வயலினுக்கே முதல் மதிப்பெண்! ஸ்வர ராக சுதா' கீர்த்தனையில் சாஹித்ய பாவம் மிளிர்ந்தது. மாறி மாறிப் பாடிய கற்பனை ஸ்வரங்களில் சீரான திட்டமிடல் தெரிந்தது.

'தனியாவர்த்தனத்தின் போது எழுந்து போக வேண்டாம்' என்று கஞ்சிராக் கலைஞர் கே.எஸ். ரங்காச்சாரி கேட்டுக் கொண்டது நியாயம். ஆனால் அந்த ஆவர்த்தனம் also ran ஆக அமைந்தது என்ன நியாயம்!

துக்கடாக்களில் சகோதரிகள் ஸ்பெஷலிஸ்ட் என்பதற்கான அறிகுறி தெரிந்தது. 'ராம சரண சுகதாயி' (துளஸிதாஸர்) பஜன், 'பேக பாரோ' போன்றவற்றின் கச்சிதத்தை 'மனமே கணமும் மறவாதே' என்ற எம்.எஸ். ஹிட்டிலும் கொண்டு வரலாம்; கச்சேரி முழுவதிலும் கொண்டு வரலாம் -

ஒவ்வொரு பாட்டுக்குப் பிறகும் வாயைக் கையால் மறைத்து, சகோதரிகள் என்னதான் ரகசியம் பேசிக் கொள்வார்களோ, யாம் அறியோம்; ஆனால் மேலும் கடுமையான உழைப்பும் திட்டமிடலும் இருந்தால்தான் மாம்பலம் சிஸ்டர்ஸ், மகாபலம் சிஸ்டர்ஸ் ஆக முடியும் என்பதில் எந்த ரகசியமும் இல்லை!

சுகுணா புருஷோத்தமனின் சிஷ்யை என்பதை சுருதி - லய சுத்தத்திலும் பாணியிலும் அழுத்தமாக நிரூபிக்கிறார் கே. காயத்ரி. குருவின் ஹ்ருதய பாவத்தை இன்னமும் அவர் உள்வாங்கிக் கொள்ள ஆரம்பிக்கவில்லை என்பதும், சுத்தமாகவும் அழுத்தமாகவும் தெரிகிறது.

நளினகாந்தி சபாவில் அவர் பாடிய ராமக்ரியாவும் பைரவியும் இறக்கை கட்டிக் கொண்டு பறந்தன. ப்ருகாவும் கார்வையும் பிரமாதம்! வயலின் அம்பிகா பிரசாத் ஈடுகொடுக்கத் திணறினார். மிருதங்கம் திருவனந்தபுரம் பாலாஜி சவால்களை ஏற்றார். ஆனால் ஒட்டுமொத்த முயற்சியும் மனத்தில் நிற்க மறுத்தது.

'தேவி ப்ரோவ ஸமயமிதே' அரிய பக்தி பாவம் தோய்ந்த கீர்த்தனை. அதன் அர்த்தமும் வாக்கேயக்காரரின் உணர்வும் இணையாத போது, கனம் காணாமல் போய்விடுகிறது. ஸ்யாமா சாஸ்திரியின் கதறல், நர்ஸரி ரைம் போலாகிவிட்டது!

ஒரு மிகச் சிறந்த வித்வானாவதற்கான திறமைகள் யாவும் காயத்ரியிடம் காணக் கிடைக்கின்றன. திறமையோடு முதிர்ச்சியும், உள்ளார்ந்த ஈடுபாடும் இணைகிறபோது, அது தகுதியாகப் பரிணமிக்கும். கே. காயத்ரி எலக்ட்ரானிக் தம்பூராவை அவையிலிருந்து வெளியேற்றிவிட்டு, பாரம்பர்ய தம்பூராவை சபாநாயகராக்கிக் கொண்டால், அதுவே நல்ல ஆரம்பமாக அமையும். ●


"நம்ம மந்திரி ரொம்ப முன்னெச்சரிக்கையான ஆளு..."

"எப்படிச் சொல்லுறே?"

"இல்லன்னா, அலுவலகத்துக்கு வெளியே 'வீடியோ காமிராவுக்கு அனுமதி இல்லை'ன்னு போர்டு வச்சிருப்பாரா!"

- அஜித்லால்





அரசியல் அதர்மம்!

பொடா சட்டத் திருத்தத்தை நாடாளுமன்றம் நிறைவேற்றிய அதே தினத்தில்தான், பொடா அரசியல் சாசன ரீதியாகச் செல்லுபடியாகும் என்று உச்சநீதிமன்றமும் தீர்ப்பளித்துள்ளது.

பொடா, அரசியல் நோக்கில் துஷ்பிரயோகம் ஆகாமலிருக்க மறு ஆய்வுக் கமிட்டி அமைத்த மத்திய அரசு, பொடா திருத்தச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றி, மறு ஆய்வுக் கமிட்டியின் அதிகாரங்களை அதிகப்படுத்தியும் உறுதிப்படுத்தியும் உள்ளது.

உச்சநீதிமன்றமோ, பொடாவின் அவசியத்தை வலியுறுத்தித் தீர்ப்பு வழங்கிய அதே நேரத்தில், அச்சட்டத்தின் கீழ் ஒருவரைக் கைது செய்து விசாரணை செய்யும் முன், அவரது நோக்கம் என்ன என்பது கவனிக்கப்பட வேண்டும் என எச்சரிக்கிறது. தடைசெய்யப்பட்ட பயங்கரவாத அமைப்புக்கு வாய் வார்த்தையாக ஆதரவு தெரிவிப்பது, பொடாவின்கீழ் குற்றமாகிவிடாது என்பதை மிகத் தெளிவாக்கி யிருக்கிறது உச்சநீதிமன்றம்.

பொடா மறு ஆய்வுக்குழுவின் அதிகாரங்களை கேள்விக்கு உட் படுத்திய தமிழக முதல்வரின் கட்சி, பொடா திருத்த மசோதாவை எதிர்த்து வாக்களித்தது ஆச்சர்யமல்ல... ஆனால் உச்சநீதிமன்றம் வெளியிட்டுள்ள கருத்துகளைக்கூட அவர் மதித்து நடந்து கொள்ளவில்லையெனில், அது கண்டனத்துக்குரியதாகும்.

பொடாவின் கீழ் கைதாகி ஓராண்டுக்கும் மேல் சிறையிலிருக்கும் வைகோவை, தமிழக அரசு விடுதலை செய்ய வேண்டும் என்று



கல்கி



2003 டிசம்பர் 28
சுபானு மார்கழி 13
மலர் : 62
இதழ் : 22

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



உச்சநீதிமன்றம் ஆணை பிறப்பிக்கவோ, தீர்ப்புச் சொல்லவோ இல்லை. பொடா நீதி மன்றம்தான் தொடர்ந்து வழக்கை நடத்த வேண்டும் என்று அது தெளிவுபடுத்திவிட்டது. ஆனால், அதே மூச்சில் அச்சட்டத்தின் இருபத்தோராவது பிரிவு குறித்து, விரிவாக விளக்கி, தெளிவுபடுத்தியிருக்கிறது :

தடைசெய்யப்பட்ட அமைப்புகளுக்கு அனுதாபம் தெரிவித்துப் பேசுவது, கூட்டம் போடுவது போன்ற நடவடிக்கைகளில் மட்டுமே குற்றம் காண முடியாது. இவை கருத்துச் சுதந்திரத்துக்கு உட்பட்ட உரிமைகள். ஆனால் இத்தகைய பேச்சும் கூட்டமும், வன்முறையைத் தூண்டுவதாகவோ, தீவிரவாத, பயங்கரவாத அமைப்புகளுக்கு நிதி திரட்டும் முயற்சியாகவோ இருந்தால், கிரிமினல் நோக்கம் உறுதிப்படும்.

பொடா 21வது பிரிவை எதிர்த்து உச்சநீதி மன்றத்திற்குச் சென்ற வைகோ, இதுபோன்ற கிரிமினல் நோக்கத்துடன் செயல்படவில்லை என்பது தெளிவு. ஆகவே, அவர் மீதுள்ள வழக்கை வாபஸ் பெற்று, அவரை உடனடியாக விடுதலை செய்வதுதான் தமிழக அரசுக்கும் முதல்வருக்கும் கௌரவம், பெருமை.


கைதாகி பல மாதங்களுக்குப் பின்னரும் வைகோ பேரில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படாமலே இருந்தது. பகிரங்கக் குற்றவாளியெனில், குற்றப் பத்திரிகை தாக்கலுக்கு இத்தனைக் காலம் பிடித்திருக்காது.

குற்றப்பத்திரிகை தாக்கலுக்குப் பிறகும் வழக்கு விரைவாக நடந்து முடியவில்லை.

நாடாளுமன்ற உறுப்பினர் - எதிர்க்கட்சிக்காரர் என்ற அடிப்படையில், அவர் பேரிலான வழக்கு விரைவாக, நியாயமாக நடைபெற தமிழக அரசு முனைப்புக் காட்டவில்லை.

இந்த அலட்சியப் போக்கானது, வைகோ கைது விவகாரத்தில் அரசியல் உள்நோக்கம் இருப்பதையே உணர்த்துகிறது.

தமிழக முதல்வர் இதை மறுப்பார். தமது அரசு சட்டப்படி நடந்து கொண்டிருக்கிறது என்று விளக்குவார். 'வைகோவை விடுதலை செய்ய வேண்டும் என்றோ, வழக்கை விரைவு படுத்த வேண்டும் என்றோ, உச்சநீதிமன்றம் கூறவில்லையே!' என்றுகூட அவர் வாதாடுவார்.



ஆனால் பொடா 21வது பிரிவுக்குத் தான் கொடுத்துள்ள விளக்கத்தை, தமிழ்நாடு பொடா நீதிமன்றம் கவனத்தில் கொண்டு செயல்படும் என, தான் நம்புவதாக உச்சநீதி மன்றம் தெரிவித்துள்ளது.

இதை முதல்வரும் அரசு வழக்குரைஞரும் நன்கு உணர வேண்டும்.

சட்டம் என்பது அரசு இயந்திரத்தின் கையில் வழங்கப்பட்டுள்ள நல்லாயுதம். அதனைப் பிரயோகம் செய்யலாம்; அல்லது துஷ்பிரயோகமும் செய்யலாம்.

ஜெயலலிதாவின் ஆட்சியில், மக்களின் எண்ணங்களையும், நடவடிக்கைகளையும், கருத்துகளையும் கட்டுப்படுத்துவதற்குச் சட்டங்கள் உபயோகமாவதை அடிக்கடி பார்க்கிறோம். எதிர்க்கட்சியினர், பத்திரிகைகளின் குரல்கள், சட்டத்தின் துணையுடன் ஒடுக்கப்படுகின்றன.

இதே ரீதியில்தான் பொடா சட்டம் வைகோ விஷயத்தில் பிரயோகிக்கப்பட்டிருக்கிறது.

சட்டத்தின் வார்த்தைகளை வரிக்கு வரி அர்த்தம் பண்ணிக்கொண்டு பிரயோகித்தால் அது சர்வாதிகாரம்;

ஒரு சட்டம் எதற்காக இயற்றப்பட்டது என்பதன் பின்னணியை உணர்ந்து, அதன் இறுதி நோக்கத்துக்கு பங்கம் விளைவிக்காமல், அதைப் பிரயோகிப்பது நீதி பரிபாலனம்.

அதிலும் எதிர்க்கட்சி உறுப்பினர் சம்பந்தப்பட்ட விவகாரத்தில், சட்டத்தின் வரிவடிவத்தைச் சாதகமாக்கிக் கொண்டு, ஒடுக்கு முறையைப் பிரயோகிப்பது அரசியல் அதர்மம்.

இனியேனும் அந்த அதர்மத்தைத் தொடரவிடாமல், ஜெயலலிதா, வைகோவின் விடுதலைக்கு வழி வகுக்க வேண்டும்.

வைகோவும், விடுதலைப் புலிகள் போன்ற சிக்கலான பிரச்னைகளில், உணர்ச்சி வசப்பட்டு மேடைகளில் முழங்காமல், முதிர்ந்த, பண்பட்ட அரசியல்வாதியாக எதிர்காலத்தில் இயங்க வேண்டும். ●



பரிசு மழை!

ஆஹா! ரூ.10,000 பரிசு!

போட்டிக்குப் போட்டி கூப்பன்களின் வரவு கூடிக்கிட்டே போவுதுங்க. உங்க ஆர்வத்துக்கும், அட்டகாசமான ஆதரவுக்கும் நன்றி! நன்றி!

இந்தப் போட்டிக்கான பரிசை வென்றவர்:

தி.ந. கேசவன்,
598, HB. 68, பாரதிதாசன் தெரு,
அசோக்நகர், இலாசுப்பேட்டை,
பாண்டிச்சேரி 605 008.

ஆறுதல் பரிசாக ரூ. 100 மதிப்புள்ள அமரர் கல்கியின் நூல்களைப் பரிசாக வென்றவர்கள்:

1) பி. கோபாலகிருஷ்ணன், சென்னை -8, 2) வி. தியாகராஜன், கோவை -1, 3) நா. கனகராஜ், குரும்பபாளையம், 4) கில்பர்ட் ஜோபர், பாண்டிச்சேரி - 8, 5) இரா. ஜெயலட்சுமி, தஞ்சை - 1, 6) ஜி. கண்ணன், போரூர், 7) ஜி. பொன்னம்மாள், நெல்லை -11, 8) எஸ். நெல்லையன், புதுக்கோட்டை- 1, 9) ஆர். சந்திரா, மதுரை - 20, 10) டி. ஹேமா, வில்லிவாக்கம், 11) பா. கார்த்திகா, சிவகங்கை, 12) லலிதா சுப்பிரமணியன், கோவை - 12, 13) வசந்தா நடராஜன், மும்பை - 71, 14) அருக்கியம்மாள், திருச்சி -14, 15) ஜி. கலாவதி, சர்க்கார்பதி, 16) ஜே. பாலகுமாரன், வேட்டைக்காரன் புதூர், 17) மூ. ஜரினா பேகம், தஞ்சை - 7, 18) எல். மீனாட்சி சுந்தரம், திருவண்ணாமலை, 19) கு.கு. குமரகுரு, பேயன் விளை, 20) எஸ்.எஸ். சிவகுமார், கும்பகோணம் - 1.

ஆஹா! 10,000
குவிஸ் போட்டி(3)க்கான விடைகள்:

1) பிரசித்தி பெற்ற மோனோலிசா ஓவியத்தை வரைந்தவர் **லியானார்டோ டாவின்ஸி**

2) 'உலகம் ஒரு நாடகமேடை, மனிதன் அதில் நடிகன்' என்ற பிரசித்தி பெற்ற வசனத்தைச் சொன்ன ஆங்கிலக் கவிஞர் **வில்லியம் ஷேக்ஸ்பியர்.**

3) டைனமைட்டைக் கண்டுபிடித்தவர் **ஆல்ஃபிரட் நோபல்.**

4) பங்களாதேஷில் 'பத்மா' என்று அழைக்கப்படும் இந்திய நதி **கங்கை.**

5) ஆங்கிலக் கால்வாயை 11 மணி நேரத்தில் நீந்திக் கடந்த தமிழகத்துச் சிறுவன் **குற்றாலீஸ்வரன்.**

6) அன்னை தெரசா **யுகோஸ்லாவியா (தற்போது மாஸிடோனா)** நாட்டில் பிறந்தவர்.

வாழ்த்துகள்

இருநூற்றில் ஒருவரா நீங்கள்...?



அழகான, அளவான, ஈகிள் டைரி ஒன்று இலவசமாகப் பெற வேண்டுமா?

இன்றே உங்கள் கல்கி சந்தாவை ஓராண்டுக் காலத்துக்குப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்;

அல்லது

உங்கள் நண்பருக்காக, உறவினருக்காக ஓராண்டுச் சந்தா செலுத்தி, டைரியை நீங்கள் இலவசமாகப் பெற்றுக் கொள்ளுங்கள்;

அல்லது

ஓராண்டுக் கல்கியுடன் டைரியையும் உங்கள் அபிமான நண்பருக்கோ, உறவினருக்கோ கிடைக்கச் செய்யுங்கள்.

ஓராண்டுச் சந்தா ரூ.330/- செலுத்தும் முதல்
இருநூறு பேருக்கு மட்டுமே, **ஈகிள் டைரி இலவசம்!**

முந்துங்கள்! உடனடியாக...!

கடைசித் தேதி : **10.01.2004**

இந்த அறிவிப்புக்குப் பிறகு அனுப்பப்படும் ஓராண்டுச் சந்தாக்களுக்கு மட்டுமே இந்தச் சலுகை. உங்கள் முழு விலாசம்; நண்பர், உறவினரின் விலாசம்; புதுப்பிப்பதாக இருந்தால் தற்போதைய சந்தா எண் முதலியன குறிப்பிட மறவாதீர்கள்.

சந்தாத் தொகையை டி.டி., எம்.ஓ., செக் மூலமாக அனுப்பலாம்.
(வெளியூர் செக் ஏற்கப்படமாட்டாது)

அனுப்ப வேண்டிய முகவரி:

சர்க்குலேஷன் மானேஜர்,
கல்கி,
கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097



ஞானத்தேன் துளிகள் - எஸ்.வி. ரமணன்

''ஆண்டவன் சற்றே அருகினில் வந்து, அனுபவம் என்பதே நான்தான் என்றான்'' - கவியரசர் சொல்லில் தீட்டிய வைரங்கள். கல்லில் தீட்டிய வைரம் என்றால் காசும், பணமும் வரும். சொல்லில் தீட்டியதற்கு என்ன வரும்? வந்திருக்கிறது. ஆண்டவன் அருகே இருப்பதாக உணர்ந்ததால், பார்த்தலும், கேட்டலும், பகிர்தலுமான தம் வாழ்க்கையை படிப்பதற்காய் வரைந்திருக்கிறார். வாசிக்கவும், சற்று யோசிக்கவும் சொல்லும் சுயவரலாறு.

சுடர்மணி பதிப்பகம், 19, பஜனை கோயில் தெரு, சூளைமேடு, சென்னை - 94, விலை. ரூ. 25/-

குறையொன்றுமில்லை - முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

சத்திய ஸ்வரூபி, உண்மையின் நேர் திருவடிவம், ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தியின் தேவி, சீதாப்பிராட்டி, ராஜரிஷி ஜனக புத்ரி, பொய் சொல்வாளா? சொல்ல மாட்டாள், சொல்லக் கூடாதுதான். ஆனால் சொல்லியிருக்கிறாளே! தனக்கு நன்றாய்த் தெரிந்த ஒரு விஷயத்தை, 'தெரியவே தெரியாது' என்று சாதித்து விட்டாளே! இது தருமா? முதலில் இது நிஜமா? நிஜமென்றால், ஏன், எதற்கு? - அதை... முக்கூரார் சொல்லிக் கேட்க வேண்டும். அறிவு கனிந்தால் ஞானம். ஞானம் கனிந்தால் பக்தி. அறிவு கனிய, பக்தி கைகூட, இது போன்ற மகான்களின் உரைகளைக் கேட்க வேண்டும், அல்லது படிக்க வேண்டும். 'கல்கி'யில் தொடராக வந்து பெரும் வரவேற்பைப் பெற்ற, பக்திச் சுவையில் சுவாரஸ்யமான நூல்.

வானதி பதிப்பகம், 23, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை -17, விலை ரூ. 70/-

வெல்வது உறுதி - இராமையா

வார்த்தைகளல்ல மனித வாழ்க்கை. அது வருடங்களைக் கடப்பது. வாய்ப்புக் கிடைத்தால் அதில் வானத்தை வளைக்கலாம், வான் நிலவையும் பிடிக்கலாம்: வாய்ப்புக்கு வழி, முன்னிலைப்படுத்திக் கொள்வதே. முன்னேறும் ரகசியம் அதுதான் - என்பதைக் கூறும் சுய முன்னேற்ற நூல்.

கண்ணதாசன் பதிப்பகம், 23. கண்ணதாசன் சாலை, தி. நகர், சென்னை - 17, விலை ரூ. 75/-

அர்த்தமுள்ள ஆசனங்கள் சொ. செல்வராசன்.

'ஏற்றியிறக்கி யிருகாலும் பூரிக்கும் காற்றைப் பிடிக்கும் கணக்கறிவார்க்கு கூற்றை உதைக்கும் குறியதுவாமே'. பிராணாயாமம் என்பது சுவாசத்தைப் பற்றிய அறிவியலே. உயிர்ச்சக்கரம் சுழல உதவுவது அது. அதற்குப் பயிற்சியளிப்பது யோகம். அதைப் பழகிவிட்டால் ஆரோக்கியமும், ஆயுளும் கூடும். யோகத்தின் வழிமுறைகளை எளிதாக, விளக்கும் நூல்.

அன்னை ரெய்க்கி பதிப்பகம், 13. அஜீஸ் நகர், அருப்புக்கோட்டை 626 101, விலை ரூ.50/-

- விஷ்வக்



ARTHRITIS ❋ மூட்டுவலி / CALCANEAL SPUR ❋ குதிகால்வலி

▼ குதிகால்களில் எலும்பு வளர்ந்து நடக்க முடியாமல் வலி. (Calcaneal Spur) ▼ கை, கால்களில் மூட்டு வீக்கமும், வலியும். ▼ கை, கால் விரல் மூட்டுகளில் வீக்கமும் வலியும். ▼ கழுத்து வலி (Cervical Spondylitis) ▼ நடுமுதுகின் கீழ்பகுதியில் வலி (Lumbar vertebra and Sacral Joint area) ▼ இடுப்பு எலும்பும் (Pelvic Bone) தொடை எலும்பு தலையும் (Femoral Head) சேருமிடம். ▼ குதிகால் இணைப்புகளில் வலி, முதலியவை பல ஆண்டுகளாக இருந்தாலும் ஆங்கில மருத்துவருடைய ஆலோசனையின்படி வித்தியாசமான இயற்கை வைத்திய முறையில், பக்க விளைவுகள் இல்லாமல் நலம்பெற செய்கின்றோம். இந்தியா மற்றும் வெளி நாடுகளில் இருந்தும் வியாதியஸ்தர்கள் வருகிறார்கள்.



மதிப்பிற்குரிய டைரக்டர் திரு.எஸ்.பி.நாயுடு அவர்களுக்கு,

நான் கழுத்துவலி, முதுகு வலிக்காக தங்களுடைய சென்டரில் சிகிச்சை எடுத்தேன். 20 நாள் சிகிச்சையில் 90 விழுக்காடு வலி குறைந்து விட்டது. தங்கள் டாக்டர்கள் கொடுத்த லேகியம் சாப்பிட்டு வருகிறேன். தங்கள் ஆஸ்பத்திரியில் பணிபுரியும் டாக்டர்களுக்கும், எல்லா நர்சுகளுக்கும், மேசியர்களுக்கும், பிசியோ தெரபிஸ்டுகளுக்கும், சமையல் டிபார்ட்மென்டில் உள்ளவர்களுக்கும் மற்றும் முன் ஆபீசில் உள்ள கவுன்சிலர்கள், அட்மினிஸ்டிரேடிவ் அதிகாரி, மற்றும் என்னை அன்புடன் கவனித்த அனைவருக்கும் எனது உளமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

இப்படிக்கு
N. குஞ்சிதம்,
118, காமராஜ் அவென்யூ, அடையாறு, சென்னை - 600 020

PARKINSONS DISEASE, ALZHEIMERS DISEASE

ஆகியவைகளுக்கு பக்கவிளைவுகள் இல்லாத சிறந்த மூலிகை மருந்து தரப்படும்.

CANCER - புற்றுநோய்

ஆரம்ப நிலையில் உள்ள புற்று நோய்க்கு இயற்கையான முறையில், சிறப்பான, பக்க விளைவுகளோ, வலியோ, அசௌகரியமோ இல்லாத வகையில் சிகிச்சை அளிக்கின்றோம். புற்று நோயாளிக்கான பிரத்யேக உணவு வழங்கப்படும். அத்துடன் பிசியோதெரபி, யோகா, பிராணவாயு சிகிச்சை மற்றும் இரத்த ஓட்டத்தை சீராக்கக் கூடிய இயற்கை முறை சிகிச்சை அளிக்கப்படும். ரேடியேஷன், கீமோதெரபி எடுத்துக் கொள்ளும் புற்று நோயால் மிகவும் பாதிப்படைந்துள்ளவர்களுக்கு அதன் பக்க விளைவுகளை குறைக்கும்படியான (உதாரணமாக : முடி உதிர்தல், இரத்த சோகை, வாய்ப் புண் போன்றவை) இயற்கை முறை சிகிச்சையும், கேன்சர் வியாதியஸ்தர்களுக்கு தேவையான பாதுகாப்பான உணவு வகைகளும் வழங்கப்படும்.

ASTHMA - ஆஸ்துமா

1. Dyspnea *(மூச்சுத் திணறல்)* **2. Respiratory difficulties** *(மேல்மூச்சு வாங்குதல்)* **3. Dry cough** *(வறட்டு இருமல்)* **4. Cough with sputum** *(சளியுடன் கூடிய இருமல்)* **5. Running Nose** *(மூக்கில் நீர் வழிதல்)* **6. Nasal Block** *(மூக்கடைப்பு)*

WEIGHT REDUCTION (உடல் பருமன்) for LADIES & GENTS

எங்களிடம் நாள்பட்ட இதர நோய்களுக்கும் ஆலோசனை கேட்கலாம்.

அடையார் இயற்கை வைத்திய மையம்

ADYAR NATURE CURE CENTER™ Regd. Hospital

No. 6, SECOND CROSS STREET, KASTURBHA NAGAR, ADYAR, CHENNAI - 20.
Phone:2441 3399, 2440 2470. Tele Fax: 044-2491 6650 (காந்திநகர் பஸ் டெர்மினெஸ் எதிரில்)
www.adyarnaturecure.com E-mail: adyarnaturecure@yahoo.com,

குறிப்பு: சாதா, A/c தங்கும் அறைகள் மற்றும் ஜெனரல் வார்டு, கலர் டி.வி., போன் வசதியுடன் கிடைக்கும். பிராமணர்களால் தயார் செய்யப்பட்ட சைவ உணவு வசதி மட்டும் உண்டு. முன்பதிவு அவசியம்.

வெற்றிடங்கள்



எப்போதாவது திடீர் ஞானோதயம் ஏற்பட்டு வீட்டை ஒட்டடை அடித்து சுத்தம் செய்வதுண்டு. அந்தச் சமயத்தில் வீடே அமளி துமளிப்படும். குறுக்கும் நெடுக்கும் ஓடுகிற வாரிசுகளுக்கு அர்ச்சனை கிடைக்கும். எல்லாம் முடியும் போது, போர் நிறுத்தம் செய்தது போல் அமைதி ஏற்படும்.

எங்கள் வீட்டில் ஒரு பரண் இருக்கிறது. இன்றைக்கு நகரத்தில் பரணுடன் ஒரு வீட்டைக் காண்பது மிகவும் அதிசயம்தான். பின்னால் தேவைப்படலாம் என்பதற்காகவும், தேவையில்லைதான், இருந்தாலும் ஓர் ஓரமாக இருக்கட்டுமே என்கிற எண்ணத்தாலும், சில பொருள்களுக்கு அடைக்கலம் தரும் இடம்தான் பரண்.

சிறு வயதில் பரண்மேல் அமர்ந்துதான் படிப்பேன்.

ஆரணி யுவராஜ்

''எங்கேடி சரவணனைக் காணோம்?'' என்று அம்மாவின் குரல் கீழே கேட்கும்.

'நீ தானே அவனை நம்ம குடும்பத்துலயே உசந்த படிப்பு படிக்கணும்னு சொல்வே. அதுதான் ரொம்ப உசந்த இடத்துல படிச்சுட்டு இருக்கான்'' என்று அக்கா மைதிலி மேலே சுட்டிக் காட்டுவாள்.

நான் தலையை வெளியே நீட்டி, ''என்னம்மா?'' என்று கேட்பேன்.

''வந்து காபியைக் குடிச்சுட்டுப் போடா'' என்பாள்.


நான் மேலே இருந்து பக்கவாட்டில் இருக்கும் சிறிய சுவர் மேடைக்கு வந்து, அங்கிருந்து கீழே குதிப்பேன்.

''டேய்! டேய்! பாவி... காலை உடைச்சுக்கப் போறேடா'' என்று பதறுவாள் அம்மா.

அவள் அப்படிப் பதற வேண்டும் என்பதற்காக குதிப்பேன்.

''அம்மா எனக்கு ஒண்ணும் ஆகாது. டேக் இட் ஈஸி'' என்பேன்.

''ஆமா. மனுஷங்க குதிச்சாதான் ஏதாவது ஆகும். குரங்குங்க எவ்வளவு உயரத்துல



இருந்து குதிச்சாலும் ஒண்ணுமாகாது'' என்பாள் மைதிலி.

"சுத்தம் செய்யறேன்னு சொல்லி பரண் மேலே ஏறிக்கிட்டு என்ன செய்யறீங்க? மலரும் நினைவுகளா?" என்று கீழே இருந்து என் சகி சுசிலாவின் குரல் ஒலித்தது.

"அம்மா தாயே, சுத்தம் செய்துட்டு தான் இருக்கேன். இதென்ன விளக்கு மாறா ஆட்டு வாலாட்டம்? ஏன் புதுசு வாங்கறதுக்கு என்னவாம்?'' என்று கேட்டேன்.

"கேட்பீங்களே? உப்பு, புளி தீர்ந்து போனாலே மாச நடுவுல உங்ககிட்டே கேட்டா, புலன் விசாரணை நடத்தறீங்க. இந்த லட்சணத்துல இதுக்கெல்லாம் பணம் கேட்க முடியுமா?"

"அதுக்காக இதை வெச்சு எப்படி வீட்டைப் பெருக்கறே? அது சரி, நீ பெருக்கினாதானே!"


"ஆமா, நான் பெருக்காம வேலைக்காரி இருக்கா பாருங்க. இவ்வளவு பெரிய வீட்டை பெருக்கறதுக்குள்ளே முட்டியே தேய்ஞ்சுடுது" என்றாள்.

''அம்மா, உங்க சண்டையை அப்புறம் வெச்சுக்கங்க. சீக்கிரம் சுத்தம் பண்ணுங்க. டீவி. பார்க்கணும்'' என்றான் பெரியவன்.

"அப்பா, என்னோட ராக்கெட் ஒண்ணு அங்கே விழுந்தது. இருக்கா பாருப்பா" என்று இளையவன் குரல் கொடுத்தான்.

அவனது காகித ராக்கெட்டை தேடிப் பிடித்து தூக்கி வீசினேன். ஒவ்வொரு பொருள்கள் மீதும் படிந்திருந்த தூசியைத் தட்டினேன். மரப்பெட்டியைத் திறந்தேன். உள்ளே இருந்த சிறு சிறு பாச்சைகள் அதன் நிம்மதியைக் கெடுத்ததற்கு சபித்தவாறு, நாலா திசையிலும் ஓடின.

பெட்டிக்குள் ஒரு கவர் மட்டும் இருந்தது. ஆங்காங்கே சிறுசிறு துளைகள். கவரை எடுத்தேன். உள்ளே சில பழைய பஞ்சாங்கங்கள், ஒரு சித்த வைத்தியப் புத்தகம், 'தோஷங்களும் பரிகாரங்





களும்' என்கிற புத்தகம். எல்லாமே அப்பாவுடையது. அத்துடன் ஒரு பெரிய கறுப்பு வெள்ளை புகைப் படம்.

புகைப்படத்தின் ஓரங்கள் செல்லரித்திருந்தன. அதில் தலைப்பாகை, கறுப்பு கோட்டுடன் தாத்தா, பக்கத்தில் கழுத்து நிறைய நகைகளுடன் பாட்டி, இருவரும் அமர்ந்திருக்கிறார்கள். பின்னால் அப்பா- அம்மா, பெரியப்பா - பெரியம்மா, சித்தப்பா - சித்தி, அத்தை-மாமா என்று வரிசையாக நின்றிருக்கிறார்கள். தாத்தா பாட்டியின் காலருகே ஆறேழு பொடிசுகள். அம்மாவின் இடுப்பில் கைக்குழந்தையாக மைதிலி அக்கா.

சிறு வயதில் சுவரில் மாட்டி இருந்த இந்த புகைப்படத்தில் ஒவ்வொருவரையும் சுட்டிக் காட்டி, அம்மா, யார் என்று கேட்பாள். சொல்லிக் கொண்டே வருவேன்.

"நான் எங்கேம்மா?" என்று கேட்பேன்.

"அப்ப நீ பிறக்கலைடா!"

"நான் பிறக்கறதுக் குள்ளே ஏம்மா எடுத்தீங்க?" என்று சிணுங்குவேன்.

இப்போதும் ஒரு குழந்தைத்தனமான ஏக்கம் மனத்தில் இருக்கிறது. அற்புதமான அந்தப் பொக்கிஷ நிமிஷத்தில் நான் இல்லாமல் போய் விட்டேனே என்கிற ஏக்கம். புகைப்படத்தைப் பத்திரப்படுத்தினேன்.

அப்பா நிறையச் சொல்லி இருக்கார். "என்னோட அப்பா, ரெண்டு சித்தப்பா எல்லோரும் இதே வீட்டுல தான் இருந்தாங்க. கூட்டுக் குடும்பமா எப்பவும் சந்தைக் கடை மாதிரியே இருக்கும். பொம்பிளைங்களுக்கு மத்தியில் அடிக்கடி சண்டையும் வரும். ஆனாலும் அப்பா வீட்டுல நுழைஞ்சதும் அமைதியாயிடு வாங்க. சண்டையும் சச்சரவும் இருந்தாலும் அதையெல்லாம் மீறி ஒரு பாசம் இருந்தது. வீட்டுக்குப் பெரியவங்க சொல்லுக்கு மரியாதை இருந்தது" என்பார்.

இதை அவர் சொல்லும் போது குரலில் ஒரு ஏக்கம் இருக்கும். அப்புறம் சித்தப்பா, பெரியப்பா எல்லோரும் தனித்தனியாகப் போய் விட்டார்கள்.

அடுத்த தலைமுறையில் அந்த நெருக்கம் தொலைந்து போனது. குல தெய்வம் கோயிலுக்குத் தனித்தனிக் குடும்பங்களாகச் செல்கிறோம். நாங்கள் ஒரு வாரம் சென்றால், பெரியப்பா மகன் இன்னொரு வாரம் செல்கிறான். யதேச்சையாக ஒரே சமயத்தில் கோயிலில் சந்தித்து விட்டால் ஒரு புன்னகை. சில நிமிடப் பேச்சு. அவ்வளவு தான். போகிற போக்கில் நந்தவனத்துக் காற்றை வாங்குவது போல் இருக்கிறது. அடுத்த தலைமுறைக்கு அதை வாங்க கூட நேரமிருக்காதோ என்பதை நினைக்கையில் பயமாக இருக்கிறது.

"**த**லை எல்லாம் ஒட்டடையா இருக்கு. போய் தலைக்குக் குளிங்க" என்றாள் சுசிலா.

குளித்து விட்டு வந்தவன், பீரோவைத் திறந்து வேறு ஆடைகளை எடுத்து அணிந்து கொண்டேன். ஓர் ஓரமாக இருந்த அந்த துணிப்பை கண்ணில்பட்டது. புகைப்பட ஆல்பங்கள் இருக்கிற பை. என்னுடைய திருமணம், பையனின் காது குத்தல், ஒரு முறை எங்கள் குடும்பமும், அக்கா குடும்பமும் சேர்ந்து சுற்றுலா சென்றபோது எடுத்த புகைப்படங்கள் இருக்கின்றன.

இப்போது மீண்டும் அவற்றைப் புரட்டிப் பார்க்க வேண்டும் என்கிற ஆசை வந்தது. பையுடன் சோபாவில் சென்று அமர்ந்தேன். முதலில் என் திருமண ஆல்பத்தை எடுத்துப் புரட்டினேன். ஒடிசலாக அப்போதைய ஸ்டைல் தலைமுடி, நீண்ட கிருதாவுடன் நான்.

"நரேன், இங்கே வாயேன். இது யாருன்னு தெரியுதா?" என்று கேட்டேன்.

பெரியவன் ஓடி வந்தான். கூடவே சின்னவனும். இருவரும் எட்டிப் பார்த்தார்கள்.

"இது தெரியாதா? நீதான்" என்றான்

நரேன்.

"இது யாரு?"

"அத்தை."

"என் கல்யாணத்தப்ப என்ன நடந்தது தெரியுமா? நான்.."

காதில் கூட வாங்கிக் கொள்ளாமல் விளையாடப் போய்விட்டார்கள்.

இப்போது உள்ள பொடிசுகள் ஆல்பத்தைப் புரட்டக் கூடத் தயாராக இல்லை. மனத்தில் நொந்து கொண்டு சுற்றுலா ஆல்பத்தை எடுத்துப் புரட்டியவன் திடுக்கிட்டேன். ஆங்காங்கே புகைப்படங்கள் இல்லாமல் வெற்றிடங்களாகக் காட்சியளித்தது.

"ஏய் சுசி... எங்கே இதுல இருந்த போட்டோக்களைக் காணோம்?"

"இதுக்கா இப்படிக் கத்தினீங்க? நான் என்னமோன்னு ஓடி வந்தேன்."

"கேட்டதுக்கு இன்னும் பதில் வரலை."

"போன முறை உங்க அக்கா வந்திருந்தப்ப, இருக்கிற போட்டோக்களை எல்லாம் எடுத்துகிட்டுப் போய்ட்டாங்க" என்றாள்.

"ஏன்?"

"இதென்ன கேள்வி? அவங்க ஃபேமிலி இருக்கிற போட்டோவை அவங்க எடுத்துக்கிட்டாங்க. அவங்களோட ஆல் பத்துல வெச்சுப்பாங்க" என்று சாதாரணமாகக் கூறிவிட்டு விலகினாள் சுசிலா.

நான் நீண்ட நேரம் அப்படியே அமர்ந்திருந்தேன். அந்த வெற்றிடங்களையே திரும்பத் திரும்ப பார்த்தேன்.

அடுத்த நாள் மாலை அலுவலகம் முடிந்து வந்தபோது கவனமாக அதை எடுத்துக் கொண்டு வீட்டிற்குள் நுழைந்தேன்.

"என்னப்பா இது?" என்று கேட்டான் நரேன்.

"சொல்றேன்டா" என்றவன், மேலே சுற்றி இருந்த செய்தி தாளை நீக்கினேன். தாத்தா, பாட்டி எல்லோரும் இருக்கிற அந்த புகைப்படம். கண்ணாடி போடப்பட்டு புதிதாக ஜொலித்தது.

நீண்ட ஆண்டுகளாக சும்மாவே இருந்த ஆணியில் அதை மாட்டி சற்று தள்ளிச் சென்று பார்த்து ரசித்தேன்.

"இதை எதுக்குங்க திடீர்னு இப்பக் கொண்டு வந்து மாட்டி இருக்கீங்க?" என்று கேட்டாள் சுசிலா.

"போட்டோவாவது இருக்கட்டுமே" என்றேன்.

◆◆◆◆◆◆◆



"உன் டேபிள் மேல முத்திரை குத்தியிருக்கே... ஏன்?"

"மாசம் ஐயாயிரத்துக்கு மேல லஞ்சம் வாங்கறேன்னு மானேஜர் குத்திட்டுப் போயிருக்கார்!"

- அம்பை தேவா



"'நகைச்சுவை செம்மல்'ங்கற பட்டத்தை தலைவர் எப்போ வாங்கினாரு?"

"அதுவா, அடிக்கடி அவர் விடற அறிக்கைகளுக்காக, எதிர்க்கட்சி ஆளுங்க தந்த பட்டமாம்!"

- யமுனா ரங்கநாதன்



- ஆர்.சி. முத்துக்கண்ணு.

தியாவுக்கு றெக்கை முளைக்குமா?

'குறும்பு'க்குப் பிறகு ரசிகர்களின் 'ட்ரீம்ஸ்' (தனுஷ் ஹீரோவாமே!) முழுக்க தியா!

தியா என்கிற இந்த தியா ஷர்மாவின் குறும்புக்கே விழுந்தவர்கள், அவர் ட்ரீம்ஸில் வந்தால் என்ன ஆகப் போகிறார்களோ தெரியவில்லை.

"'குறும்பு' வெற்றிகரமாக எத்தனை மணி நேரம்?" என்று கேட்டால் சிரிக்காமல் கோபப்படுகிறார். "படம் பெரிய சக்ஸஸ் இல்லை. ஆனால், சக்ஸஸ் தெரியுமா?" என்று சமாளிக்கிறார்.

உடலமைப்பில், முக அமைப்பில் மெழுகுப் பொம்மை. சிரிக்கும்போது உணர்ச்சிகள் முகத்தில் கூடி வந்து உயிரூட்டுகின்றன. தமிழ் சினிமாவை ஒரு கலக்குக் கலக்காமல் விட மாட்டேன் என்று சபதம் எடுத்திருக்கிற தியாவை நாம் மென்மையாகக் கலக்கினோம்.



எத்தனை மொழிகள் தப்புத் தப்பா பேசுவீங்க?

ஐந்து மொழிகள் தப்பு இல்லாமப் பேசுவேன். தமிழ், தெலுங்கு, ஹிந்தி, ஆங்கிலம், மலையாளம். எல்லாமே இலேசா எழுதக் கூட வரும். ஆனா மலையாளத்தை மட்டும் எழுதிப் பழகலை. வளைஞ்சு வளைஞ்சு இருக்கிற அந்த எழுத்தைப் பார்த்து கையும் வளைஞ்சுப் போயிடுச்சுன்னா?

எந்த விளையாட்டைத் தப்புத் தப்பா ஆடுவீங்க?

கார்ட்ஸ். ராஜாவையும், ராணியையும் கூட தப்புத் தப்பா சேர்ப்பேன்னா பார்த்துக்கோங்களேன். எப்படின்னு ஒரு பத்து நிமிஷம் சொல்லிக் கொடுக்கறீங்களா?

(ஸாரி... மொக்கராகக்குக் கேட்க மட்டுந்தான் தெரியும்.)

தியாவை தியாவே திட்டணும்னா என்ன சொல்லித் திட்டுவீங்க?

ஸ்டுபிட்! என்ன பண்ணச் சொல்றீங்க? ஞாபகமறதி அதிகம். எதையாவது மறந்துட்டா இப்படித்தான் திட்டுவேன். பாருங்களேன்... பல் விளக்கணும்னே இப்பத்தான் ஞாபகம் வருது. ஒரு பத்து நிமிஷம் வெயிட் பண்றீங்களா?

ஒரே ஒருநாள் நீங்க இன்னொரு ஆளா மாறணும்னு வச்சுக்கோங்க. யாராக மாறணும்னு ஆசைப்படுவீங்க?

வேற யாரு? முதல்வர் ஜெயலலிதா மேடம் மாதிரி. எவ்வளவு எதிர்ப்பு வந்தாலும் தைரியமா நின்னு ஜெயிச்சு வர்றாங்களே... அந்தத் தைரியம் ரொம்பப் பிடிக்கும்.

(அந்த ஒரு நாள் மொக்கராகவுக்கு சம்மன் வரலாம்!)

எவ்வளவு சகிப்புத்தன்மை உள்ள ஆளும் சாப்பிட முடியாதபடி சமைக்கச் சொன்னா எதைச் சமைப்பீங்க?

ஸாரிடா... எல்லாத்தையும் நல்லா சமைக்கக் கத்துக்கிட்டேனே...

கங்கையில போயி குளிச்சுட்டு ஒரு விஷயத்தைத் தலைமுழுகிடணும்னு சொன்னா எதை விடுவீங்க?

உருளைக்கிழங்கை. கன்னாபின்னான்னு





உடம்பை ஏத்துதாமே! ஆனாலும் என்னு தெரியலை. ஒரு நாள் விட்டா, மறுநாள் கொண்டான்னு கேக்குது நாக்கு.

இந்தியாவுல உள்ள ஏதாவது ஓர் இடத்தை, சென்னையில கொண்டு வந்து வைக்கலாம்னு இருந்தா எதை வைப்பீங்க?

மூணாறு. நல்ல 'ஜில்' இடம். ஆனா இங்க இருக்கிற பொல்யூஷனில் அது கெட்டுடுமேங்கற பயமும் இருக்கு.

வீட்ல பயங்கர ஸ்டிரிக்ட். நிறைய விதிகள். ஏதாவது ஒரு விதியைத் தளர்த்தணும்னு நினைக்கிறாங்க. நீங்க எதைத் தளர்த்தணும்னு கேட்பீங்க?

மாலை ஏழு மணிக்கு மேல வீட்டை விட்டு வெளியே போகக் கூடாதுங்கறாங்க. ஏழு மணிக்கு மேலேதான் ப்ரண்ட்ஸ்களையே பார்க்க முடியும். அந்த ஒண்ணை மட்டும் 'கட்' பண்ணிட்டா, நியாவுக்கு றெக்கை முளைச்சுக்குமே... அப்பாகிட்ட கொஞ்சம், செபாரிசு பண்ண முடியுமா?

உங்க ஃபிரண்ட்ஸ் பேசறதுல எவ்வளவு உண்மை இருக்குன்னு நினைக்கிறீங்க?

அவங்க உண்மையைப் பொய் மாதிரியும் பொய்யை உண்மை மாதிரியும் பேசறதால, பர்சன்டேஜ் கணக்குப் போட முடியலைப்பா.

ஒரு ஹாலிடே ஸ்பாட். ரகசியமா ஒருத்தரை அங்க அழைச்சிட்டுப் போக அனுமதி. யாரை அழைச்சுட்டுப் போவீங்க?

ரஜினிகாந்த். ஆனா அவர் சம்மதிப்பாரா?

ஒரு படம்தான். சக்ஸஸ் ஆனா ஃபீல்டுல தொடரணும். ஃப்ளாப் ஆயிட்டா ஃபீல்டை விட்டே போயிடணும்னு ஒரு போட்டி. எந்த ஹீரோவைத் தேர்ந்தெடுப்பீங்க?

கதைதான் ஹீரோ. அதைத்தான் தேர்ந்தெடுப்பேன்.

சைக்கிள், பைக், கார், இல்லாம வேறொரு வாகனம் ஓட்டச் சொல்றாங்க... எதை ஓட்டுவீங்க?

மாட்டு வண்டியை. ஆனா காளை மாடுகளைக் கண்டா நான் மிரண்டுரு வேன். (மாடுகள் எப்படி?)


சரி, உடனடியா ஒருத்தரை அடிக்கலாம்னா, யாரைத் தேர்ந்தெடுப்பீங்க?

எம்.ஆரை!

எம்.ஆர். என்பது மொக்கராசுவின் சுருக்கம் என்பதை லேட்டாகப் புரிந்து கொண்ட குழல் விளக்கு (ட்யூப் லைட்) ஆசாமியான நான் எஸ்கேப் ஆனது துண்டைக் காணோம் துணியைக் காணோம் கதை!


- மொக்கராசு

படிக்கும் பழக்கமே அருகி வரும் இக்காலத்தில் ஐம்பது ஆண்டுகளாக நூல் நிலையம் ஒன்றை நடத்தி வருவது, அதுவும் மகாத்மா காந்தியின் பெயரால்



• கு. மகாலிங்கம், 'பாலம்' கல்யாண சுந்தரம்

நூல் காதலர்!




• சாந்தி கண்ணதாசனுடன் நூலக அன்பர்கள்

திறம்பட நிர்வகித்து வருவது இலேசுப்பட்ட விஷயமல்ல.

முதன்முதலாக ஒரு மரப்பெட்டியில் வைத்து ஆரம்பிக்கப்பட்ட மகாத்மா காந்தி நூல் நிலையத்தை நிர்வகித்து வரும் கு. மகாலிங்கம், மெத்தப் படித்தவரல்ல.

நெசவாளர் குடும்பத்தைச் சேர்ந்தவரான மகாலிங்கம், அடிப்படையில் தையற்கலைஞர். தாம் படிக்காவிட்டாலும் பிறராவது நன்கு படிக்க வேண்டும் என்ற தீவிர எண்ணத்தில் இருந்தவருக்கு, மகாத்மா காந்தியின் சென்னை வருகை தூண்டுதலாக இருந்தது.



தென்சென்னை சிறப்புப் பக்கம்

ஆரம்பக் காலங்களில் நூல் நிலையத்துக்கு நூல்களைச் சேகரிப்பதற்காக மயிலாப்பூர், திருவல்லிக்கேணி என பல இடங்களுக்கும் நடந்தே சென்று வருவாராம்.

இவரது சேவையைக் கவனித்த பொதுமக்களில் பலர், நாளடைவில் நிறைய நூல்களைத் தந்து உதவியிருக்கிறார்கள்.

"இங்குள்ள நூல்கள் நல்ல மனம் படைத்த பல வாசக அன்பர்கள் தந்து உதவியவை தான்" என நன்றியுடன் சொல்லும் மகாலிங்கம், யார் நூலை அன்பளிப்பாகத் தந்தாலும் அவரது பெயருடன் அன்பளிப்பு என புத்தகத்திலேயே எழுதுவதுடன், நூல் நிலையப் பதிவேட்டிலும் பதிவு செய்து விடுகிறார்.

காமராஜர், ராஜாஜி, ம.பொ.சி, எம்.கே. தியாகராஜ பாகவதர், சாண்டியல்யன், கண்ணதாசன், அகிலன், வானம்பாடி, ரசம், வல்லிக்கண்ணன், பரலி. சு. நெல்லையப்பர், தென்கச்சி கோ. சுவாமிநாதன் என பல்வேறு பிரமுகர்கள் இந்த நூலகத்துக்கு வருகை புரிந்துள்ளனர்.

சென்னை, சைதாப்பேட்டை காரணீஸ்வர்கோயில் தெருவில் வாடகை இடமொன்றில், அற்புதமான இந்தச் சேவையைச் செய்து வரும் மகாலிங்கம் இன்னமும் தமது வயிற்றுப்பாட்டுக்கு நம்பியிருப்பது தையல் மிஷினைத்தான்.

- சைதை முரளி

ALOHA™

MENTAL ARITHMETIC

(ABACUS LEARNING OF HIGHER ARITHMETIC)

AUSTRALIA ▪ CHINA ▪ INDIA ▪ INDONESIA ▪ MALAYSIA ▪ OMAN ▪ PHLIPINES ▪ SINGAPORE ▪ THAILAND



இந்த

அலோஹா

பிள்ளைகளில் உங்கள் பிள்ளைகளும் ஒருவர் என்றால் அவர்கள் எதிர்காலம் சிறப்பானதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

11 ஆண்டுகளில், 9 நாடுகளில் 2500 மையங்களில் 25 லட்சம் பிள்ளைகளிடம்

நிரூபிக்கப்பட்ட உண்மை இது

அலோஹாவின்... சிறப்பான பயிற்சிகள் உங்கள் பிள்ளைகளின் கணித அற்றலை சிறப்பானதாக மாற்றுவது மட்டுமின்றி அவர்கள் மனதினை ஒருமுகப்படுத்தி மற்ற பாடங்களிலும் சிறந்த விளங்க செய்கிறது.

3 மாதத்திலேயே பலனை அறியலாம் | **வாரத்தில் 2 மணி நேர பயிற்சி**


இதோ ஒரு சான்று...

இந்த விடையை உடனே சொல்ல முடியுமா?

6283 + 24 - 13 x 17 = ?

123 + 456 + 13 - 48 + 534 = ?

ஆனால் உங்கள் குழந்தைகளை மனக்கணக்காலேயே குறைந்த வினாடியில் இதன் விடையை சொல்ல வைக்க முடியும்



5 - 13 வயது குழந்தைகளின்

மூளையின் முழுத்திறன் வளர்ச்சிக்கானது

தனி உரிமை கிளை (Franchisee) ஆரம்பிக்க தொடர்பு கொள்ளவும்

ALOHA MENTAL ARITHMETIC INDIA

(A Division of KK ACADEMY (P) LTD)

32, 1st Main Road, R.A.Puram, Chennai - 600 028

Phone: 55682407, 55682408 Fax: 52066908

E - mail: Info@alohaindia.com   Web: www.alohaindia.com

அபாகஸ் என்றாலே அலோஹா தான்

நிவேதனா ஸ்கூட்டியை அங்கேயே விட்டு விட்டு பரபர வென்று படிகளில் ஏறினாள்.

கதம்பமான குரல்கள்.

"ஐஸ் பெட்டிக்கு சொல்லியாச்சா?"

"அய்யர் எங்கேப்பா?"

"பெசன்ட் நகர் போயிடலாம். அங்கே தான் கரன்ட்ல எரிப்பாங்க. ஒண்ணரை மணி நேரத்துல பானைல மொத்தத்தையும் போட்டுக் கொடுத்துருவாங்க..."

வாசலை அடைத்து நின்றவர்கள் சற்று வழி பண்ணிக் கொடுத்தார்கள். உள்ளே பாதம் பதித்ததும், ராஜ்குமாரின் அம்மா கலங்கிய கண்களுடன் எதிர்ப்பட்டாள்.

"ஒரு நிமிஷம் அசந்துட்டேன், நிவேதனா, என் பிள்ளையைப் பறி கொடுத்திட்டேன்..." என்று வீறிட்டு அழுதாள்.

இப்பொழுது என்ன செய்ய வேண்டும்? தோளை அணைத்து ஆறுதல் சொல்ல வேண்டுமா? சேர்ந்து கண்ணீர் காட்ட வேண்டுமா? அவளுக்குப் பழக்கமே யில்லாத சூழ்நிலை. பார்வையை விலக்கினாள்.

தரையில் அவன் மல்லாக்கப் படுக்க வைக்கப்பட்டிருந்தான். சிவப்பாகி விட்ட வெள்ளைத் துணிகளால் உடலின் பெரும்பகுதி சுற்றப்பட்டு...

நிவேதனாவுக்குத் தலையைச் சுற்றியது. ஆனால் படுக்க வைக்கப்பட்டிருந்தவன் குள்ளமாக அல்லவா இருக்கிறான்?

"வா, நிவேதனா" நெருக்கத்தில் உலர்ந்த குரல் கேட்டது. மின்னலாய்த் திரும்பினாள்.

கம்பீரமெல்லாம் தொலைந்து ராஜ்குமார் ஒடுங்கி நின்றான்.

அவனை முழுசாகப் பார்த்ததும் நெஞ்சுக் கூட்டுக்குள் குப்பென்று ஒரு வெப்பம்.

"தினாவா?" என்றாள், குரல் உதற.

"படி இறங்கி ஓடிட்டானாம். அம்மாவால அவன் வேகத்துல துரத்த முடியல... ரோடுக்குக் குறுக்கே பாய்ஞ்சுருக்கான். தண்ணி லாரில மாட்டிக்கிட்டான்..."

கீழே கிடந்தவனை ஏக்கத்துடன் பார்த்தான். கண்கள் சிவந்திருந்தன.

"நான் ஆரம்பிச்சது, என் தம்பியோட முடிஞ்சது."

சவுக்கு நுனியால் தீண்டும் வார்த்தைகள்.

யாரோ தோளைத் தொட்டு அவளைத் திருப்ப, நிவேதனா கைப்பையை அணைத்த படி அங்கிருந்து அவசரமாக விலகினாள்.

நிவேதனா நாற்காலியில் ஒடுங்கியிருந்தாள்.

பிடரியைப் பிடித்து அடிக்கப் போனால், தம்பியை இழந்து பரிதாபம் ஈட்டி விட்டானே! அவனை கண்ணுக்குக் கண் பார்த்ததும் எனக்குள் ஏன் உதிர்ந்து போனேன்?

ஏம்மா இப்படி பலவீனமானேன்? டைரி நோட்டை எடுத்து வைத்துக் கேட்டாள்.

இல்லை. இது பொய் அம்மா.

வீசி எறிந்தாள்.

அது குப்புறக் கிடந்தபோது மனம் தாளாமல் பாய்ந்து ஓடி, எடுத்து நெஞ்சோடு அணைத்தாள்.

நிவி, புலி மாதிரி சுவாரசியமா இருந்தே. இப்ப அவுத்து விட்டாக்கூட ஓடத் தெரியாத பசுக்குட்டி போல ஆயிட்டே. இந்தக் கேரக்டர்ல பவரே இல்லடா...

வேண்டாம். இந்தப் புதிய பாத்திரம் வேண்டாம். பழைய நிவியாக மாறு.

டைரியையும் புகைப்படங்களையும் அள்ளிக் குப்பைக் கூடையில் போட்டாள். கூந்தலைக் கலைத்துக் கொண்டாள்.

இப்போது பார்கள் திறந்திருக்குமா?

ஸ்கூட்டியை உயிர்ப்பித்த நேரம் மனம் மாறினாள்.

வண்டி திசை மாறியது. இசைக் குழு

நான் வேண்டுமா? 11



வினரின் பயிற்சிக் கூடத்துக்கு விரைந்தது.

அவன் சென்ற நேரம் கிபோர்டில் லாரன்ஸ், தபேலாவில் இளங்கோ இருந் தார்கள். அவனைப் பார்த்ததும் ஏதோ வொரு செயலற்றத்தனம் விலகி விட்டது போல் வெளிச்சமானார்கள்.

லாரன்ஸ் தன் ஏரான முடியை அள்ளிக் குடுமியாகக் கட்டிக் கொண்டான். இளங் கோவின் முகத்தில்



கண்களும், பற்களும் மட்டுமே வெண்மை. அவற்றால் புன்னகைத்தான். பாடல் நோட்டுப் புத்தகங்களை ஆசையாக எடுத்து வைத்தான்.

'முதல் பயிற்சியின் நான்கு வரிகளை அவன் பாடுவதற்குள், செல்ஃபோன் அழைத்தது.

ரவி.

"நிவி, நைட் ஏர் இந்தியால கன்ஃபர்ம் ஆயிருச்சு... மூணு மணி நேரமிருக்கு... தயாராயிரு. பீச்சுக்குப் போறோம்."

"வராதே. எனக்கு மலேரியா."

"நிவி!" அதிர்ந்த குரல் வந்தது அவனிட மிருந்து. "டாக்டர்கிட்ட போலாமா?"

"வேணாம். எனக்கு மெட்ராஸ் ஐ. பார்த்தா உனக்கும் தொத்திக்கும். அப்புறம் வேலைல சேர முடியாது."

"நிவி, நீ பொய் சொல்றே"

"பான் வாயேஜ், ரவி."

சற்று நேரம் குரலற்று இருந் தான்.

"பாம்பே வர மாட்டியா?" என்றான், ஏக்கத்துடன்.

"வருவேன். புரு ஷனோட ஹனி மூனுக்கு."

"யார் அவன்?"

"இன்விடேஷன் வரும். பார்த்துத் தெரிஞ்சுக்கோ."

உறுதியுடன் செல்ஃபோனை அணைத்து விட்டாள்.

"ஸாரி, ராங் நம்பர்" என்றாள், அவர் களிடம்.

அவர்களைப் பற்றித் தெரியும். அந்து

சுபா

மீறிப் பேசக் கூட மாட்டார்கள்.

அடுத்த இரண்டு மணி நேரங்கள் அவள் குரலும், அவர்கள் வாத்தியங்களும் இழைந்தன. நேரம் நழுவியதே தெரியவில்லை. நெஞ்செல்லாம் நிறைந்து போனது. இடையில் அவர்களுக்கு வந்த காகிதப் பொட்டலங்களிலிருந்தே அவளும் நைந்த பூரிகளைச் சாப்பிட்டாள்.

"உங்க குரல்ல ஒரு மின்சாரம் இருக்கு" என்றான், லாரன்ஸ்.

"தேங்க்ஸ்."

"ஒரு சி.டி. போட்டுக் கொடுங்க. எனக்குத் தெரிஞ்ச மியூசிக் டைரக்டர்கிட்ட கொடுக்கிறேன்..." என்றான், இளங்கோ.

தலை அசைத்து பதிலில்லாமல் சிரித்து விட்டுப் புறப்பட்டாள்.

செல்ஃபோனை இயக்கியதும், ரவியிடமிருந்து வரிசையாக மெஸேஜ்கள்.

உன் வீட்டு வாசலில் கிடக்கிறேன். எங்கே இருக்கிறாய்?

உடனே பார்க்க வேண்டும்.

ஃபோனிலாவது பேசு.

விமானம் கிளம்பப் போகிறது. விடை கொடு.

கடைசியாக அபத்தமான ஆபாச ஜோக் ஒன்றை அனுப்பி, 'தினம் ஒன்று அனுப்புகிறேன்' என்று குறிப்பு வேறு.

முட்டாள்!

மாலை இருந்த களைப்பெல்லாம் நீங்கி, வாழ்க்கையில் புது ஆர்வம் வந்திருந்தது. வீட்டுக்குள் நுழைந்தவுடன், குப்பைத் தொட்டியிலிருந்து டைரியையும், புகைப் படங்களையும் எடுத்தாள். துணி கொண்டு துடைத்தாள். "ஸாரிம்மா" என்று நூறு முத்தங்கள் கொடுத்தாள்.

கட்டிலில் குப்புறப் படுத்து ராஜ்குமாரின் எண்ணை டயல் செய்தாள்.

"என்னால அந்தக் காட்சியைத் தாங்க முடியல. அதான் கிளம்பிட்டேன். தப்பா நெனைச்சுக்காத" என்றாள்.

"இல்ல" என்றான்.

"உன்கிட்ட பேசணுமே, ராஜ், எப்ப முடியும்?"

"அம்மா மயக்கத்துலயே இருக்காங்க. ரெண்டு நாள் தா."

காலத்திற்கு இப்படி ஒரு சக்தி இருக்கிறதா? இரண்டு நாட்களில் கோபத்தின் செல்சியஸ் குறைந்துவிட்டது. ஆனாலும், ராஜ்குமாரிடம் கேட்கக் கேள்விகள் இருந்தன.

அவளைப் பார்த்ததும், ராஜ்குமாரின் அம்மா கதவுகளை அகலமாகத் திறந்தாள்.

"வாம்மா" அவளிடம் கூடுதலானதொரு அமைதி தெரிந்தது.

ஆணிகளிலிருந்து தெய்வங்கள் கழற்றப் பட்டிருந்தன. கண்ணாடி மோதாமல் ஒன்றன் மீது ஒன்று வைத்து கோணித் துணியில் சுருட்டப்பட்டிருந்தன.

பீரோவிலிருந்து துணிகளை எடுத்து மூட்டை கட்டிக் கொண்டிருந்த ராஜ்குமார் மென்மையாகப் புன்னகை செய்தான்.

"தினாவுக்காகத்தான் இங்க ஒதுக்குப்புறமா வீடு எடுத்திருந்தோம். இன்னும் ரெண்டு நாள்ல வீடு மாறிடுவோம்."

எழுந்து வந்தான்.

"என் ரூமுக்குப் போயிடலாமா?"

அந்த மாற்றம் அவளுக்குத் தேவையாக இருந்தது.

அவன் அறைக்குள் நுழைந்ததும், அந்த டைரி நோட்டை எடுத்து நடுவில் வைத்தாள்.

காட்டுப் பிரியத்துக்கு ஜே!

✉ அழகு கொஞ்சும் நளினமான தமிழ்ச் சொற்களை எழிலாகக் கோத்து தமிழ் விருந்து படைத்துவிட்டார் நா. முத்துக்குமார்.

மதுரை,
எஸ். சீனிவாசன்.



✉ நா. முத்துக்குமார் எழுத்தில் கிராமத்தின் தாக்கமே அதிகமாகக் காணப்பட்டது. கிராமத்திலிருந்து குடி பெயர்ந்தவர்களின் உணர்ச்சிகளைப் பிரதிபலித்தது தொடர். 'சுவர்க்கம், நரகம், மாநரகம்' என்ற தலைப்பு பொருத்தமாயிருக்குமோ என்று தோன்றுகிறது.

திருநெல்வேலி,
பாரத்வாஜன்

✉ நெல், மஞ்சள் வாசத்துடன் கிராமத்தில் வளர்ந்து, மாந(ர)கரத்தில் வாழ்க்கையைத் தொலைத்துக் கொண்டிருக்கும் எனக்கு சிலிர்க்க வைக்கும் அனுபவம் தந்தது.
சென்னை - 61, ஆர். நாகராஜன்

✉ தெளிவான நடை, தேர்ந்தெடுத்த சொற்கள் என, எங்களைப் பரவசப்படுத்திய இத் தொடரை மேலும் நீட்டித்திருக்கலாம். கவிஞர் நா. முத்துக்குமார் சினிமாவுக்கு முழுமையாக சுவீகாரம் ஆகிவிடாமல், இது போன்ற நல்ல பல இலக்கியங்களைப் படைக்க வேண்டும்.
புதுக்கோட்டை, மு.மு. அப்துல்லா

✉ வித்தியாசமான சூழலில் விதம் விதமான மனம் மற்றும் மணத்துடன் மனித நேயம் மிளிர காட்டுப் பிரியத்துடன் வலம் வந்த தொடருக்கு ஜே! ஜே!
திருநெல்வேலி-11, ராதா ராமஸ்வாமி

ராஜ்குமார் தளர்ந்து நாற்காலியில் அமர்ந்தான்.

"ஏன் எங்கிட்ட பொய் சொன்னே, ராஜ் குமார்? இதானே உன் கேள்வி?"

"ஏன் எங்கிட்ட பொய் சொன்னே?"

"பேப்பர் கட்டிங் காட்டினேனே, அது பொய்யில்ல... இந்த டைரி மட்டும்தான் பொய்."

"இது யார் எழுதினது?"

"நான் சொல்லச் சொல்ல எங்கம்மா."

"ஏன்?"

"நிறுத்தி நிதானமா சொல்லணும்னு நெனைச்சிருந்தேன். நீ கண்டு பிடிக்கணும் கறதுக்காகத்தான் சின்னக் குன்று கோயில் பத்தி எழுதியிருந்தேன்..."

கைகளைத் தேய்த்துக் கொண்டு அவள் முகம் பார்க்காமல் தொடர்ந்தான்.

"உன்னைத் தேடிக் கண்டுபிடிச்சப்ப, நீ எங்கே தெரியுமா இருந்தே?"

"பார்லயா?"

"ஆமா. கூட இன்னொரு பொண்ணு."

"கம்பெனி கொடுக்க நிறைய தோழிங்க இருக்காங்க."

"அவங்களுக்கும் உனக்கும் ஒரு வித்தியாசம் இருந்தது. உன்னைப் பார்த்துக்க ஆளில்லை. சும்மா சேர்த்துக்க ஆசைப்பட்டவங்களுக்கு நல்ல எண்ணம் இல்ல. நீ எதையோ தேடி எங்கேயோ போயிட்டிருந்தே. எல்லாமே என்னால தானேன்னு கவலை தின்னுது. காலேஜ் நாள்ல நீ நல்ல பாடகியா மேடை ஏறியிருக்கிற விஷயம் தெரிஞ்சதும், உன்னை அந்தத் திசையில திருப்பணும்னு ஒரு வெறி..."

"அதனால நான் பாடகியா ஆகணும்னு எங்கம்மா கருவிலேயே ஆசைப்பட்ட மாதிரி எழுதினே?"

"வேற யார் சொன்னா நீ கேப்பே?"

"அம்மா எழுதின டைரியாவே நினைச்சு சந்தோஷப்பட்டிருப்பேனே! ஏன் பொய் கலந்து எழுதினே?"

"அறியாத வயசுல செஞ்ச தப்பை நெனைச்சு அனுபவிச்ச தண்டனையே போதும்... அறிஞ்சு இன்னொரு தப்பைச் செய்ய மனசு இடம் கொடுக்கல."

"டைரி பொய்னு தெரிஞ்சதும் நான் பழைய நிவேதனாவா மாறிட்டா?"

"யாருக்காகவும் உன்னை ரொம்ப நாள் மாத்திக்கறவ இல்ல நீ. உனக்கே அதுக் குள்ள இசை பிடிச்சுப் போயிட்டா மாற மாட்டே. உன்னோட பாட்டை சி.டியாப் பண்ணி உன் பர்மிஷன் இல்லாமலே எங்கம்மாவ விட்டு மியூசிக் டைரக்டர் வீட்டுல கொடுத்ததும் அதுக்காகத்தான்."

தலை குனிந்திருந்தான்.

"கொஞ்சம் அத்து மீறிட்டேன்னு புரியுது. மன்னிச்சிரு."

சற்று நேரம் மௌனமாயிருந்தாள். கைகளைக் கூப்பினாள்.

"நல்லெண்ணத்துல நீ செஞ்சதுக்கெல் லாம் நன்றி."

எழுந்தாள். உரிமையுடன் இழுப்பறையைத் திறந்து விபத்து பற்றி செய்தி வந்த அந்தப் பழைய தினசரியை எடுத்தாள்.

"என் விஷயமா இனிமே எதுவும் உன்கிட்ட இருக்க வேண்டாம்."

பதறி எழுந்தான். "வேணாம். அதை மட்டும் எடுத்திட்டுப் போகாதே."

"ஏன்?"

"பழசை நான் மறக்காம இருக்க அது ஒண்ணாவது என்கிட்ட இருக்கட்டும்."

"ஸாரி!"

விறைப்பாக நடந்து வெளியே வந்தாள்.

காஃபியோடு எதிர்ப்பட்ட ராஜ்குமாரின் அம்மாவிடம், "வரேம்மா" என்றாள். மின்னலாய் இறங்கிப் போனாள்.

(தொடரும்)



ஷார்ட்டா அனுப்புங்க!

'எஸ்.எம்.எஸ்' (ஷார்ட் மெசேஜ் சர்வீஸ்) என்பது செல்ஃபோனின் லேட்டஸ்ட் மொழி!

இதைப் பற்றிய சில சுவையான தகவல்கள்:

● கன்சைஸ் ஆக்ஸ்ஃபோர்டு அகராதியில் (புதிய பதிப்பு) SMS என்ற வார்த்தை சேர்க்கப்பட்டிருக்கிறது.

● 1992ம் வருடம் டிசம்பர் மாதம் 3ம் தேதி நீல் பெய்ஸ்வொர்த் என்ற பொறியியல் வல்லுனர் இங்கிலாந்தில் 'வோடாஃபோன்' என்ற நிறுவனத்திலுள்ள தம்முடைய சக ஊழியர்களுக்கு 'கிறிஸ்துமஸ் வாழ்த்துகள்' அனுப்பினார். இதுதான் முதல் எஸ்.எம்.எஸ்.

● க்ரெடிட் மற்றும் டெபிட் கார்டுகளைத் 'தேய்ப்பதற்கு'ப் பதிலாக இனி செல்ஃபோனை உபயோகிக்கலாம். டீ.வி ரிமோட் உபயோகிப்பது போல் அத்தனை எளிதானது.

● கத்தோலிக்க மாதா கோயில்களில் குற்றங்களை ஒப்புக் கொள்ளவும் பாவ மன்னிப்புக் கோரவும் எஸ்.எம்.எஸ் உபயோகிக்கக் கூடாது என்று தடை போடப்பட்டுள்ளது.

● அயர்லாந்து நாட்டில் இரு பள்ளிகள், மாணவர்கள் பள்ளிக்கு வராமல் 'கட்' அடிப்பதைத் தடுக்கும் விதமாக ஒவ்வொரு நாளும் வகுப்புக்கு வராமல் டிமிக்கி கொடுத்த மாணவரின் பெயரை எஸ்.எம்.எஸ் கொடுத்து பெற்றோருக்குத் தெரிவிக்கிறது.

● 2003ம் ஆண்டு புத்தாண்டுக்கு முதல் நாள் இங்கிலாந்தில் நூறு மில்லியன் எஸ்.எம்.எஸ் ஒரே நாளில் அனுப்பப்பட்டதாகக் கூறப்படுகிறது. சீனாவில் ஏழு பில்லியன்.

● 2003ம் ஆண்டு காதலர் தினத்தன்று இங்கிலாந்தில் ஏழு மில்லியனுக்கு மேல் எஸ்.எம்.எஸ் அனுப்பப்பட்டன. வழக்கமாக அனுப்பப்படும் வாழ்த்து அட்டைகளின் எண்ணிக்கையைவிட இது ஆறு மடங்கு அதிகம்.

● 95 சதவிகித எஸ்.எம்.எஸ்கள் பத்து வினாடிகளுக்குள் அனுப்பப்படுகின்றன.

● இருபத்தி ஐந்து வயதுக்குக் கீழே உள்ளவர்கள், 1.5 பில்லியன் பவுண்டுகளை எஸ்.எம்.எஸ் அனுப்புவதில் செலவழிக்கிறார்கள்.

● எஸ்.எம்.எஸ் பழக்கத்துக்குத் தீவிரமாக அடிமையான பர்மிங்ஹாம் நாட்டு பள்ளி மாணவன் இருநூற்றுப் பதினாறு பவுண்டுகளை மொபைல் பில்லாகக் கட்டியிருக்கிறான். ஒரு மாதத்துக்கு இவன் அனுப்பிய எஸ்.எம்.எஸ் இரண்டாயிரத்து ஐந்நூறுக்கும் மேல்!

● விமானத்தில் பயணம் செல்பவர்கள், விமானம் கிளம்பும்போதும், மீண்டும் தரை இறங்கும்போதும் மொபைல் போன் உபயோகிப்பதால் பெரும் தீங்கு விளையும், என்று பிரிட்டிஷ் சிவில் ஏவியேஷன் அத்தாரிட்டி எச்சரிக்கை செய்துள்ளது.

நன்றி : 'ஏர்டெல்' நிறுவனத்தின் 'சவுத் ஹப் பஸ்' பத்திரிகை.

- கலாமூர்த்தி

இனி சதாம்?




* டிப்டாப் சதாம்

தலைக்கு விலையாக இருநூற்றி ஐம்பது லட்சம் டாலர்கள், மிரட்டல்கள், செயற்கைக்கோள் மூலமாக வேவு என்று பல கோணங்களிலும் முயற்சி செய்தும் பிடிபடாத சதாம், யாரும் எதிர்பாராத நேரத்தில், எளிமையான விதத்தில் பிடிபட்டிருக்கிறார். ஒரு விதத்தில் இது அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷுக்குக் கிடைத்த கிறிஸ்துமஸ் வெகுமதி.

இனி சதாமின் நிலை என்னவாகும்? சதாம் பிடிபட்டதால் ஈராக்கின் தலைவிதியில் மாற்றம் உண்டா? இந்தக் கேள்விக்கான விடைகள் சுவாரசியமானவை மட்டுமல்ல, குழப்பமானவையும் கூட. காரணங்கள் இதோ.

வரும் ஜூலை முதல் தேதியன்று ஈராக்கில் குடியரசு ஆட்சி ஏற்படும் என்றும், அதற்கு அடுத்த நாளே சதாம் தூக்கிலிடப்படுவார் என்றும் கூறுகிறார் ஈராக் அரசு நிர்வாகக் குழுவைச் சேர்ந்த ஒருவர். (இந்தக் குழுவைச் சேர்ந்த மிகப் பலரும் கடைந்தெடுத்த சதாம் எதிர்ப்பாளர்கள்)


சர்வதேச நீதிமன்றத்தில் சதாம் ஒப்படைக்கப்படுவார் என்கிறார் அமெரிக்க ஜனாதிபதி புஷ். ஆனால் வழக்கு எங்கே நடக்கும் என்பது கேள்விக்குறி. 'ஈராக்கில் சர்வதேச நீதிமன்றத்தின் மேற்பார்வையில் இந்த வழக்கு நடக்கட்டும்' என்கிறார் ஈராக்கின் வெளியுறவு



* பரிதாப சதாம்

அமைச்சர். இது குறித்து மௌனம் சாதிக்கிறது அமெரிக்கா.

'சாதாரண போர்க்கைதியாக நடத்தப்படுவார் சதாம்' என்கிறார் புஷ். ஆனால் இந்தப் பின்னணியில் பார்க்கும்போது 'எந்த விதத்திலும் சித்ரவதை இருக்காது' என்ற அமெரிக்கப் பிரதிநிதியின் வார்த்தைகளை சந்தேகத்துடன்தான் ஏற்க வேண்டியிருக்கிறது.



சதாமுக்குத் தூக்கு தண்டனை அளிக்கக் கூடாது என்ற தனது கருத்தைத் தெளிவுபடுத்தியிருக்கிறது, பிரிட்டன்.

உண்மையிலோ, ஒப்புக்கோ, வழக்கு என்ற ஒன்று நடக்கத்தான் போகிறது. அப்போது தேவைப்படும் தகவல்களை சதாம் தாமாக முன்வந்து, அதுவும் வேறு எந்த நிபந்தனையும் இன்றி அளிப்பாரா - என்பது மிகப் பெரிய கேள்விக்குறிதான்.

கைது செய்யப்பட்டதிலிருந்தே 'அவர் ஒத்துழைக்க மாட்டேன் என்கிறார்' என்று அலுத்துக் கொள்கிறார்கள் அமெரிக்கப் புலனாய்வு அதிகாரிகள்.

'எப்படி இருக்கிறீர்கள்?' என்ற


சாடிஸ்ட் சைகாலஜி!

சதாம் போன்றவர்களின் மனவியல் போக்குகளைக் குறித்து மனவியல் மருத்துவர் டாக்டர் ரங்கராஜன் :

சாடிஸம் என்ற வார்த்தை மட்டுமே சதாமின் சைகாலஜியைத் தெளிவுபடுத்தி விடாது. தமது சமூக மற்றும் அரசியல் ஆதாயங்களுக்காக இந்தக் கொடுங்கோலன் இமேஜை சதாம் வளர்த்துக் கொண்டிருக்கலாம். பழைய திரைப்படங்களில் கதாநாயகனைப் பிடிக்க முடியாமல் வெற்றுக் கையுடன் திரும்பும் தனது அடியாளைக் கொன்றுவிடுவார் வில்லன் அசோகன். அதுபோல தம்மை எதிர்த்துக் கருத்துக் கூறிய தமது மாப்பிள்ளைகளையே கொன்றவர் சதாம். மன்னிப்பு என்பது அவர் அகராதியில் இல்லாத வார்த்தை. 'என் சொல்லை மீறினால் சித்ரவதையான சாவுதான்!' என்று மிரட்டுவதோடு நில்லாமல் நடைமுறைப்படுத்தி, தமக்கு எதிர்ப்பு இல்லாமல் பார்த்துக் கொண்டிருக்கிறார்.

புத்திசாலித்தனமான இன்னொரு மனப்பாங்கையும் மக்களிடையே விதைத்ததனால் தான் அவரால் இவ்வளவு ஆண்டுகள் தொடர்ந்து ஆட்சி செய்ய முடிந்திருக்கிறது. ஏதோ ஒரு கொள்கையை உயர்ந்தது என்று நம்ப வைத்து, 'அந்தக் கொள்கை உயிரோடு இருக்க வேண்டுமானால் என் ஆட்சிதான் ஒரே வழி' என்று உணர்த்தியிருக்கிறார்.

சதாம் பிடிபட்ட விதத்தைக் கொண்டு சாடிஸ்டுகளெல்லாம் கோழைகளாக இருப்பார்கள் என்ற முடிவுக்கு வரக் கூடாது. சொல்லப் போனால் பதுங்கியிருந்து பின்பு ஓர் இயக்கத்தைச் சேர்த்துக் கொண்டு எதிர்க்கலாம் என்று அவர் நினைத்திருக்கக் கூடும். எப்படி இருந்தாலும் சதாம் போன்றவர்கள் சமூக மதிப்பீடுகள் குறித்து கவலைப்படாத குணநலனைக் கொண்டவர்கள்.



• பதுங்கு குழி

கேள்விக்கு 'என் மக்களெல்லாம் பிடிபட்டிருப்பதால் நான் வருத்தமாக இருக்கிறேன்' என்று பதில் அளித்திருக்கிறார். இதைவிடக் காமெடியாக ஒரு கிளாஸ் தண்ணீரைக் குடிப்பதற்குக் கொடுத்தால், ''இதைக் குடித்தால் நான் பாத்ரூம் போக வேண்டி இருக்கும். என் மக்கள் அடிமைப்பட்டிருக்கும்போது எனக்கு எப்படி பாத்ரூமைப் பயன்படுத்த மனம் வரும்?'' என்று கேட்டிருக்கிறார்.

முதல் வளைகுடாப் போரின்போது ஈராக்கின்மீது பறந்த கேப்டன் ஸ்காட் என்ற அமெரிக்க விமான ஓட்டியின் கதி என்னவாயிற்று, என்பது இன்றுவரை தெரியவில்லை. அவரைக் குறித்துக் கேட்டபோது 'எங்கள் நாட்டில் யாரையுமே சிறைப்பிடிப்பதில்லையே. அவருக்கு என்ன நேர்ந்தது என்று எனக்கு எப்படித் தெரியும்?' என்கிறார். பேரழிவு ஆயுதங்கள் எதையும் தாம் வைத்திருக்கவில்லை என்றும் சாதிக்கிறார்.



டாக்டர் ரங்கராஜன்

ஆக, சதாமிடம் கேள்விகள் மூலம் எந்த உருப்படியான பதிலையும் பெற முடியாது என்பது நிச்சயம்.

ரொக்கமாக ஏழரை லட்சம் டாலர்கள், இரண்டு ஏ.கே. 47 துப்பாக்கிகள், மற்றும் ஒரு கைத்துப்பாக்கி, இவற்றுடன் பிடிபட்ட சதாம் உசேன், வேறொரு முக்கிய ஆதாரத்தையும் தன்னிடம் வைத்திருந்தாராம். அமெரிக்காவுக்கு எதிராகப் போரிட்ட உள்ளூர்ப் போராளிகள் குறித்த அந்த விவரங்கள் மிகவும் உபயோகமானவை என்று கருதுகிறது அமெரிக்க ராணுவம். இதன் மூலம் ஈராக் உள் நாட்டுக் கலகத்தில் பின்னணியாகச் செயல்பட்டது, சதாம் தானா என்பதைத் தீர்மானிக்க முடியுமாம்.

மற்றொரு கோணம் முக்கியமானது. அமெரிக்க ராணுவத்தை வெளியேறும்படியும், சதாமைப் பதவியில் அமர்த்தியே தீருவோம் என்றும் போரிடும் அமைப்புகள் உள்ளன. சதாம் பிடிபட்டதால் அவர்கள் தங்கள் நிலையை மாற்றிக் கொண்டு அமைதிப் பேச்சுவார்த்தைக்கு இணங்கினால் அது அமெரிக்காவுக்கு வெற்றிதான்.


ஆனால் இது நடக்கக் கூடியது அல்ல. ஆயிரக்கணக்கான அமெரிக்க ராணுவ வீரர்களை முடமாக்கி, நூற்றுக் கணக்கானவர்களைக் கொன்று குவித்திருக்கும் இந்த அணிகளின் முக்கிய நோக்கம், சதாம் ஆதரவு அல்ல; அமெரிக்க எதிர்ப்புதான். ஆனால் இவர்களின் முக்கிய விவரங்களை (எங்கிருந்து இந்த அமைப்புகள் நிதி உதவி பெறுகின்றன என்பது உட்பட) சதாம் இப்போது வெளிப்படுத்திவிட்டால் இந்த அமைப்புகள் பெரிதும் பலவீனமடையும்.

பரிதாபமான விதத்தில் சதாம் பிடிபட்டிருப்பதைப் பார்த்தால், அவரைப் பாதுகாப்பதில் இந்த இயக்கங்களுக்குப் பெரிய ஆர்வம் எதுவும் இல்லை என்றே தோன்றுகிறது. சதாம் அமெரிக்க ராணுவத்தால் கொலை செய்யப்பட்டிருந்தால், இந்த இயக்கங்கள் அவரைத் தியாகியாக்கிக் கொண்டாடியிருக்கும். ஆனால், இப்போது கைதாகி, பரிதாபமாய் அவர் நிற்க, இவ்வியக்கங்கள் என்ன சொல்வது, செய்வது என்று புரியாமல் திணறுகின்றன.

- ஜி.எஸ்.எஸ்.

அந்த வீட்டுப் பூ!

டிசம்பர் மாதத்து ரம்மியமான மாலை. மணி மாலை மூன்றிருக்கும். எனது அறைக் கதவை அகலத் திறந்துவிட்டு, ஹாலின் மையத்தில் வந்து உட்கார்ந்தேன். வேலியில் உள்ள கள்ளிச் செடி சமீபத்து மழையில் செழித்து வளர்ந்திருந்தது. அதைத் தாண்டி பேர்ன் ஆன்ட்டி



வீட்டில் செம்பருத்தி, கொன்றைச் செடி, கொடி எல்லாம் பச்சைப் பசேலென்று இருந்தது கண் கொள்ளாக் காட்சி. கண்ணுக்குக் குளிர்ச்சி.

படித்துக் கொண்டிருக்கும்போது இப்படிப் பச்சையைப் பார்த்தால் கண்ணுக்கு நல்லது என்று அம்மா சொல்லுவாள்.

அடிக்கடி சிட்டி பக்கம் குடி போயிடலாம் என்று அம்மாவோடு சண்டை போட்டாலும், தாம்பரம் பகுதியில் இருப்பதில் இப்படி ஒரு மகிழ்ச்சி இருக்கத்தான் இருந்தது. இதில் இலவச சங்கீதத்திற்கு குயில், மைனாக்கள் வேறு. சமயத்தில் 'யாரங்கே, நாட்டியம் ஆரம்பமாகட்டும்' என்று ராஜாக்கள் தோரணை வந்து விடுவது போலத் தோன்றும் அசட்டு சந்தோஷம் வேறு!

கிறிஸ்துமஸ்... காலையிலேயே சர்ச்சுக்குப் போன பேர்ன் - ஆன்ட்டி - அங்கிள் நுழைவது தெரிந்தது. உறவினர் வீடுகளில் நுழைந்து புறப்பட்ட மகிழ்வும், அயர்வும் மெலிதாகத் தெரிந்தது. (நான் நிஜமாகவே பாடம் படிக்கிறேனா என்று உங்களுக்குச் சந்தேகம் உருவாகும். அது எனக்கே இருக்கும்போது உங்களுக்கு இருக்காதா, என்ன?)

"அக்கா! அக்கா!" வேலியோரம் பேர்ன் ஆன்ட்டி. நான் ஓரக் கண்ணால் ஹாலின் இடது பக்கம் பார்த்துவிட்டு நிமிர்ந்ததில் ஏதோ புரிந்தது போல் நின்ற ஆன்ட்டி, ஓடிவந்து விட்ட அம்மாவின் பார்வையில் மேலும் விஷயம் புரிந்துகொண்டு நாக்கைக் கடித்து, தோளை உயர்த்தி விழித்து... 'அண்ணனா?' என்று கேட்டுவிட்டு, 'அப்புறம் வருகிறேன்' என்பது போல் ஜாடை காட்டிவிட்டு வேகமாக அகன்றார்.

"என்னடி?" என்றார் ஃபைல் கட்டுகளுடன் இருந்த அப்பா!

''ஒன்றுமில்லை!'' என்று அப்பாவைப் பார்க்காமலேயே சொல்லிக் கொண்டு அடுப்படிக்குப் போனார்.

மூணு வருஷம் இருக்கும். வேலியருகில் உட்கார்ந்து பேர்ளின் அப்பா செடி நட்டுக் கொண்டிருந்தபோது, அரையடி இந்தப்பக்கம் வந்துவிட்டதாக என் அப்பா கத்த, வாய் வார்த்தைகள் தடித்து, தகராறு கை கலப்பாக மாறியது.



"நா... யாரு! என் குலம் என்ன? கோத்ரம் என்ன? என் மேலயா கை வெக்கிற? போடா! போடா! என் பக்கத்துல நிக்கக் கூட அருகதையில்லாதவன் நீ. உன் கிட்டே இவ்வளவு நாள் பழகினதே தப்புடா போ...டா...போ" என்று பொரிந்துவிட்டு உள்ளே நுழைந்ததில் இருந்து, பேச்சு வார்த்தை நின்றே போனது. பேர்ள் ஆண்ட்டிக்கு மட்டும் பொறுக்கவே இல்லை. இரண்டு மூன்று நாட்களில் அப்பா ஆபீஸ் போனபின் வந்து, அம்மாவோடு பேசிக் கொண்டார். வருத்தப்பட்டார். இருவரும் கண் கலங்கிக் கொண்டார்கள்.

பேர்ள் ஆண்ட்டி! பேர்ள் ஆண்ட்டி என்கிறேனே! சத்தியமா இன்னிக்கு வரைக்கும் அவங்க பேரே எனக்குத் தெரியாது. அவர் மகள் பேர்ளும் நானும் எல்.கே.ஜியில் இருந்து ஒண்ணா படித்து, அவள் செல்லம்மாளுக்கும், நான் லயோலாவுக்கும் போன போதுதான் பிரிந்தோம். ஏதோ ஒட்டிப் பிறந்த அண்ணன் தங்கை போல இருப்போம். (இருக்கிறோம்... அப்பா கிடக்கிறார்.)

ஆண்ட்டி, வேலியோரத்துக்கு வந்து போய் இரண்டு மணி நேரத்திற்கு மேலாகி விட்டது. புத்தகத்தில் கண் வைத்திருந்தாலும் இருப்புக் கொள்ளாமல் ஆண்ட்டி அங்கும் இங்கும் அலைந்து கொண்டிருப்பது எனக்குத் தெரிந்தது.

"அக்கா, அக்கா!" கூடை நிறைய மல்லிகைப் பூவுடன் மீண்டும் வேலியோரம் ஆண்ட்டி!

பத்மவாசன்

அம்மா தாவி ஓடினாள்.

நான் ஓரக் கண்ணால் அப்பாவைப் பார்த்தேன். கண்ணாடிக்குள்ளிருந்து அவர் விழிகள் அக்னியோடு உருண்டன. கண்ணாடியைக் கழற்றி ஒரு கையில் வைத்துக் கொண்டு, மறு கையால் நெற்றியைத் தேய்த்துக் கொண்டார்.

"என்னக்கா! அண்ணன் இருக்காரா?" மெதுவாகக் கேட்டார் ஆண்ட்டி.

"கிறிஸ்துமஸ்னா எல்லாருக்கும் லீவு தானே!" அம்மா இன்னும் சன்னமாகச் சொன்னாள்.

"ஷ்ஷ்... மறந்தேபோச்சு... பரவாயில்லை. இந்தாங்கோக்கா... பூத்துக் கொட்டுது. அப்போ புடிச்சுக் கொடுக்கணும்னு பாக்கிறேன்...ம் இன்னிக்கு ஒங்க பொறந்த நாள். வெள்ளிக்கிழமை வேற. சாமிக்குக் கட்டிப் போட்டுட்டு நீங்களும் வச்சுக்கோங்க!" பூக்கூடையை வாங்கிக் கொண்டு அம்மா வேகமாக உள்ளே போனார்.

''ஏண்டி! கண்டவங்க கொடுக்கிற பூவைக் கட்டி சாமிக்கு வேறே போடப் போறயா? எத்தனை நாளா நடக்குது. தூக்கிப் போடு வெளியே...'' அப்பாவின் கோபம் தணியவே இல்லை என்பது பேச்சில் தெரிந்தது.

பேர்ளின் அப்பா இப்படியில்லை. மழைக்காலத்தில் ஒருநாள் வண்டியை வெளியே எடுத்துக் கொண்டு நான் காலேஜ் போகக் கிளம்பிய நேரம், வண்டி சதி பண்ணியது. உதைத்து உதைத்து கால் சோர்ந்தபோது, "என்னவாம்? தள்ளு!" என்ற



"உன் வயசு என்னப்பா?"
"67 ஆகுது எஜமான்..."
"கேஸ் ஃபைல்ல 22-னு இருக்கே?"
"அது கேஸ் ஆரம்பிச்சப்ப உண்டான வயசுங்க."

சென்னிமலை சி.பி. செந்தில்குமார்



"குளிர் காலத்தில பெண்கள் மெகா தொடர் பார்த்தா எப்படி இருப்பாங்க?"
"கண்ணீரும் கம்பளியுமா இருப்பாங்க!"

- சோழபுரம் யாக்கோப்

"என் மாமியார் தீவிரவாதி மாதிரி நடந்துக்கறா..."
"என்ன பண்ணினாங்க?"
"என்னோட பர்ஸ்லேந்து பணத்தைத் திருடிட்டு அதுக்கு தான் பொறுப்பேற்கிறதா லெட்டர் எழுதி வச்சிருக்கா!"

- வி. கிருஷ்ணகுமார்



குரல் கேட்டு நிமிர்ந்தால், பேர்ளின் அப்பா. அங்க தட்டி, இங்க தட்டி, தூக்கி அமுக்கி ஏதோ பண்ணி ஸ்டார்ட் பண்ண, "வணக்கம் ஐயா" என்று கும்பிடு போட்டு ஸ்டார்ட் ஆனது வண்டி.

அந்த வட்டாரத்திலேயே நல்ல மெக்கானிக் என்ற பெயர் பேர்ளின் அப்பாவுக்கு.

பூவின் அழகில் மயங்கி அடுப்படியில் இருந்தே அம்மா சரம் தொடுத்து முடித்து விட்டார். அம்மாடி! ஆறேழு முழம் இருக்கும் போல் தெரிந்தது. அம்மாவின் முகம் நிறைய மகிழ்ச்சி தாண்டவமாடியது. எல்லா சுவாமிப் படங்களுக்கும் தழையத் தழையப் போட்டார்.

நான் ஓரக்கண்ணால் அப்பாவைப் பார்த்து விட்டு "ஏம்மா... பாத்துப் போடு. சாமி பூச்சரத்தைத் தள்ளிவிட்டுடப் போறது!" என்றேன்.

"போடா!" என்றாள் அம்மா சிரியசாக, என் குத்தல் புரியாமல்.

"தள்ளி விடாதும்மா! ஏன்னா அது சாமி. நாமதான் ஆசாமி! நமக்குத்தான் ஜாதி, குலம், கோத்ரம் எல்லாம். அந்த வீட்ல பூத்த பூ வேண்டாம்னு நம்ப சாமியும் சொல்றதில்லை. இந்த வீட்ல பூத்த ரோஜா எனக்கு வேண்டாம்னு அவங்க சாமியும் சொல்றதில்லை. இவ்வளவு ஏன்? அவங்க வீட்ல பூத்த பூ, நான் உங்க சாமிக்கிட்ட வர மாட்டேன்னு சொல்லலை. பாரேன். என்னமா சிரிச்சுக்கிட்டு இருக்குது..."

அப்பா முகத்தில் சிந்தனையுடன் எழுந்து வெளியே போய்விட்டார். கொஞ்ச நேரத்தில் தோட்டத்தில் அவர் குரல் ஒலித்தது.

"ஜேம்ஸ்! ஜேம்ஸ்!"

கலவரத்துடன் தோட்டத்துக்குப் போனால், படிக்கட்டில் உட்கார்ந்திருந்த பேர்ளின் அப்பா வேகமாக ஓடி வந்தார். எந்த வேலிக்காக சண்டை போட்டார்களோ, (போட்டாரோ?) அந்த வேலிக்கு மேலாக ஆரத் தழுவிக் கொண்டார்கள் இருவரும். இருவர் கண்களிலும் ஈரம்.

பேர்ள் சற்றுப் பின்னே நின்று கண்ணாலும் வாயாலும் சிரித்தான். பேர்ள் ஆன்ட்டி வேகமாக தட்டு நிறைய பட்சணம் வைத்து எடுத்துக் கொண்டு, வியப்பு நிறைந்த விழிகளோடு வந்து, "இந்தாங்கக்கா" என்று பயம் போன குரலில் கூறி நீட்ட, "தேங்க்யூ தேங்க்யூ" என்று அம்மா மகிழ்ச்சி பொங்க வாங்கினாள். ○



சிறப்பு
புத்தாண்டு
தள்ளுபடி
விற்பனை
3 - 1 - 2004 வரை
■ வைரம் விலையில் ஒரு காரட்டுக்கு ரூ 2000/- தள்ளுபடி
■ தங்க நகைகளுக்கு கூலி இல்லை
■ வெள்ளி சாமான்களுக்கு கூலி இல்லை
■ ரூபி, எமரால்டு நகைகளுக்கு கூலி இல்லை
■ வைர நகைகளுக்கு கூலி இல்லை
■ குறைந்த சேதாரம்
■ படங்கள், பரிசுப் பொருள்களுக்கு 10% தள்ளுபடி
■ ரூபி, எமரால்டு போன்ற கற்களுக்கு 10% தள்ளுபடி
■ சான் கோல்டுகளுக்கு 20% தள்ளுபடி
SWARNALAYA
Jewellery
Diamond, Ruby, Emerald and Blue Safire Jewellery Collections...
5, Venkatnarayana Road, T.Nagar, Chennai - 600 017
Tel : 52125353, 52125454. Fax : 52124747. e-mail : asukumaran@eth.net www.swarnalayajewellery.com
maaris.v.98402 64635

நேற்று...இன்று...நாளை...

கம்ப்யூட்டர் கச்சேரிகள்!

பாட்டு என்ற பெயரில் இரைச்சலை சகித்துக் கொள்ள முடியாமல், லதா மங்கேஷ்கர் முகம் சுளித்துத் தமது காதுகளைப் பொத்திக் கொள்கிறார் - இப்படி ஒரு புகைப்படம் சில தினங்களுக்கு முன் பல நாளிதழ்களில் இடம் பெற்றிருந்தது. ஹிந்துவில் முதல் பக்கத்தில் மிகப் பெரிய அளவில். இசை உலகுக்கு லதாவின் இணையற்ற பணியைப் பாராட்டி எம்.டி.வி. நிகழ்ச்சி ஒன்றில் கௌரவிக்க அழைக்கப்பட்டிருந்தார். அங்கே ஒலித்த 'சங்கீத'த்தைத்தான் லதாவால் சகித்துக் கொள்ள முடியவில்லை!


வேடிக்கை என்னவென்றால் லதாவின் பாடல்களைத் தொடக்க காலத்தில் கேட்க நேர்ந்தபோது, அமரர் 'கல்கி' இதே போல்தான் தமது காதுகளைப் பொத்திக் கொண்டார். அந்த நாளில் "லாரப்பா, லாரலப்பா" என்று தொடங்கும் ஒரு பாட்டு, இந்தியாவின் மூலை முடுக்குகளிலெல்லாம் லதாவின் குரலில் ஒலித்தது. அதை ரேடியோவில் கேட்டுவிட்டுத்தான் 'கல்கி' கர்ணகொடூரம் என்று காதுகளைப் பொத்திக் கொண்டார். அதே மெட்டில், 'பாருடப்பா, பாருடப்பா, பாருடப்பா பார்!' என்று ஒரு தமிழ் சினிமாவில் பாட்டு ஒலித்தபோது 'கல்கி' வெகுண்டு, 'டப்பா சங்கீதம்' என்று தலைப்புத் தந்து காரசாரமாகக் கட்டுரை எழுதினார். லதா அபிமானிகள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தபோது, லதாவுடைய குரல் இனிமையையோ, இசை ஆற்றலையோ தாம் குறைகூறவில்லையென்றும், அந்தக் குரலும் ஆற்றலும் இசையின் தரத்தை அதலபாதாளத்துக்கு தாழ்த்தப் பயன்படக் கூடாது என்பதும்தான் தமது கருத்து என்றும் தெளிவுபடுத்தினார். இன்றைய திரை இசையையும் நடனத்தையும் கேட்க / பார்க்க நேர்ந்தால் கல்கி என்ன சொல்வார்?



• இ(ம்)சை!

திரை இசையில் மட்டுமல்ல, திரைப்படம் (ஒட்டுமொத்தமாக) நடனம், நாடகம், அரசியல், பத்திரிகைகள் என்று பல துறைகளிலும் இன்று கலாசாரம் - பண்பாடு சரிவுதான். பயங்கரச் சரிவு. கர்நாடக சங்கீதம் மட்டும் தன்னை ஒருவாறு காப்பாற்றிக் கொண்டிருக்கிறது. இதற்கு இளம் தலைமுறை சங்கீத வித்வான்களை நாம் எவ்வளவு பாராட்டினாலும் தகும். இங்கு மட்டுமின்றி, அயல்நாடுகளிலும் சென்று நமது தொன்மையான இசையின் பெருமையை நிலைநாட்டி வருகிறார்கள். அவரவரும் தமது குருநாதர் அளித்த கலைச் செல்வத்தைப் பாதுகாப்பது மட்டுமின்றி, மரபு மாறாமல் காலத்துக்கு ஏற்ப அபிவிருத்தி செய்தும், கச்சிதப்படுத்தியும் வழங்கி வருகிறார்கள். அவர்கள் அனைவருக்கும் தமிழனின் நன்றி உரித்தாகிறது.

ஆனாலும் என்ன, கச்சேரிகளுக்குக் கூட்டம் குறைவுதான். டி.வி. தவிர ஆடியோ வீடியோ மூலம்





கச்சேரிகள் வீட்டுக்கே வந்து விட்டன. ஒரு சி.டி. போட்டால் கிட்டத்தட்ட முழு நேரக் கச்சேரி. ரேடியாவும் தன் பங்குக்கு கச்சேரிகளை அரங்கிலிருந்து வீடுகளுக்குக்

கொண்டு போய்ச் சேர்க்கிறது. இதற்கு அடுத்த கட்டமாக, கச்சேரிகளை இன்டர்நெட்டுக்குக் கொண்டுபோனால், உலக முழுவதும் உள்ள தமிழர்கள் லைவ்வாக கச்சேரி கேட்கலாம். இத்தகைய நவீன முன்னேற்றத்தின் விளைவாக, அரங்கத்தில் கூட்டம் குறைவது மட்டுமல்ல; மற்றொரு ஆபத்தும் உள்ளது. ஆடியோ, வீடியோ, ஸி.டி. ஆகியவற்றின் விற்பனை தடதடவென்று சரிந்து வருகிறது. ஒரு ஸி.டி.யை நண்பர் ஒருவருக்கு போட்டுக் கேட்கச் செய்ய, எங்கோ தொலைதூரத்தில் உள்ள நண்பர், அதைத் தமது கம்ப் யூட்டர் உதவியுடன் டவுன்லோட் செய்து கொள்கிறார். இது காப்பிரைட் உரிமையை மீறும் செயல்தான். ஆனால் எதிர்காலத்தில் இந்த இசைத் திருட்டைத் தவிர்க்கவே முடியாது. விஞ்ஞான முன்னேற்றத்துக்காகக் கலைஞர்கள் கொடுக்கும் விலை இது. ராயல்டி போயே போச்சு! ஏகப்பட்ட நஷ்டம் கலைஞருக்கும், ஸி.டி. தயாரிப்பாளர்களுக்கும். காப்பிரைட் சட்டத்தையே மாற்ற வேண்டியதுதான்! இன்றைக்கே பல சர்வதேச ஸி.டி. ரிகார்ட்டிங் நிறுவனங்கள், ஒன்றோடு ஒன்று இணைவது, வேறு துறைகளில் புகுவது, அல்லது கடையை மூடுவது என்ற நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள் என்கிறது நியூஸ் வீக்.

எதிர்காலத்தில் இதைவிடப் பெரிய ஆச்சர்யம் காத்திருக்கிறது என்று பி.பி.சி. சத்தியம் பண்ணுகிறது.

செம்பியன்

உங்கள் மூளையிலேயே நீங்கள் ஒரு சிறு பிளக்கைச் செருகிக் கொள்ளலாம். அதன்மூலம் உலகின் எந்த மூலையில் நடக்கும் எந்த இசை நிகழ்ச்சியையும், உங்கள் மூளையே தேர்வு செய்து கேட்கும். செவிப்புலனுக்கே வேலையில்லை! பிறர் கேட்கப் பாடுவதற்கு வெட்கப்பட்டு, பாத்ரூமில் குளிக்கும்போது கச்சேரி செய்து ஜமாய்க்கிறவர்கள்கூட ரகசியம் காக்க முடியாது. உங்கள் மாமியார் அதைக் கேட்டுவிட்டுக் கிண்டலடிக்க முடியும்!

"என்ன வித்வான் ஸார், உங்க கச்சேரி இன்டர்நெட்ல உலகம் பூரா போகுதாமே, ராயல்டி கதி என்ன...?"

"ஹூம், என்னையா ஏமாத்த முடியும்? கச்சேரி ஒப்புக்கும்போதே ஒண்ணுக்கு ஐந்தா தேங்காய் மூடி தந்தால்தான் ஆச்சுன்னு பேரம் பேசிட்டேனே!" ●

ஸ்ரீ ராமஜெயம்

வடமாநில புனித யாத்திரை

34 ஆண்டுகளுக்கு மேலான அனுபவம்

5.2.2004	15 நாட்கள் கொண்ட பஞ்ச துவாரகை யாத்திரை - நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. 7250/-
22.2.2004	15 நாட்கள் கொண்ட 7 ஜோதிர்லிங்கம் யாத்திரை - நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. 7000/-
23.2.2004	12 நாட்கள் கொண்ட காசி, கயா, ப்ரயாகை உள்ளிட யாத்திரை - நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. 5650/-
23.2.2004	17 நாட்கள் கொண்ட காசி, கயா, ஹரித்துவார், நியூடெல்லி உள்ளிட்ட யாத்திரை - நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. 7150/-
12.3.2004	16 நாட்கள் கொண்ட சிம்லா, குளு, மணாலி, வைஷ்ணவிதேவி உள்ளிட்ட யாத்திரை - நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. 7750/-
2.4.2004	12 நாட்கள் கொண்ட காசி, கயா, ப்ரயாகை உள்ளிட்ட யாத்திரை - நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. 5650/-
16.4.2004	10 நாட்கள் கொண்ட கர்நாடக யாத்திரை - நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. 4000/-
2.5.2004	30 நாட்கள் கொண்ட காசி, நேபாளம், முக்திநாத், பத்ரி, கேதார் உள்ளிட்ட யாத்திரை- நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. 11,800/-
2.5.2004	18 நாட்கள் கொண்ட காசி, நேபாளம், முக்திநாத் உள்ளிட்ட யாத்திரை - நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. 7650/-
7.5.2004	24 நாட்கள் கொண்ட காசி, கயா, பத்ரி, கேதார் உள்ளிட்ட யாத்திரை- நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. 8600/-



ஆங்காங்கு தங்கும் வசதிகள், ஊர் சுற்றிப் பார்க்க பஸ் கட்டணம், தூங்கும் வசதி கொண்ட இரண்டாம் வகுப்பு ரயில் கட்டணம், கைதேர்ந்த தென்னிந்திய பிராம்மணர்களைக் கொண்டு காலை - காபி, டிபன்; மதியம், இரவு உணவளிப்பதுடன் இங்கு குறிப்பிட்ட அனைத்துச் செலவுகளும் எங்களைச் சேர்ந்தவை.

மேலும் விவரங்களுக்கு :-

ஸ்ரீ விஜயலட்சுமி டிராவல் சர்வீஸ்

நெ.7, வெங்கடாசல செட்டித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005. ✆ : 28440144

உரிமையாளர் : S. ஜெயராமன்



S.V.முதியோர் இல்லம்



Charitable Trust (Reg)

இங்கு முதியோர்களுக்கு இலவச மருத்துவமனை, ஆரம்பிக்கப்பட்டு அனைவரையும் தனித்தனியாக பரிசோதனை செய்து, உடல் ஆரோக்கியம் கண்காணிக்கப் படுகிறது. படுத்த படுக்கையில் உள்ள முதியோர்கள் அனைவரையும் 24 மணி நேரமும் டாக்டர்களும், நர்சுகளும், உதவியாளர்களும் கவனித்துக் கொள்கிறார்கள். எல்லா எமர்ஜென்சி உபகரணங்கள் உள்ளன.

மனச்சிதைவு, மனவளர்ச்சி குன்றிய முதியோர்கள் மற்றும் எல்லா வயது ஆண்/பெண் நோயாளிகளுக்கென்று தனி இல்லம் மருத்துவ வசதியுடன் செயல்பட்டு வருகிறது.

எல்லா வயது உட்பட்ட அதிக பட்ச மனநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு (ஆண், பெண் இருபாலரும்) சிறப்பு பாதுகாப்பு வசதியுடன் முற்றிலும் இலவச மருத்துவ வசதியுடன் தனித் தனி இல்லம் செயல்படுகிறது.

உங்கள் பிறந்த நாள் மற்றும் சிறப்பு நாட்களில் நீங்கள் அளிக்கும் ஒரு சிறிய நன்கொடைத் தொகை எங்கள் இல்லத்தில் உள்ள முதியோர்கள் மருத்துவ வசதிக்கு பயன்படுத்துவதுடன், அவர்கள் வாழ்க்கையை காப்பாற்றிய நல்லாசி உங்கள் குடும்பத்திற்குக் கிடைக்கும் மிகப் பெரிய பரிசாகவும் அமையும்.

முதியோர் சேவை பெரியது!

நன்கொடைக்கு வருமானவரி விலக்கு (80G, Income Tax Excemption) உண்டு

S.V. HOME FOR AGED

Charitable Trust (Reg)

50 / 88, Panchali Amman Kovil Street, (Near Arumbakkam Post Office)
Arumbakkam, Chennai - 600 106 Tel. Off: 2475 5700, 2475 1356.

E-mail:svhome@vsnl.net

சிவகாமியின் சபதம்

நாற்பத்தாறாம் அத்தியாயம்

பௌர்ணமி சந்திரன்

இந்த மண்ணுலகம் படைக்கப்பட்ட காலத்திலிருந்து மாதம் ஒரு தடவை பூரண சந்திரன் உதயமாகி நீல வானத்தில் ஜொலிக்கும் வைர நக்ஷத்திரங்களிடையே பவனி சென்று வருகிறது.

ஒவ்வொரு பௌர்ணமியன்றும் வான வீதியில் பவனி வரும் பூரண சந்திரன் கடந்த ஒரு மாதத்துக்குள்ளேயே பூவுலகில் எத்தனையோ அதிசயமான மாறுதல்கள் நிகழ்ந்திருப்பதைப் பார்த்துக் கொண்டு வருகிறது.


எனவே, மண்ணுலகில் அடிக்கடி நிகழும் மாறுதல்களை பூரண சந்திரனுக்கு அதிகமான ஆச்சரியத்தை அளிக்க முடியாதுதான்.

என்ற போதிலும், * இன்றைக்குச் சுமார் ஆயிரத்து முந்நூற்று நான்கு ஆண்டுகளுக்கு முன்னால் (கி.பி. 642-ல்) மார்கழி மாதத்தில் உதித்த பூரண சந்திரன் வாதாபி நகரம் இருந்த இடத்துக்கு மேலாக வந்தபோது சிறிது நேரம் ஆச்சரியத்தினால் ஸ்தம்பித்து நின்றுவிட்டு ஒரு பெருமூச்சுடனே தான் அப்பால் நகர்ந்திருக்க வேண்டும்.

சென்ற பௌர்ணமியன்று அந்த வாதாபி நகரத்தின் மாட மாளிகைகளும் கூட கோபுரங்களும் சந்திரனையே தொட்டு விட முயல்வதைப் போல் கம்பீரமாக எழுந்து நின்றன. வானத்து நக்ஷத்திரங்களோடு போட்டியிடுவன போல் நகரெங்கும் தீபங்கள் ஜொலித்

அமரர் கல்கி


* 1946இல் சிவகாமியின் சபதம் எழுதப்பட்டது.



தன. ஐசுவரியத்தில் பிறந்து ஐசுவரியத்தில் வளர்ந்த ஆடவரும் பெண்டிரும் சகலாபரண பூஷிதர்களாக அந்தப் பெரு நகரின் விசாலமான வீதிகளில் மதோன்மத்தங் கொண்டு உலாவினார்கள். அலங்கரித்த யானைகளும் அழகிய குதிரைகளும் தந்தச் சிவிகைகளும் தங்க ரதங்களும் மோகன வெண்ணிலவிலே ஒளி வீசித் திகழ்ந்தன. விண்ணை எட்டும் மாளிகைகளின் உப்பரிகைகளில் வெண்ணிலாவுக்கு இன்னும் வெண்மையை அளித்த தவள மாடங்களில் மன்மதனையும் ரதியையும் ஒத்த காளைகளும் கன்னியர்களும் காதல் புரிந்து களித்தார்கள். தேவாலயங்களில் ஆலாசிய மணிகள் ஒலித்தன. அரண்மனையில் கீதவாத்தியங்களின் இன்னிசை கிளம்பிற்று. நடன மண்டபங்களில் சதங்கைகள் சப்தித்தன. கடை வீதிகளில் பொது ஜனங்களின் கலகலத்தொனி எழுந்தது. அகில் புகையின் மணமும் சந்தனத்தின் வாசனையும் நறுமலர்களின் சுகந்தமும் எங்கெங்கும் பரவியிருந்தன.

ஒரு மாதத்துக்கு முன்பு மேற்கண்டவாறு கந்தர்வபுரியாகக் காட்சியளித்த வாதாபி நகரம் இருந்த இடத்தில் இன்றைக்குச் சிற்சில குட்டிச் சுவர்கள் நின்றன. மற்ற இடத்திலேயெல்லாம் கரியும் சாம்பலும் புகையேறிய கல்லும் மண்ணும் காணப்பட்டன. சில இடங்களில் அவை கும்பல் கும்பலாகக் கிடந்தன; சில இடங்களில் அவை பரவிக் கிடந்தன.

இடிந்து விழாமல் புகையினாலும் தீயினாலும் கறுத்துப் போய் நின்ற குட்டிச் சுவர்களின் ஓரமாகச் சிற்சில மனிதர்கள், உயிர் பெற்று எழுந்த பிரதேங்களையும் பேய் பிசாசுகளையும் ஒத்த மனிதர்கள், - ஆங்காங்கே திரிந்து கொண்டிருந்தார்கள். அவர்களில் சிலர் எங்கே போகிறோம் என்ற எண்ணமே இல்லாமல் பிரமை கொண்டவர்களைப் போல் நடந்தார்கள். வேறு சிலர் ஆங்காங்கே உட்கார்ந்து கரியையும் மண்ணையும் கிளறிப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் யாரைத் தேடினார்களோ அல்லது எதைத் தேடினார்களோ, யாருக்குத் தெரியும்?



வாதாபி நகரம் இருந்த இடத்துக்குச் சற்று தூரத்தில் இடிந்தும் தகர்ந்தும் கிடந்த கோட்டை மதிலுக்கு அப்புறத்தில் அந்த மார்கழிப் பௌர்ணமி சந்திரன் முற்றிலும் வேறுவிதமான மற்றொரு காட்சியைப் பார்த்தது. லட்சக்கணக்கான பல்லவ பாண்டிய வீரர்கள் வெற்றிக் கோலாகலத்திலும் களியாட்ட ஆரவாரங்களிலும் ஈடுபட்டிருந்தார்கள். அவர்கள் படையெடுத்து வந்த காரியம் யாரும் எதிர்பார்த்ததைக் காட்டிலும் சுலபமாக நிறைவேறி மகத்தான வெற்றி கிடைத்த காரணத்தினால் அவர்களுக்கேற்பட்ட மதோன்மத்தம் ஒரு பக்கம்; வாதாபி நகரத்தின் கொள்ளையில்

காவேரித் திருநாட்டில் செங்காட்டாங்குடி கிராமத்தில் மாமாத்திரர் குலத்தில் பிறந்த பரஞ்சோதியார் காஞ்சி பல்லவ சக்கரவர்த்தியின் சேனைத் தலைவராக வாதாபிக்குப் படையெடுத்துச் சென்று, அந் நகரை அடியோடு அழித்துவிட்டுத் திரும்பியது பழந் தமிழ் நாட்டின் சரித்திரத்தில் மிகப் பிரசித்தி பெற்ற சம்பவமாகும். மேற்படி சம்பவத்தைக் குறித்துப் பெரிய புராணம் பின்வருமாறு குறிப்பிடுகிறது:-

மன்னவர்க்குத் தண்டுபோய்
வடபுலத்து வாதாபித்
தொன்னகரம் துகளாகத்
துளைநெடுங்கை வரையுகைத்துப்
பன்மணியும் நிதிக்குவையும்
பகட்டினமும் பரித்தொகையும்
இன்னன எண்ணில கவர்ந்தே
இகலரசன் முன்கொணர்ந்தார்.

(தண்டுபோய்: சேனையுடன் படையெடுத்துச் சென்று, துளைநெடுங்கை வரையுகைத்து: நீண்ட துதிக்கைகளையுடைய மலை போன்ற யானைப் படைகளை ஏவி: பகட்டினமும் பரித் தொகையும்; ஏராளமான யானைகளையும் குதிரைகளையும்; இகலரசன்; போரிற் சிறந்த அரசன் மாமல்லன்.)

வாதாபிப் பெரும் போருக்குப் பிறகு பரஞ்சோதியார் சிவபக்தி பூண்டு சிவனடியார்களுக்குத் தொண்டு செய்வதையே வாழ்க்கை இலட்சியமாகக் கொண்டு 'சிறுத் தொண்டர்' என்னும் காரணப் பெயரையும் அடைந்தார்.

திருச்செங்காட்டாங்குடி கிராமத்தில் இன்றைக்கும் சிறுத்தொண்டர் கோயில் இருக்கிறது. அவர் வாதாபியிலிருந்து கொண்டு வந்த விநாயகர் கோயிலும் இருக்கிறது.


ஹம்ஸத்வனி ராகத்தில் பாடப்படும் ''வாதாபி கணபதிம் பஜேஹம்' என்னும் பிரசித்தி பெற்ற தீக்ஷிதர் கீர்த்தனத்தில், செங்காட்டாங்குடியிலுள்ள வாதாபி விநாயகர்தான் தோத்திரம் செய்யப்படுகிறார் என்பது ஆராய்ச்சியாளரின் கொள்கை.

சித்திரக் கலைஞர் 'சந்திரா' திருச்செங்காட்டாங்குடி கிராமத்துக்குச் சென்று தீட்டிக் கொண்டு வந்த அவ்வூரின் அழகிய தோற்றமும், அங்கேயுள்ள வாதாபி விநாயகரின் விக்கிரகமும் அருகில் சோபை அளிக்கின்றன.

அவரவருக்குக் கிடைத்த பங்கினால் ஏற்பட்ட உற்சாகம் ஒரு பக்கம்; இவற்றோடுகூட இந்தப் பாழாய்ப் போன மயான பூமியில் - அவர்களாலேயே மயானமாக்கப்பட்ட பிரதேசத்தில் - இன்னும் ஒரு தினந்தான் இருக்க வேண்டும்; அதற்கு அடுத்த தினம் சொந்த நாட்டுக்குப் புறப்படப் போகிறோம் என்ற எண்ணமானது அவர்களுக்கு அளவில்லாத எக்களிப்பை உண்டு பண்ணி இரவெல்லாம் தூக்கமின்றிக் களியாட்டங்களில் ஈடுபடும்படி செய்திருந்தது.

அந்த வெற்றி வீரர்களிலே சிலர் ஆடிப்பாடினார்கள்; சிலர் இசைக் கருவிகளிலிருந்து பல வகை அபஸ்வரங்களைக் கிளப்பினார்கள். சிலர் கும்பலாக உட்கார்ந்து கதை கேட்டார்கள். சிலர் வாதாபி யுத்தத்தில் தாங்கள் செய்த வீர பராக்கிரமச் செயல்களைப் பரஸ்பரம் சொல்லிப் பரிமாறிக் கொண்டிருந்தார்கள். சிலர் மார்கழி மாதத்துக் குளிரைப் போக்கிக் கொள்வதற்காக எரிகிற வீடுகளிலிருந்து பிடுங்கிக் கொண்டு வந்த கட்டைகளைப் போட்டுக் கொளுத்திக் கொண்டும் தீயைச் சுற்றி உட்கார்ந்து கொண்டும் குளிர் காய்ந்தார்கள்.

அநேகர் வாதாபியிலிருந்து அவரவரும் கொள்ளையடித்துக் கொண்டு வந்திருந்த செல்வங்களைச் சேர்த்து வைத்துக் கொண்டு பூதங் காப்பது போல் காத்து வந்தார்கள். இப்படிக் கொள்ளை கொண்ட பொருளை அதி ஜாக்கிரதையாகப் பாதுகாத்தவர்களுக்குள்ளே, - சற்று கவனித்துப் பார்த்தோமானால் - நமக்குத் தெரிந்த வயோதிக வீரர் ஒருவரைக் காணலாம். சோழ மன்னர் பரம்பரையைச் சேர்ந்த செம்பியன் வளவன் - மங்கையர்க்கரசியின் அருமைத் தந்தைதான் அவர். தாம் காஞ்சியிலிருந்து புறப்பட்டு வந்த பிறகு தமது மகளுக்கு நேர்ந்த அரும்பெரும் பாக்கியத்தை அறியாதவராய் அவளுடைய திருமணத்தின் போது ஸ்திரீதனம் கொடுப்பதற்கென்று எரிந்து கொண்டிருந்த வாதாபி





நகரிலிருந்து மிக்க பரபரப்புடனும் சுறுசுறுப்புடனும் ஏராளமான முத்துக்கள், மணிகள், ரத்தினங்கள், தங்கம், வெள்ளி ஆபரணங்கள் ஆகியவற்றை எடுத்துக் கொண்டு வந்து சேர்த்திருந்தார்.

இவ்விதம் கிழவர் அரும்பாடுபட்டுச் சேகரித்திருந்த பொருள்களுக்கு ஒருநாள் ஆபத்து வரும்போலிருந்தது. இரவு நேரங்களில் சில சமயம் மாமல்லர், தமது சேனா வீரர்கள் தங்கியிருக்கும் இடங்களுக்குச் சென்று பார்வையிட்டு, சமயோசிதமான பாராட்டு மொழிகள் கூறி உற்சாகப்படுத்தி விட்டுப் போவது




வழக்கம். ஊருக்குப் புறப்பட வேண்டிய நேரம் நெருங்கி விட்டபடியால் சென்ற நாலு தினங்களாகச் சக்கரவர்த்தி தினந்தோறும் இரவு வெகு நேரம் வரையில் வீரர்கள் தங்கியிருந்த இடங்களுக்குச் சென்று அவர்களைப் பார்த்தும் பேசியும் சந்தோஷப்படுத்தி வந்தார்.

அந்த வெற்றி வீரர்களைத் தம்முடன் நிரந்தரமாகப் பந்தப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தோடு கூட போர்க்களத்திலும் கோட்டைத் தாக்கு

அருள்வாக்கு

ஒரு மரத்திலே புஷ்பத்திலிருந்துதான் காயும் பழமும் உண்டாகின்றன. புஷ்பமாக இருக்கும்போது மூக்குக்கும், பழமாக இருக்கும் போது நாக்குக்கும் ரஸமாக இருக்கின்றன. பழம் நல்ல மதுரமாக இருக்கிறது. இந்த மதுரம் வருவதற்கு முன்பு எப்படி இருந்தது? பூவில் கசப்பாகவும், பிஞ்சில் துவர்ப்பாகவும், காயில் புளிப்பாகவும், பிறகு மதுரமாகவும் ஆகிறது. மதுரம் என்பதுதான் சாந்தம். சாந்தம் வந்தால் எல்லாப் பற்றும் போய்விடுகிறது. பழத்தில் மதுரம் நிரம்பிய உடனே கீழே விழுந்து விடுகிறது. அதுபோல் இருதயத்தில் எல்லா இடத்திலும் மதுரம் வந்துவிட்டால், தானாகவே எல்லாப் பற்றும் போய் விடும். புளிப்பு இருக்கும்வரை பற்று இருக்கும். அப்போது காயைப் பறித்தால் காம்பில் ஜலம் வரும், காயிலும் ஜலம் வரும். அதாவது மரமும் காயை விட்டுவிட விரும்பவில்லை; காயும் மரத்திலிருந்து விடுபட விரும்பவில்லை. ஆனால் நிறைந்த மதுரமாக ஆகிவிட்டால் தானாகவே பற்றும் போய்விடும்; பழம் தானே இற்று விழுந்து விடும். மரமும் பழத்தை விடுகிறது. இரண்டும் ஜலம் விடாமல் - அதாவது அழாமல் - ஆனந்தமாகப் பிரியும். படிப்படியாக வளர்ந்து மனம் முழுதும் மதுரமான ஒவ்வொருவனும் இப்படியே ஆனந்தமாக சம்ஸார விருட்சத்திலிருந்து விடுபட்டு இருப்பான். பழமாக ஆவதற்கு முன் ஆரம்ப தசையில் எப்படிப் புளிப்பும் துவர்ப்பும் வேண்டியிருக்கின்றனவோ, அதுபோலக் காமம், வேகம், துடிப்பு எல்லாமும் வேண்டியவை தாம் போலிருக்கிறது!



புளிப்பு இருக்க வேண்டிய சமயத்தில் புளிக்க வேண்டும். துவர்ப்பு இருக்க வேண்டிய சமயத்தில் துவர்க்க வேண்டும். ஆனாலும் அந்தந்த நிலையோடு நிற்காமல், பிஞ்சு அனவரதமும் பழமாகிக் கொண்டே இருப்பது போல், நாமும் மேலும் மேலும் மாதுரியமான அன்பை நினைத்துக் கொண்டேயிருக்க வேண்டும். இப்படிச் செய்து வந்தால் நாமாகப் போய் மோக்ஷத்தைத் தேட வேண்டாம். எந்தக் காலத்தில் எப்படி இருக்க வேண்டுமோ அப்படி இருந்தால், தானாக மோக்ஷம் என்கிற மதுரநிலை வந்துவிடும்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்

தலிலும் அரும்பெரும் .வீரச் செயல்கள் புரிந்தவர்களை நேரில் தெரிந்து கொண்டு அவர்களுக்கு விசேஷ சன்மானம் அளிக்க வேண்டுமென்னும் விருப்பமும் மாமல்லரின் மனத்திலே இருந்தது.

மேற்சொன்ன நோக்கங்களுடன், மானவன்மன், ஆதித்தவர்மன், சத்ருக்னன் ஆகியவர்கள் பின்தொடர, படை வீரர்களைப் பார்த்துக் கொண்டு வந்த நரசிம்ம சக்கரவர்த்தி நமது சோழ வம்சத்து வீரக் கிழவரின் அருகில் வந்ததும் சிறிது நின்று அவரை உற்றுப் பார்த்தார். "ஆ! இந்தப் பெரியவரை நாம் மறந்தே போய் விட்டோமே?" என்று மெல்லச் சொல்லி விட்டு, வெளிப்படையாக, "இது என்ன, ஐயா, இவ்வளவு பொருள்களை நீர் எப்படிச் சேர்த்து வைத்துக் கொள்ளத் துணிந்தீர்? ஒவ்வொருவரும் தம்மால் தூக்கிக் கொண்டு போகக்கூடிய அளவுதானே வைத்துக் கொள்ளலாம் என்பது நமது கட்டளை!" என்று கேட்டார்.

"சக்கரவர்த்தி! நூறு வீரர்களுடன் வந்தேன்! என்னைத் தவிர அவ்வளவு பேரும் வாதாபிப் போரில் உயிர் துறந்தார்கள்."

"ஆகா! சோழ நாட்டு வீரந்தான் வீரம்...! ஆனால் இதைக் கேட்பதற்கு நமது சேனாதிபதி இங்கில்லையே?" என்று சக்கரவர்த்தி அருகிலிருந்தவர்களிடம் சொல்லிவிட்டு, "இருக்கட்டும், ஐயா, நூறு வீரர்களும் போரில் இறந்திருந்தால் வீர சொர்க்கத்துக்குப் போய்ச் சேர்ந்திருப்பார்கள். அவர்களுக்கு இந்தப் பொருள்களினால் ஒரு பயனுமில்லையே?" என்றார்.

"பல்லவேந்திரா! எனது ஏக புதல்விக்

குத் திருமணம் செய்து கொடுக்க வேண்டும். புராதன சோழ வம்சத்தின் பெருமைக்கு உகந்த முறையில் ஸ்திரீதனம் கொடுக்க வேண்டுமென்று விரும்பி...'' என்று கிழவர் தயங்கினார்.

மாமல்லர் புன்னகையுடன் மானவன்மரைப் பார்த்து, "இவருக்கு விஷயமே தெரியாது போலிருக்கிறது. சொல்லட்டுமா?" என்று கேட்க, "வேண்டாம், பிரபு! இப்போது திடீரென்று சொன்னால் சந்தோஷ மிகுதியால் கிழவரின் பிராணன் போனாலும் போய் விடும்!" என்றார் மானவன்மர்.

உடனே மாமல்லர், "மானவன்மரே! இந்த பெரியாருடைய பெண்ணின் ஸ்திரீதனத்துக்காக நூறு யானையும், அந்த நூறு யானை சுமக்கக்கூடிய திரவியங்களும் கொடுங்கள்!'' என்று சொல்லிவிட்டு மேலே நடந்தார்.

செம்பியன் வளவன் தமது செவிகளையே நம்ப முடியாதவராய்ப் பிரமித்துப் போய் நின்றார்.

இதையெல்லாம் பார்த்துக் கேட்டுக் கொண்டு அக்கம் பக்கத்தில் நின்ற வீரர்கள், 'வள்ளல் மாமல்லர் வாழ்க! வாழ்க!'' என்ற கோஷங்களைக் கிளப்பினார்கள்.


சக்கரவர்த்தியும் அவருடைய கோஷ்டியும் அப்பால் சென்று வெகு நேரம் ஆன வரையில் அந்த வீரர்களில் பலர் மாமல்லரின் வீர பராக்கிரமங்களைப் பற்றியும் அவருடைய அரும்பெருங் குணாதிசயங்களைப் பற்றியுமே பேசிக் கொண்டிருந்தார்கள். எனினும், இடையிடையே உற்சாகக் குறைவை உண்டு பண்ணிய பேச்சு ஒன்றும் எழுந்தது. அது என்னவெனில், முன்னெல்லாம் போல் சக்கரவர்த்தியுடன் ஏன் சேனாதிபதி பரஞ்சோதி தொடர்ந்து வரவில்லை என்பதுதான்.

வீரமாமல்லரும் வீரர் பரஞ்சோதியும் நகமும் சதையும் போலவும் பூவும் மணமும் போலவும் பிரிக்க முடியாத நண்பர்கள் என்பதாக இத்தனை நாளும் அவர்களை அறிந்தவர்கள் எல்லோரும் நினைத்துக் கொண்டிருந்தார்கள். இது விஷயம் தமிழகத்து வீரர்களுக்கெல்லாம் மகிழ்ச்சியையும் பெருமையையும் அளித்து வந்தது. இராஜகுலம் எதிலும் பிறவாதவரும், இராஜ வம்சத்தோடு உறவு பூணாதவருமான ஒருவர், தமது வீரம், ஒழுக்கம், ஆற்றல் இவை காரணமாகவே சேனாதிபதிப் பதவியையடைந்திருந்ததும், அவருக்கும் சக்கரவர்த்திக்கும் அத்தகைய நெருங்கிய நட்பு ஏற்பட்டிருந்ததும் மற்ற வீரர்களுக்கெல்லாம் மிக்க பெருமையை அளித்து வந்தது.

ஆனால், அப்பேர்ப்பட்ட என்றும் அழியாத சிரஞ்சீவி சிநேகம் என்று எல்லோரும் நினைத்திருந்த சேர்க்கைக்கு, - இப்போது ஊறு நேர்ந்து விட்டதாகத் தோன்றியது. மாமல்லருக்கும் பரஞ்சோதிக்கும் மனவேற்றுமை ஏற்பட்டு விட்டதாகக் காணப்பட்டது. வாதாபிக் கோட்டையைத் தாக்கலாமா வேண்டாமா என்ற விவாதத்திலிருந்து அந்த வேற்றுமை உண்டானதாகச் சிலர் சொன்னார்கள். சிவகாமி தேவி விஷயத்தில் மாமல்லர் மிகக் கடுமையாக நடந்துகொண்டதே சேனாதிபதிக்கு ஆறாத மனப்புண்ணை உண்டாக்கிவிட்டதாகச் சிலர் ஊகித்தார்கள். இலங்கை இளவரசரும் ஆதித்தவர்மனும் சேர்ந்து போதனை செய்து மாமல்லருடைய மனத்தில் களங்கம் உண்டு பண்ணிவிட்டதாகச் சிலர் கூறினார்கள். "அதெல்லாம் ஒன்றுமில்லை! எல்லோரும் வீண் வம்பு வளர்க்கிறீர்கள்! சேனாதிபதிக்கு இடைவிடாத உழைப்பினால் தேக சுகம் கெட்டுவிட்டது. அதனால் சக்கரவர்த்தி அவரை வெளியே வராமல் கூடாரத்துக்குள்ளே இருந்து இளைப்பாறும்படி கட்டளையிட்டிருக்கிறார்'' என்று ஒரு சிலர் நல்ல காரணத்தைக் கற்பித்தார்கள்.

"நாளைக் காலையில் கொடியேற்றத்துக்குச் சேனாதிபதி வருகிறாரா, இல்லையா என்று பார்க்கலாம். கொடியேற்றத்துக்குச் சேனாதிபதி வந்தால் எல்லாச் சந்தேகமும் தீர்ந்துவிடும்!'' என்று சிலர் மத்தியஸ்தமாய்ப் பேசினார்கள்.

(தொடரும்)


* படம்: ஸ்ரீஹரி

* கைகாட்டி மரம்

● வேணிப்ரியன், திருநெல்வேலி.
? தர்மம் தலை காக்குமா, சட்டம் தலை காக்குமா?
! சட்டம்: தர்மத்தின் எல்லைவரைதான் காக்கும். தர்மம்: சட்டத்துக்கு வாய்ப்பளித்து அது தவறினால், தாமதமாக வேனும் வந்து காக்கும்; தாக்கவும் செய்யும்.

● எஸ். இந்திரபூபதி, திருச்சி - 3.
? தனுஷும் இமேஜ் வலையில் சிக்கி விடுவார் போலிருக்கிறதே...?
! இமேஜ் வலையில் சிக்கினால் கா.கொ மாதிரியான படங்களில் நடிப்பாரா...? அவரது 'ஓடிப் போலாமா?' பட அழைப்பிதழை நீங்கள் பார்க்கவில்லையே... பக்தி, பணிவு, அழகு என்று ஆரம்பித்து, இருபது எக்ஸ்பிரஷன்களை 'ஆல்பம்' மாதிரி கொடுத்திருக்கிறார்கள். இன்னொரு சூப்பர் ஆக்டர்?

உமாபாரதிக்கு ஒன்றரைக் கோடி எங்கிருந்து கிடைத்தது?


* கோடி கொடுப்பினை!

● பி. ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி.
? தற்கொலை முயற்சி சட்ட விரோதம் எனில், உடல் உறுப்புகளை வெட்டிக் கொள்வது சட்ட விரோதம் இல்லையா...?
! ஓர் உறுப்பை வெட்டிக் கொள்வது தற்கொலை ஆகாது என்பதால் சட்டத்துக்கு விரோதமல்ல; புத்திக்கு விரோதம்.

● க. பொன்னிலாசேகர், பெங்களூர் - 53.
? ரஜினி அரசியலுக்கு வருவது அவசியமா...?
! பிறந்த நாளன்று ரசிகர் தொல்லைக்கு அஞ்சி அடுத்த மாநிலத்துக்குப் போய் விடுபவர், தொண்டர்களும்

● டி. சுப்ரமணியன், மேலையூர்.
? ஆனந்தம் எதில் இருக்கிறது...?
! மனகலைதான்!

● ஜோ. ஜெயக்குமார், நாட்டரசன்கோட்டை.
? 'சோனியா பிரதமராவதை எந்தக் கொம்பனாலும் கொம்பியாலும் தடுத்து நிறுத்த முடியாது' என்று இளங்கோவன் முழங்கியுள்ளாரே...?
! கொம்பன் கொம்பியெல்லாம் எதற்கு? வாக்காளர்களே போதும் என்று சமீபத்திய மாநிலத் தேர்தல் முடிவுகள் இளங்கோவனுக்குப் பதில் சொல்கின்றனவே!


* சங்கீத மௌனம்!


* நடிப்பில் தாதா!

துரோகிகளும் தரும் தொல்லைகளைத் தாங்குவாரா என்ன...? எனவே அரசியலில் குதிக்காவிட்டாலும், ஆரோக்கிய அரசியலுக்கு மக்களுக்கு வழி காட்டலாமே!



• இருபதில் இரண்டு...!

● வி. முத்தையா, திருநெல்வேலி.

? தாதா சாஹிப் பால்கே விருது பெறப் போகும் ஹிந்தி நடிகர் தேவ் ஆனந்த் குறித்து...?

! தரமான பல கதைகளில், தரமான டைரக்ஷனில், தரமான நடிப்பை வழங்கிய மூன்று தலைமுறை நடிகர். நடிப்பில் ஆர்ப்பாட்டம் அறியாதவர். இயல்பாகவே விருது பெறத் தகுதியானவர்.



● ஜி. இந்திரா, பெங்களூர்-3.

? யூனிசெஃப் நிதி அறிக்கை (2004)இல் பீஹார் குக்கிராமத்துச் சிறுமி லலிதகுமாரியின் படம் அட்டையில் இடம் பெற்றதும், பெண்கள் கல்வியில் இந்தியா காட்டும் ஆர்வத்தை யூனிசெஃப் பாராட்டியதும் நமக்குப் பெருமைதானே?

! பெருமைதான். பள்ளி சென்று படிக்க அந்தச் சிறுமி நடத்திய போராட்டம் சிலிர்ப்பூட்டுகிறது. ஆனால், "அன்று நான் அடி வாங்கினேன்; இன்று அடி கொடுக்கும் நிலையில் இருக்கிறேன்" என்று தமது கராத்தே திறனை அவர் பறை சாற்றுவது அசந்தர்ப்பமாக ஒலிக்கிறது.

• சுய (நல) உதவி!



● ஏ.கோவிந்தன், கொளத்தூர்.

? தமிழக அரசின் மதுபானக் கடை நிலவரம் எப்படி இருக்கிறது...?

! 'பார்' புகழ வளர்ச்சியடைந்துள்ளது. பார் இல்லையெனில் கடை எதிரேயே தெரு ஓரமாக அமோக வளர்ச்சி!

● எம். ராஜேந்திரன், லால்குடி.

? மகளிர் சுய உதவிக்குழு மாநிலமெங்கும் வெற்றிகரமாக நடைபெறுகிறதே...?

! மிக்க மகிழ்ச்சி. ஆனால், அந்த வெற்றியைச் சாதகமாக்கிக் கொண்டு, அவ்வமைப்பை, அரசு சாதனைகள் பிரசாரத்துக்கென முதல்வர் பயன்படுத்த முற்படுவது தான் அக்கிரமம்.

● இ. கஸ்தூரி, அகஸ்தியர்பட்டி.

? இலக்கிய உலகம் ஆரோக்கியமாக இருக்கிறதா...?

! அது நீங்கள் படிக்கத் தேர்வு செய்யும் புத்தகங்கள், பத்திரிகைகள், கவனம் செலுத்தத் தேர்வு செய்யும் இலக்கிய விவாதங்கள், ஆகியவற்றைப் பொருத்த

படம் : மீடியா ராமு



• முறிந்த கொம்பு!

விஷயம். மேடையில் பேசிக் கொண்டிருந்த வெங்கட் சுவாமிநாதனைப் பார்த்து ''கீழே இறங்குய்யா!'' என்று கத்துவது (காவ்யா விழா) நிச்சயமாக ஆரோக்கியமானது அல்ல. விவாதங்களில் ஈடுபடுவோருக்குச் சகிப்புத் தன்மை வேண்டும். அப்போதுதான் உணர்ச்சி வசப்படாமல் வாதத்துக்கு எதிர்வாதம் வைக்க முடியும்.

• எம்.ஏ. அஜீஸ், வானூர் ★

? திருப்பதி கோயிலில் ரூபாய் ஒன்றரைக் கோடி காணிக்கையாகச் செலுத்த உமா பாரதிக்குப் பணம் எங்கிருந்து கிடைத்திருக்கும்...?

! மூன்று guess - from the people! by the people! off the people!

• க. கணேசன், பொறையாறு

? மனித நேயம் இல்லாத பக்தியாலும் பகுத்தறிவாலும் பயன் உண்டா?

! அன்பர்பணி செய்ய என்னை ஆளாக்கி
விட்டுவிட்டால்
இன்பநிலை தானே வந்தெய்தும்
பராபரமே!

- தாயுமானவர் - பகுத்தறிவும், மனித நேயமும், பக்தியும் இணைகிற ஒரே புள்ளியைத் தொட்டுக் காட்டி விட்டார்.

• துரைமுருகன், திருப்பாச்சேத்தி ❒

? எட்டாம் வகுப்பு வரை பரீட்சை ரத்து. இது மாணவர்களின் அறிவு வளர்ச்சியை பாதிக்காதா...?

! கல்வி புகட்டும் ஆசிரியர்களின் திறமையையும் சிரத்தையையும் பொறுத்தே இத்திட்டம் வெற்றி பெறும். தற்போதுள்ள ஆசிரிய - மாணவ விகிதாசாரத்தில் இதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவு.

• பாளை பசும்பொன், மகராஜநகர்.

? இசைஞானி இளையராஜாவை பின்னணி இசையில் இன்னும் யாரும் மிஞ்ச முடியவில்லையே...?

! இசைஞானியானபோதிலும் அவர் நிசப்தத்தை நேசிப்பவர்; எங்கே மௌனம் காத்தால் அது இசைமயமாய் இருக்கும் என்பது நன்கு தெரிந்தவர். இந்த அறிவே அவரை ராஜாவாக்குகிறது.

• ரேவதிப்ரியன், ஈரோடு - 1.

? பாகிஸ்தானுடன் இந்தியா போர் தொடுக்க வேண்டும் என்று தொகாடியா யோசனை கூறுகிறாரே...?

! இன்று இந்தியாவின் முதல் எதிரி பாகிஸ்தான் அல்ல; தொகாடியா. மதச்சார்பற்ற அரசியல் கட்சிகள் இதைப் புரிந்துகொண்டு செயல்பட்டால், நாடு பேராபத்திலிருந்து தப்பும்.

• ஆர்.சி. ஜெயச்சந்திரன்,
பூனாம்பாளையம்.

? சமீபத்தில் யாருக்காகப் பரிதாபப்பட்டீர்கள்?

! இருமல் மருந்து என்று கூறி, ஆரம்ப சுகாதார நிலையம் வழங்கிய டிங்சர் அயோடின்னைக் குடித்து, வாயும் வயிறும் புண்ணாகி அவஸ்தைப் பட்ட ஏராளமான பள்ளிச் சிறுமிகளின் நிலை கண்டு.

★ ரூ. 50 பரிசு பெறுபவர்:
எம். ஏ. அஜீஸ்,
கிளை நூலகம்,
வானூர் 605 109
விழுப்புரம் மா.வ

❒. ரூ.100 பரிசு பெறுபவர்:
துரைமுருகன்,
திருப்பாச்சேத்தி
630 610

பார்கின்சன்ஸ் மருத்துவ சேவையில்

(PARKINSONS DISEASE)

PARKINSONS CENTRE

பார்கின்சன் வியாதியின் குணங்கள்:

- மெதுவாக அதிகரிக்கும் மூளையின் குறைபாடு
- நடுக்கம்
- விறைப்புத் தன்மை
- தசைகளின் செயல்திறன் குறைதல்
- மற்ற வேகக் குறைபாடுகள்

இரண்டு வகையான ட்ரீட்மென்டுகள்

1. எங்கள் ஆஸ்பத்திரியில் 6 விதமான இயற்கை சிகிச்சைகள் தருகிறோம். மேலும் பார்கின்சன் ஹெர்பல் லேகியம் மற்றும் கேப்சூல் தருகிறோம்.
2. எங்களிடம் நேரில் வந்து சிகிச்சை எடுத்துக் கொள்ள முடியாதவர்களுக்கு, நோயாளியின் தற்போதைய மருத்துவ நிலையை தெரிந்து கொண்ட பின் பார்கின்சன் ஹெர்பல் லேகியமும், கேப்சூல்களும் அனுப்பி வைக்கிறோம்.
3. எங்கள் பார்கின்சன் லேகியம் அமெரிக்கா, ஸ்விட்சர்லாந்து நாடுகளுக்கு அனுப்பி வருகின்றோம். படுக்கையில் இருந்தவர்கள் எழுந்து உட்கார்ந்து, நடக்கிறார்கள்.

இதர விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்

ADYAR NATURE CURE CENTER™


Regd. Hospital

No.6, SECOND CROSS STREET, KASTHURBHA NAGAR, ADYAR, CHENNAI - 20

Ph : 24413399, 24402470 Fax : 044-24916650

E-mail : adyarnaturecure@yahoo.com web : www.adyarnaturecure.com

குறிப்பு : சாதா, ஏ/சி தங்கும் அறைகள் மற்றும் ஜெனரல் வார்டு, கலர் டீவி, போன் வசதியுடன் கிடைக்கும். பிராமணர்களால் தயார் செய்யப்பட்ட சைவ உணவு மட்டும் உண்டு. முன்பதிவு அவசியம்.



ESTD 1955 ஸ்ரீ Ph: 2706823, 2704312

"நன்றி மறவாத யாத்ரீகர்கள் துணை" Cell: 94431-77023

16 நாட்கள் கொண்டதும், அதிக வெய்யிலோ, குளிரோ, ஏன் மழையே இல்லாத சமசீதோஷ்ண கால **ஸ்ரீமகாசிவன் ராத்திரி ஸ்பெஷல்**

காசி (வாரணாசி) யாத்திரை

16-2-2004ம் தேதி சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனிலிருந்து ஒரு தனி **3 டயர்** கோச் சென்னை வாரணசி எக்ஸ்பிரஸில் இணைந்து புறப்படுகிறது. காலை காபி டிபன், பிராமணாள் போஜனம் நகர் சுற்றிப்பார்க்கும் பஸ் கட்டணம் உள்படவும் நபருக்கு ரூ **8950/-** சென்னை காசி, திரிவேணி, அலகாபாத், கயா, புத்த கயா, அரித்வார், ரிஷிகேஷ், டில்லி, ஆக்ரா, மதுரா, சென்னை. இந்த யாத்திரையில் **திருச்சி, பட்டுக்கோட்டை, பேராவூரணி, சாத்தூர், அரியலூர், பண்ருட்டி, சென்னை, கோயமுத்தூர்** முதலிய ஊர்களிலிருந்து அன்பர்கள் பதிவு செய்து உள்ளனர். இன்னும் சில பர்த்துகளே உள்ளதால் உடன் தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

12 நாட்கள் கொண்ட } **காசி விஸ்வநாத் – நேபாள் பசுபதிநாத் யாத்திரை**

19-4-2004ம் தேதி ஆரம்பம். நபருக்கு கட்டணம் ரூ **6000/- மட்டும்**

15 நாட்கள் கொண்ட **இன்னும் 10 சீட்டுகளே உள்ளன**


குஜராத், ராஜஸ்தான் மாநில பஞ்ச துவாரகை யாத்திரை

11-3-2004ம் தேதி நவஜீவன் எக்ஸ்பிரஸ் மூலம் காலை **9.35** மணிக்கு **3 டயர் கோச்சில் ரிசர்வ் செய்து அகமதாபாத்-கோமதி துவாரகை-பேட்டி துவாரகை, (குசேலர் கண்ணனை பேட்டி கண்டு குபேரனான புண்ய பூமி) காங்ரோலி, ஸ்ரீநாத் துவாரகை, டாக்கூர் துவாரகை, சோம்நாதம், போர்பந்தர், உதயப்பூர், வீராவல், வீர்பூர், ஆஜ்மீர், ஜெய்பூர், புஷ்கரம், மவுண்ட் அபு, அம்பாஜி, காந்திநகர், அக்ஷர்தாம்** உள்ளிட்ட யாத்திரைக்கு நபருக்கு கட்டணம் ரூ **7500/-** உடனே பதிவு செய்து கொண்டால் ஒரே கோச்சில் இடம் கிடைக்கும்.

8 நாட்கள் கொண்ட } **கர்நாடக மாநில சுற்றுலா**

21-1-2004ம் தேதி ஆரம்பம். நபருக்கு கட்டணம் ரூ **2750/-** மட்டுமே

ஸ்ரீ நாமகிரி டிராவெல் சர்வீஸ் (Regd)



34/A1, அக்ரஹாரம், மேலச்சிந்தாமணி, திருச்சி–2.

Prop : **K.E.NAMPILLAI** Organisors : **N.K.SEKAR, N.GANGADHARAN**

வாரா வாரம் ரூ.10,000 போட்டிக்கு நீங்கள் காட்டும் அமோக ஆதரவுக்கு ரொம்ப ரொம்ப நன்றி.

இது 7வது போட்டி. வழக்கம்போல ஜி.கே. கேள்விகள்தான். ரொம்ப ஈஸிதாங்க. கொஞ்சம் யோசிச்சு, இலேசா முயற்சி பண்ணினா போதும், விடைகளைக் கண்டுபிடிச்சிடலாம்.

விடைகளை எழுதிட்டு, உங்க கையெழுத்தையும், முகவரியையும் கூப்பனிலேயே அதற்குரிய இடத்திலே நிரப்பிடுங்க.

ஓ.கே. நாங்க ரெடி, நீங்க ரெடியா? ஜமாயுங்க.

ஆஹா! ரூ.10,000 பரிசு!



எதிரேயுள்ள கூப்பனில் இடம் பெற்றுள்ள கேள்விகளுக்குப் பதில் எழுதி, ஜனவரி 3 ஆம் தேதிக்குள் அனுப்புங்கள்.

- அனைத்துக் கேள்விகளுக்கும் சரியான பதில்கள் எழுதிய கல்கி வாசகர் ஒருவருக்கு, ரூ.10,000 பரிசு வழங்கப்படும்.
- ஒருவருக்கு மேற்பட்ட வாசகர்கள் சரியான பதில்களை எழுதியிருந்தால், இருக்கவே இருக்கிறது, குலுக்கல் முறை.
- ஆறுதல் பரிசாக 20 பேருக்குத் தலா ரூ. 100 ரொக்கப் பரிசு.

வாசகர்கள் அனைவருக்குமே

- இப்பரிசுத் தொகை வருமானவரி விதிமுறைகளுக்கு உட்பட்டது.
- கல்கி வாசகர்கள் எங்கிருந்தாலும் இதில் பங்கேற்கலாம்.
- உறையின் மீது 'ஆஹா! ரூ.10,000 (7)' என்று குறிப்பிட வேண்டும்.
- விடைகள் 3.1.2004க்கு முன்னதாக கல்கி அலுவலகத்துக்கு வந்து சேர வேண்டும்.
- போட்டி தொடர்பாக விசாரணைகள் அனுமதிக்கப்பட மாட்டாது.
- ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது.

ஆஹா! ரூ.10,000 பரிசு! குவிஸ் போட்டி கூப்பன் - 7

1. 3 நாடுகளை எல்லைகளாகக் கொண்ட வட கிழக்கு இந்திய மாநிலம்

....

2. ஷாஜகானாபாத் எனற பெயரில் உருவான வட இந்திய நகரத்தின் தற்போதைய பெயர் ....

3. 'ஐ.ஒ' (I.O) என்னும் துணைக்கோளுக்கு உரிய கிரகம் ....

4. 1985ல் அமெரிக்காவில் கண்டறியப்பட்டு 'ஏஷியன் டைகர்' என்று பெயர் சூட்டப்பட்ட உயிரினம் ....

5. 'விருமாண்டி' படத்தின் இசையமைப்பாளர் ....

6. குமரி முனையில் வள்ளுவர் சிலையின் பீடத்தில் பொறிக்கப்பட்டுள்ள குறள்களின் எண்ணிக்கை ....

பெயர்	: ....
முகவரி	: ....
	....
கையொப்பம்	: ....

கல்கி வழங்கும் கலக்கல் குவிஸ் போட்டி

'Kunjamma : Ode to a Nightingale' என்ற தலைப்பில் எம்.எஸ். பற்றிய நூல் எழுதியுள்ளார் நாட்டியக் கலைஞர் லக்ஷ்மி விச்வநாதன். இதில் தகவல்களைக் காட்டிலும் புகைப்படங்கள் அதிகம். Kunjamma எம்.எஸ்.ஸின் இல்லப் பெயர். Ode to a Nightingale ஆங்கில கவிஞர் கீட்ஸின் தலைசிறந்த கவிதைகளுள் ஒன்று... லக்ஷ்மி அனுப்பிய நான்கு தலைப்புகளுள் பதிப்பாளர்கள் (ரோலி புக்ஸ், புது டெல்லி) தேர்வு செய்த தலைப்பு இது.






அன்னை சாரதையின் 150வது பிறந்த தினத்தையொட்டி நடந்த இசை நிகழ்ச்சிகளில், வயலின் கலைஞர் ஆர்.கே. ஸ்ரீராம்குமார் பங்கேற்றார். இதில் என்ன அதிசயம் என்பீர்கள்... ஸ்ரீராம்குமார் பாட, அன்றைய தினம் வயலின் வாசித்தவர் எஸ்வரதராஜன்!

சீசன் செய்திகள்

ராமகிருஷ்ண மடம் வெளியிட்டுள்ள அன்னை - 150 மலரும் புகைப்பட நூலும் அரிய பொக்கிஷங்கள். இன்றையச் சூழலில் அன்னையை முழுதும் உணர்ந்து புரிந்து வழிபடவும் வழிகாட்டியாகக் கொள்ளவும் உதவும் கட்டுரைகள் மலரில் இடம் பெற்றுள்ளன. (குறிப்பாக நீதிபதி பிரபா ஸ்ரீதேவன், நந்திதா கிருஷ்ணா எழுதியவை) புகைப்படத் தொகுப்பில் அரிய படங்கள் எடுக்கப்பட்டபோது நிகழ்ந்த சம்பவங்கள் விவரிக்கப்பட்டுள்ளன. ஒரு படத்தை அன்னையிடம் காட்டியபோது தமது தலைமேல் அதைத் தாங்கி வணங்கினாராம். "உங்கள் படத்தையே நீங்கள் தலையில் வைத்துக் கொள்கிறீர்களே...!" என்று அருகே இருந்தவர்கள் கேட்டிருக்கிறார்கள்.. "அதிலும் நான் குருதேவரைத் தானே காண்கிறேன்'' என்று பதில் சொல்லியிருக்கிறார் அன்னை.





'பட்டர் பிரான் கண்ட கண்ண பிரான்' என்ற ஒரு ஒலிநாடாவை வெளி

• கல்யாணபுரம் ஆராவமுதன்



* ஸ்ரீ ராம் குமார்

யிட்டிருக்கிறார் கல்யாணபுரம் ஆராவமுதன். பெரியாழ்வாரின் கிருஷ்ணானுபவத்தை அழகிய ஹரிகதையாக அதில் சொல்லியிருக்கிறார். ஆழ்வார் பாசுரங்கள் என்றாலே உள்ளம் உருகிவிடும். அதிலும் பொறுக்கு மணியான பாசுரங்களைத் தொடர்ச்சியாகக் கேட்கிற போது கிடைக்கிற அனுபவ மேன்மை அரிதானது. ('தேனின் இனிய பிரான்.' என்று தலைப்புச் சூட்டியிருக்கலாமோ!) காசெட் விலை ஐம்பது ரூபாய். இத்தொகை இளைய தலைமுறையினரிடையே நன்மதிப்பீடுகள் வளர்க்கும் நோக்குடன் ஆராவமுதாச்சாரியார் ஆரம்பித்துள்ள ஷ்ரேயஸ் அறக்கட்டளைக்குச் சென்று சேர்கிறது. (தொலைபேசி 24958238).



* ராஜம் அய்யர்



* தயானந்த சுவாமி

கடந்த செப்டம்பர் மாதம் பி.ராஜம் அய்யர் அமெரிக்காவில் இருந்தார். சுவாமி தயானந்த சரஸ்வதி ஆசிரமத்தில் அவர் முன்னிலையில் முத்துஸ்வாமி தீக்ஷிதர் கீர்த்தனைகள் குறித்து மூன்று நாள் கருத்தரங்கு நடத்தினார். இதற்கான கீர்த்தனைகளை சுவாமிஜியே தேர்வு செய்து கொடுத்தாராம். இறுதி நாளன்று, கீர்த்தனைகளின் ஆழ்பொருளை சுவாமிஜி விளக்கிச் சொல்லியிருக்கிறார்.



அரவிந்தர் அன்னையின் பேரில் அனுராதா ரமணன் எழுதிய பாடல்கள், பாலமுரளிகிருஷ்ணா பாட, காசெட்டாக வெளிவந்திருக்கிறது. 'அன்பான அன்னைக்கு' என்று கடித பாணியில் தலைப்பு. அனுராதா ரமணன் வீட்டுக்குள் பாடி வந்தவை இப்போது ஒலிப்பேழையில்.

- தேவி

சிறுகதைப் போட்டி

'மயிலாப்பூர் திருவிழா' பொங்கலுக்கு முன்பு ஒவ்வோர் ஆண்டும் நடைபெறுகிறது. கோலங்கள், கலை விழாக்கள், சொற்பொழிவுகள், அந்த நாளைய திரைப்படங்கள், பாரம்பரிய நிகழ்வுகள் என, மயிலை கபாலீசுவரர் கோயிலை ஒட்டிய மண்டபங்களிலும், திறந்தவெளி முற்றங்களிலும் இவை நடைபெறுகின்றன. இதையொட்டி தமிழ்ச் சிறுகதைப் போட்டி ஒன்றையும் மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறோம்.

மயிலையின் சரித்திரப் பின்னணி, வாழ்க்கை முறை, தனித்தன்மை, பழமை, பாரம்பரியக் கலாசாரம், அன்றாட வாழ்க்கை - சிறுகதையில் அழுத்தமாகப் பதிவு செய்யப்பட வேண்டும்.

சிறுகதை 1200 வார்த்தைகளுக்கு மிகாமல் ஒரு பக்கம் மட்டுமே எழுதப்பட வேண்டும். பரிசு பெறும் சிறுகதைகள் 'மயிலாப்பூர் டைம்ஸ்'க்குச் சொந்தமாகிவிடும். அவற்றை உகந்த வகையில் பயன்படுத்திக் கொள்ள அவர்களுக்கு உரிமை உண்டு. 'தேவன் அறக்கட்டளை'யுடன் இணைந்து இந்த இலக்கிய நிகழ்வுகள் நடைபெறுகின்றன. சிறுகதைக்கான முதல் பரிசு : ரூ.5000/- இரண்டாம் பரிசு ரூ.3,000/- மூன்றாம் பரிசு ரூ.2000/- முடிவு தேதி : டிசம்பர் 29,2003. சிறுகதைகள் அனுப்ப வேண்டிய முகவரி : ஆசிரியர், மயிலாப்பூர் டைம்ஸ், 77, சி.பி. ராமஸ்வாமி சாலை, ஆழ்வார்பேட்டை, சென்னை - 600 018.

முடிவுகள் 'மயிலாப்பூர் டைம்ஸ்' இதழில் அறிவிக்கப்படும்.

* பத்ரகோடி விமானம்



அச்சோ, அழகியவா!

எல்லாத் தெய்வங்களும் அழகு வடிவங்கள்தாம். ஆனாலும் நாகப்பட்டினத்தில் நெடிய மாலாய், சங்க சக்ரதாரியாய், பட்டுப் பீதாம்பரம் அணிந்து, ஸஹஸ்ர நாமக் காசு மாலை துலங்க, திருமார்பில் மகாலக்ஷ்மியையே திவ்யாபரணமாக அணிந்து கொண்டு, சார புஷ்கரிணி தீர்த்தக் கரையில் பத்ரகோடி விமானத்தின் கீழ் கம்பீரமாகப் புன்னகையுடன் நின்று வரங்களைத் தருகிறாரே, அந்த சௌந்தர ராஜப் பெருமானின் அழகுக்கு ஈடு இணை சொல்ல முடியாது. திருநாகை அழகன் என்பது தமிழ்ப் பெயர். தாயார் சௌந்தர வல்லி.

மீண்டும் மீண்டும் தரிசன பாக்கியம் கிடைக்க வேண்டும் என்று பிரஸாதம் கொடுக்கும்போது அர்ச்சகர் வாழ்த்துவது வழக்கம். பார்க்கப் பார்க்க மீண்டும் அழைக்கும் அழகல்லவா இந்தப் பெருமாளுடையது!

சௌந்தரராஜப் பெருமாள் ஆலய கோபுரத்தைப் பற்றி ஒரு கதை. பதினேழாம் நூற்றாண்டின் மத்தியில், ஜகுல் நாயக்கர் என்பவர் நாகப்பட்டினத்துக்கு வந்தார். ஆந்திராவில் மசூலிப்பட்டினத்தில் டச்சுக்காரர்களிடம் வேலை பார்த்தவர். ஸௌந்தர ராஜப் பெருமாளைக் கண்டதும் அவருக்குப் பரவசமாகிவிட்டது. பரமபக்தராகி விட்டார். இந்தக் கோயிலுக்கு அப்போது ராஜகோபுரம் கிடையாது. தாம் முயற்சி எடுத்துக் கோபுரம் கட்ட வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டார்.

டச்சுக் கம்பெனியாரின் கப்பல்கள் நாகைத் துறைமுகத்துக்கு வரும். காரைக்கால் முதலிய இடங்கள் அப்போது டச்சு வசப்பட்டிருந்தன. கலங்கரை விளக்கமாக வழிகாட்டி வந்த புத்தவிஹாரம் இடிந்து போய் விடவே, புதிய 'லைட் ஹவுஸ்' தேவைப்பட்டது. கலங்கரை விளக்கம் கட்டச் சொல்லி ஜகுல் நாயக்கருக்குப் பணம் கொடுத்தார்கள்.

பின்பு என்ன? பத்ராசலம் ராமதாஸர் கதைதான்! பொருள் கைக்கு வந்ததும் நாயக்கர், பெருமாள் கோயிலுக்கு ஏழு நிலைகள் வைத்த கோபுரம் கட்டினார். ஆனால் சாமர்த்தியமாக ஒரு காரியம் செய்தார். கோபுரத்தின் மீதே பெரிய விளக்கு ஏற்ற ஏற்பாடு செய்தார். தவிர, நிறையத் திருப்பணிகளும் செய்திருக்கிறார்.

ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர் சௌந்தர ராஜப் பெருமானைப் பாடாமலிருப்பாரா? 'ஜம்ஜம்'என்று பாடியிருக்கிறார்.

நந்த நந்தன ராஜம் - நாக பக்தன ராஜம்
ஸுந்தரி ரமா ராஜம் - வீரவினுத மஹி ராஜம்
ஸௌந்தர ராஜம் ஆச்ரயே...

ப்ருந்தாவன ஸாரங்காவில் டி.கே.பட்டம்மாள் பாடக் கேட்டிருக்கிறேன். காதுகளில் ரீங்காரமிடும் ஒலி நயங்கள்.


பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் அற்புதமான கவிஞர். அவர் நாகை அழகிய நம்பியை பாடியிருக்கிறார்.

சேர்ந்து உனக்கு குற்றேவல் செய்திலன் என் சிந்தையில் நீ
ஆர்ந்ததற்கு ஓர் கைம்மாறு அறிகிலேன் - பூந்து வஞ்சி
மன்னா கை ஆழிவலவா வலம்புரியாய்
தென் நாகையாய் நீ அருளிச் செய்.

"உனக்கு எந்தவிதமான தொண்டும் செய்யாத என்னுடைய உள்ளத்தில் நீ எப்படியோ குடிகொண்டு விட்டாயே! இதற்கு நான் என்ன பிரதி உபகாரம் செய்ய முடியும்

ஆனந்தி

10



என்று தெரியவில்லையே" என்று உருகுகிறார்.

திருமங்கையாழ்வார் இந்தப் பிரானின் அழகில் ரொம்பத்தான் சொக்கிப் போயிருக்கிறார். பெரிய திருமொழியில் 'அச்சோப்பதிகம்' என்று பத்துப் பாடல்கள். ஒவ்வொன்றும் குழந்தையைக் கொஞ்சுவது போல, 'அச்சோ ஒருவர் அழகியவா' என்று முடிகிறது. அன்பு மிகுதியால் "அச்சச்சோ" என்கிறோமே, அது போல, அன்புக் கண் கொண்டு அழகை வியக்கிறார்.

ஆயிரம் தோளோடு இலங்கு பூணும்
அச்சோ! ஒருவர் அழகிய வா!"
அம்பவளத்திரளேயும் ஒப்பர்
அச்சோ! ஒருவர் அழகிய வா"

என்று வருணித்து சுகம் காண்கிறார்.

வம்பு அவிழும் துழாய்மாலை தோள்
மேல்
கையன ஆழியும் சங்கும் ஏந்தி
நம்பர் நம் இல்லம் புகுந்து நின்றார்.
நாகரிகர்! பெரிதும் இளையர்!

"மொட்டுக்கள் உள்ள துளசி மாலையணிந்த தோள். அதற்கு இருபுறமும் கையில் சங்கும் சக்கரமும். இவர் என் வீட்டுக்குள் வந்து விட்டாரே. எவ்வளவு நாகரிகமாக இருக்கிறார்! என்ன இளமை! பார்த்தாயா?"

செம்பவளம் இவர் வாயின் வண்ணம்
தேவர் இவரது உருவம் சொல்லில்
அம்பவளத் திரளேயும் ஒப்பர்
அச்சோ! ஒருவர் அழகியவா!

"இவருடைய இதழ்கள்தான் பவழ நிறம் என்றால், இவரும் பவளக்குன்று போல தோற்றமளிக்கிறாரே. அச்சோ! இவருடைய அழகை என்னென்பேன்!"

எட்டாவது பாடலில்,

மஞ்சுஉயர் பொன்மலைமேல் எழுந்த
மாமுகில் போன்று உளர் வந்து
காணீர்.
அஞ்சிறைப் புள்ளும் ஒன்று ஏறி வந்தார்
அச்சோ! ஒருவர் அழகிய வா!

என்று கருடன் மீது அமர்ந்து வருகின்ற கருடசேவைக் காட்சியை வியக்கிறார். பொன்மலைமீது நீர் நிரம்பிய கறுத்த பெரிய மேகம் வந்து அமர்ந்த மாதிரி இருக்கிறதாம். தோழிகளை அழைத்து "பாருங்கள்! பாருங்கள்!" என்று ஆர்ப்பரிக்கிறாள் தலைவி.

கார்த்திகை மாதத்தில் பௌர்ணமியன்று உதய கருட சேவை நடக்கும். எல்லா வைணவத் தலங்களிலும் போல, வைகுண்ட ஏகாதசி விசேஷமாக நடைபெறும்.

தை மாதத்தில் தாயாருக்கு ஆண் கோலம் அலங்காரம் செய்கிறார்கள். இது என்ன சம்பிரதாயம் என்று தெரியவில்லை.

புஷ்பேஷு ஜாதி, புருஷேஷு விஷ்ணு,
நாரீஷு ரம்பா, நகரேஷு காஞ்சி.

என்று பல்லவர் காலத்துக் கவியான பாரவி பாடினார். இந்த சுலோகத்தை மெய்ப்பிக்கும் வகையில், பங்குனி மாதம் ஏழாம் நாள் பெருவிழாவில், ஜாதிப்பூவால் கட்டப் பட்ட ஒரே ஒரு மாலையை அணிந்து உலா வருவார். சுற்றியுள்ள திருவாசி தாமரைப் பூக்களால் வேயப்பட்டு அழகனுக்கு அழகு செய்யும்.

ஆண்டு முழுவதும் விழாக்கோலம் பூண்டிருக்கும் கோயில். காலையில் பசுமாட்டைக் கொண்டு வந்து நிறுத்தி, பகவான் சந்நிதியைத் திறந்து திருப்பள்ளி எழுச்சி நடைபெறுகிறது. நிவேதனம் செய்த பழத்தைக் கொண்டு வந்து பசுவுக்குத் தருகிறார் அர்ச்சகர்.

எத்தனை அழகான காட்சி! கோபாலன் சந்நிதியில் பசுவும் கன்றும் நிற்பதே அழகாக இருக்கிறது. மஞ்சள் பூசி, குங்குமம் இட்டு அலங்காரம் செய்த அழகான பசு. ஜீவன்களை, தடுமாறும் ஆன்மாக்களைத் தன்வயமாக்கிக் கொள்கிறானே பகவான். அதுதான் சௌந்தர்யம்.

அந்தக் கருணைதான், பகவானின் அளப்பரிய அழகு.

(தொடரும்)



- சுதா, பொள்ளாச்சி

இப்போது வேகமான விற்பனையில்...

ஜோதிடப் பிதாமகர்

பாலஜோசியர்

வித்வான் வே.லட்சுமணன்



மிகத் துல்லியமாகக் கணித்த

2004 உங்களுக்கு எப்படி?

முன் 6-மாதம் பின் 6-மாதம் நற்பலன்கள் எப்படி இருக்கும் என்று துல்லியமான சதவிகிதத்தோடு கணித்திருக்கிறார்!

துர்ப்பலன் ஏற்படாமல் எப்படி சமாளிப்பது என்று வழிகாட்டியும் இருக்கிறார்!

ஒவ்வொரு ராசிக்கும் தனித்தனி புத்தகம்!

தொடர்பு முகவரி : சாருபிரபா பப்ளிகேஷன்ஸ்,
105, ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை-600 014.
தொலைபேசி : 28484242, 28487858



காதல் கிறுக்கன்

தொட்டுப் பிடித்து விளையாடும் இளம் பருவத்தில் "இவனுக்கு இவளைத்தான் கல்யாணம் பண்ணனும்" என்று பெற்றோர்கள் பேசி வைக்கிறார்கள். வளர்ந்த பருவத்தில் அதை உடும்பாகப் பிடித்துக் கொண்டு, கொலை செய்வது வரை செல்லும் காதல் கிறுக்கன் ஒருவனின் கதை.

படம் தொடங்கிய சிறிது நேரத்தில் இது 'க்ரைம் ஸ்டோரி' என்ற எதிர்பார்ப்பு. அடுத்த சில நிமிடங்களில் இது மன நோயாளியைப் பற்றிய கதை. அட... அதுவுமில்லைப்பா என்று, இடைவேளை வரை ஆச்சரியமான திருப்பங்களை அளித்திருக்கிற இயக்குனரைப் பாராட்டலாம்.

ஆனால் ஒரு மனநோய்க்கு உள்ளானவரை இவர் மனநோயாளியா? இல்லையா? என்பதைக் கூட ஒரு மனநல மருத்துவரால் அறிய முடியாதா என்ன? இடைவேளை வரை சீராகச் செல்லும் திரைக்கதை, பிறகு தட்டுத் தடுமாறி தடம் புரள்வதால், மனதில் பெரிதாக எதுவும் ஒட்டவில்லை. கிளைமாக்ஸ் உட்பட.

"பத்திரிகைக்காரங்களைக் கூட்டிட்டு வந்தேனே... இருக்காங்களா? இல்லை அவங்களையும் உள்ளத் தூக்கிப் போட்டுட்டாங்களா?" என்ற வழக்கமான பார்த்திபன் பஞ்ச், படம் முழுக்க.

ஸ்பிலிட் பர்ஸனாலிட்டியாக (மனநோய்க்குப் பெயராம்) அவர் கத்தும்போதும், கொலை வழக்கிலிருந்து விடுதலையாகி, 'பழனியும் நான்தான், சரவணனும் நான் தான்' என்று தனக்கு விடுதலை வாங்கித் தந்த சீனியர் லாயர் வினித்திடம் எகிறும் போதும், நமக்குள் ஏற்படும் 'பார்த்திப காதலை'த் தவிர்க்க முடியாது.

'பாரதி கண்ணம்மா'வில் ஆரம்பித்த பார்த்திபன் - வடிவேல் காமெடிக் கூட்டணி இந்தப் படத்திலும் ஆட்சியைப் பிடித்திருக்கிறது.

நாயகி ரிச்சா முந்தைய படங்களை விட இதில் தேறியிருக்கிறார் என்பது தமிழ் ரசிக மகாஜனங்களுக்குச் சொல்லும் நற்செய்தி!

- மிஸ்டர் வீ

சூப்பர் பாட்டி!



"மணி ரத்னம் ரொம்பத் திறமைசாலி. 'உயிரே' படத்தில் நடித்தது மறக்க முடியாத அனுபவம்'' என்கிறார் ஸோரா சேகல். 'உயிரே' படத்தில் ப்ரீதி ஸிண்டாவின் பாட்டியாக வந்து, டான்ஸ் கூட ஆடுவாரே அதே சூப்பர் பாட்டிதான். வயது தொண்ணூற்றியொன்று. ஆனால் இன்றளவும் உலகம் எங்கும் பறந்து கொண்டிருக்கிறார். இந்தி மற்றும் ஆங்கிலப் படங்களில் தூள் கிளப்பிக் கொண்டிருக்கிறார். அண்மையில் சென்னையில் நடந்த 'அதர் ஃபெஸ்டிவல்' கலைவிழாவுக்கு வந்திருந்தார்.

"முதலில் மணி ரத்னம் பட அனுபவத்தைப் பற்றிச் சொல்லுங்கள்."

"ஒவ்வொருவரையும் நன்றாக எடை போட்டு வைத்திருக்கிறார். என்ன காட்சி என்பதை விளக்கி விட்டு ''நீங்களே நடியுங்கள்'' என்று சொல்லி விடுவார். பின் அதை இம்ப்ரூவ் செய்வார். நிஜமான சிருஷ்டி கர்த்தா அப்படித்தான் இருப்பார். ஒருதடவை ஒரு பாட்டை முணுமுணுத்துக் கொண்டே ஷூட்டிங் ஸ்பாட்டுக்கு வந்தேன். அதைக் கவனித்து விட்டார் மணி ரத்னம். நான் நடிக்க வேண்டிய காட்சியில், "இப்போ பாடினீங்களே, அது மாதிரி ஏதாவது பாடிக் கொண்டே வாருங்கள்'' என்றார். எனக்கு சட்டென்று ஒரு பாட்டும் நினைவுக்கு வரவில்லை. கடைசியில் ஹோலிப் பண்டிகையின் போது பாடும் பாட்டு ஒன்றைப் பாடுவதாகச் சொல்லி, பாடிக் காட்ட, "இது கல்யாண வீட்டு காட்சி, எனவே ஹோலிக்குப் பதிலாக கல்யாணம் என்று மாற்றிப் பாடுங்கள்'' என்றார்.

சூப்பர் பாட்டியின் உற்சாகத்துக்குக் காரணம் கட்டுப்பாடான உணவுப் பழக்கம் தானாம். நொறுக்குத் தீனி எதுவும் கிடையாது. பால், வேக வைத்த காய்கறி, சப்பாத்தி, பழங்கள் என்று மிதமாகச் சாப்பிடுகிறாராம்.

"சமீபத்தில் ஒரு இந்திப் படத்தில் ஜீன்ஸ், டீ-ஷர்ட் அணிந்து, பிஸ்டலுடன், மோட்டார் பைக் ஓட்டினீர்களே! கஷ்டமாக இல்லையா?"

"நடிக்க வந்து விட்ட பிறகு, நாம் எதற்குமே தயாராக இருக்க வேண்டும். இதோ இந்தக் கணத்தில், பொலபொலவென்று கண்ணீரை வரவழைக்க முடியும்."

நாம் ஆர்வத்துடன் அவர் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த சில விநாடிக்குள், அட! நிஜமாகவே, துக்கம் தொண்டையை அடைக்க கண்ணீர்த் துளிகள் உருண்டு விழுந்தன. நாம் ஆச்சரியப்பட்டு அவரையே பார்த்துக் கொண்டு இருக்க, சட்டென்று வயிற்றில் தமது விரல்களால் குத்தி, "என்ன! என் சோகம் உங்களையும் பாதித்துவிட்டதா? எல்லாம் நடிப்புதானே!'' என்று சொல்லி, கண்ணீர் விட்ட சுவடே தெரியாமல், பலமாய்ச் சிரிக்கிறார்.

"எப்படி... உங்களால் நினைத்த மாத்திரத்தில் இப்படிக் கண்ணீர் விட முடிகிறது?"

"என் கணவர் காமேஷ்வர் நல்ல ஓவியர். சிறந்த டான்ஸரும் கூட. அவரது ஓவியங்களைக் காதலிக்க ஆரம்பித்து, பின் அவரையே, காதலித்தேன். இந்தி சினிமாவில் ஆர்ட் டைரக்டராகப் பணிபுரிந்த மிக நல்ல மனிதர். அவர் தற்கொலை செய்துகொண்டு விட்டார். அவரது நினைவுகள், என் கழுத்துக் குழியில் தாயத்து மாதிரி இருக்கிறது. அந்த நினைவுகளைத் தட்டினால் போதும், எந்தக் கணத்திலும் அழுகை வந்து விடும்."

சந்திப்பு : **எஸ். சந்திரமௌலி**

படம் : **அன்வர்**



எங்க ஊரு மேட்டரு!

கோயில்கள் நிறைந்த தென்சென்னையின் மற்றுமொரு ஆன்மிக அருந்தலம், வட திருநள்ளாறு என அழைக்கப்படும் விஸ்வரூப சர்வ மங்கள சனீஸ்வர பகவான் திருக்கோயில். ஆதம்பாக்கம் ஈ.பி. காலனியில் உள்ள ஸ்ரீ தேவி நாகமுத்து மாரியம்மன் கோயிலில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்தச் சனீஸ்வர பகவான், ஆறடி உயரத்தில் சாந்தம் தவழ அருட்பாலிக்கிறார். இந்த வரப் பிரசாதியைத் தரிசித்தால், கிரகதோஷம் நீங்கும் என்பதற்கு,



• சர்வமங்கள சனீஸ்வரர்

இங்கு வரும் பக்தர் கூட்டமே சாட்சி!

- ஜெயா சுந்தரம், சென்னை - 88.

எண்ணிக் கொள்ளுங்கள் எவ்வளவு என்று... 'ஹிந்து மிஷன்', 'பாலாஜி', 'ஏ.ஜி' 'ஃபிலிப்ஸ்', 'தீபம்', 'அப்பல்லோ', 'க்ளினிக்..!' மொத்தம் ஏழு! இவையனைத்தும் சென்னை, மேற்கு தாம்பரத்தின் முடிச்சூர் சாலை, சண்முகம் சாலை, ராஜாஜி சாலை ஆகிய மூன்று தெருக்களில் உள்ள மருத்துவமனைகள்.

- சேலையூரான், சென்னை - 73.

தமிழகத்தின் ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம் உள்ளது. சென்னைப் பெருநகரத்தில், அதிகமான வழக்குகள் தாக்கல் செய்யப்படுவதால், வடசென்னை, தென் சென்னை என இரண்டு மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் ஒரு விசேஷம். இரண்டு மன்றங்களும், மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையமும், தென்சென்னையில், மயிலாப்பூர் இராமகிருஷ்ண மடம் சாலையில் அமைந்துள்ளன.

- சிலமலை சுந்தரம், சென்னை - 4.

மடிப்பாக்கம் யூனியன் கார்பைடு காலனிவாசியான ரமா நரஸிம்மன், தமது பகுதியிலிருக்கும் சுமார் முப்பது குழந்தைகளுக்கு, பக்திப் பாடல்களைப் பாட அழகாகப் பயிற்சி தந்து வருகிறார். ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமம், ஸ்ரீ தேசிகரின் ஸ்லோகங்கள்,





* ஸ்லோக மடம்

ஸ்ரீ ஆதிசங்கரரின் ஸ்லோகங்கள், ஸ்ரீ பகவத் கீதை போன்றவற்றை இலவசமாகச் சொல்லிக் கொடுக்கிறார்.

"நான் சொல்லிக் கொடுப்பதில் பெருமையில்லை. சின்னஞ்சிறு குழந்தைகள் ரொம்ப சிரத்தையாக, எல்லா ஸ்லோகங்களையும் பாவத்துடன் பாடும்போது, கேட்பவர்கள் மெய் சிலிர்த்துப் போகிறார்கள். ஸ்ரீ அஹோபில மட ஜீயர், குழந்தைகள் பாடுவதைக் கேட்டு மகிழ்ந்து ஆசீர்வாதம் செய்து அருளியதை பாக்கியமாகவே நினைக்கிறேன்" என்கிறார் ரமா நரஸிம்மன்.

- ஜோதிலக்ஷ்மி ராமகிருஷ்ணன்
சென்னை - 91.

அந்தப் பக்கம் போனாலே மூக்கைப் பொத்திக் கொண்டு, ஓடுவார்கள். குப்பையும், சாக்கடைக் கழிவுகளுமாக பன்றிகள் மேய்ந்து கொண்டிருந்த குளம் அது. ஆனால் இன்றைக்கு புல்வெளியும் பூங்காவுமாக, வற்றாத நீர்வளம் கொண்டு மிக அழகாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது, பம்மல் சூரியம்மன் கோயில் குளம்.

ஸ்ரீ சங்கரா சுகாதார மையம், ஸ்ரீ சங்கர வித்யாலயா, சென்னை கோட்டை ரோட்டரி சங்கம், எக்ஸ்னோரா இன்னோவேட்டர்ஸ் கிளப் ஆகிய தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் சூரியம்மன் கோயில் குளத்தைத் தூர் வாரி, சீரமைக்க முடிவு செய்து வேலையில் இறங்கியதும், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் மற்றும் பொதுமக்களின் பேராதரவும் சேர்ந்துகொண்டது. அப்புறம் என்ன? கழிப்பறையாக இருந்த குளம், திருக்குளமாக மாறி விட்டது.


கடந்த 2001ம் ஆண்டு டிசம்பர் மாதம், இந்தக் குளத்தை காஞ்சி காமகோடி ஜயேந்திர சுவாமிகள் பொதுமக்கள் பயன்பாட்டுக்கு அர்ப்பணித்தார்.

இன்னொரு முக்கியமான விஷயம். கோயில் குளத்தைச் சீராக்கியது மட்டுமில்லாமல், அதை மழை நீர் சேகரிப்பு மையமாகவும் மாற்றியமைத்ததால், சுற்றியுள்ள பகுதிகளில் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்ததுடன், நீரும் சுவையாக மாறிவிட்டது.

- பம்மல்வாசிகள்



* கழிவுக்குட்டையாக...



* அழகிய குளமாக...

“நீர் நல்ல ரசிகன்!”



* 'எதிரொலி' - படத்தில் கே.ஆர்.விஜயா, சிவாஜி கணேசன், நாகேஷ், சிவகுமார்

நன்றி : ஃபிலிம் நியூஸ் ஆனந்தன்

ஒரு நாள் மாலை, காரில் போய்க் கொண்டிருந்தபோது, மைலாப்பூர் ஃபைன் ஆர்ட்ஸ் வாசலில் ஏகப்பட்ட கார்கள் நின்று கொண்டிருந்தன. புல்லாங்குழல் வித்வான் மாலியின் கச்சேரி என்று போஸ்டர்கள் மூலம் தெரிய வந்தது.

காரை நிறுத்திவிட்டு உள்ளே போனேன். சபாவின் செகரட்டரி ராஜ கோபால், வரவேற்று முதல்வரிசைக்கு அழைத்துக் கொண்டு போனார்.



மேடையில் மாலி உட்கார்ந்து கொண்டு இருந்தார். ''நாகேஷா? சௌக்கியமா?'' என்றார் மாலி.

“என்னை உங்களுக்கு ரொம்பப் பிடிக்குமோ?'' என்று மாலி கேட்க, நான், ''உங்க புல்லாங் குழல் வாசிப்பு ரொம்பப் பிடிக்கும்'' என்றேன்.

''அப்படியா! நீர் நல்ல ரசிகன்!'' என்றார்.

புன்னகையோடு ஓர் இருக்கையில் உட்கார்ந்து கொண்டு சுற்றும் முற்றும் பார்த்தேன். இன்னும் கச்சேரி ஆரம்பிக்கவே இல்லையோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்தும்படியான சூழ்நிலை அங்கே நிலவியது. எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

விசாரித்தபோது விஷயம் தெரிந்தது. மாலி வந்தது கொஞ்சம் லேட். அரங்கம் நிரமபிவிட்டது. மேடையில் உட்கார்ந்தவர், செகரட்டரியைக் கூப்பிட்டு, '' நீ ஒரு சின்ன காரியம் பண்ணு. உனக்கு என் ஃப்ளூட் தெரியுமோன்னோ? அதை மறந்து வீட்லயே வெச்சிட்டு வந்துட்டேன். நீ போய் அதை எடுத்துண்டு வந்துரு'' என்ற போது, அவருக்கு அதிர்ச்சி.

மாலியின் வீடு தாம்பரத்தில். காரை எடுத்துக் கொண்டு போய், அவரது அத்தனை புல்லாங்குழல்களையும் எடுத்துக் கொண்டு வந்துவிட்டார் அவர். ஆனாலும் மாலி கச்சேரியை ஆரம்பிப்பதாகக் காணோம்.

ரசிகர்கள் மத்தியில் பொறுமை இழந்து இலேசான சலசலப்பு ஏற்பட்டது. ''நான் வாசிக்கிறது எனக்காகதான். அடுத்தவர்

களுக்காக நான் வாசிப்பதில்லை. வேற ஜோலி இருக்கறவர் கிளம்பலாம்" என்றார் மாலி.

'என்னடா! மாலியோட கச்சேரி கேட்கலாம்னு ஆசையா வந்தால் இப்படி ஆகிவிட்டதே' என்ற வருத்தம் எனக்கு.

நான் புறப்பட்டபோது, "கச்சேரி கேட்கணும்னு வந்தீர்! கேட்க முடியலையேன்னு வருத்தமா?" என்று கேட்டார். "ஆமாம்" என்று தலையை ஆட்டினேன்.

"கார்லதானே வந்திருக்கேள்?"

"ஆமாம்!"

உடனே பக்கவாத்தியக்காரர்களிடம், "வாத்தியங்களை எடுத்துண்டு, நாகேஷ் கார்ல ஏறிக்கோங்க" என்றார்.

எனக்கு ஒண்ணுமே புரியவில்லை.

தாமும் என்னுடைய காரிலேயே ஏறிக்கொண்டார்.

"வீட்டுக்குப் போகலாம்" என்றார்.

"உங்க வீட்டுக்கா?"

"இல்லே நாகேஷ். உம்ம வீட்டுக்குத்தான்!"

எனக்குள்ளே இன்ப அதிர்ச்சி!

என்றால் ஃப்ளூட் என்று பெருமையாய்ச் சொல்லும்படியான மகா வித்வான் மாலி. அப்பேற்பட்டவரது வாசிப்பைக் கேட்பதற்காக, நூற்றுக் கணக்கான ரசிகர்கள் அரங்கத்துக்கு டிக்கெட் வாங்கிக் கொண்டு வந்து, அவரது குழலோசையில் லயிக்கக் காத்திருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் கிடைக்காமல் போய்விட்ட ஓர் அற்புதமான வாய்ப்பு, எனக்குக் கிடைத்திருக்கிறது. அதுவும் எப்படி? அந்த ஜீனியஸே, என்கூட என் வீட்டு ஹாலில், உட்கார்ந்து கொண்டு என் ஒருவனுக்காகவே ஒரு கச்சேரி பண்ணியிருக்கிறார் என்றால், அது எவ்வளவு பெரிய பாக்கியம்? அதற்காக நான் என்ன



* கச்சேரியில் மாலி

மாலியை வரவேற்று, வீட்டுக்குள் அழைத்துக் கொண்டு சென்றேன். பக்கவாத்தியக்காரர்கள் பின் தொடர்ந்தனர்.

விஸ்தாரமான ஹாலில் நடுநாயகமாக உட்கார்ந்த மாலி, தமது புல்லாங்குழலை எடுத்து வாசிக்க ஆரம்பித்தார்.

எனக்கு ராகம், தாளம் எதுவும் தெரியாது, என்றாலும்கூட, ஒரு பாமரனாக அமர்ந்து, அவரது இசையை ரசிக்க முடிந்தது. மனம் லயித்து நான்-ஸ்டாப் கச்சேரி. இரண்டரை மணி நேரம் வாசித்தார் மாலி.

வாழ்க்கையில் இந்த நாளை என்னால் மறக்கவே முடியாது. ஃப்ளூட் என்றால் மாலி. மாலி

புண்ணியம் செய்திருக்கிறேன்.' என்று உணர்ச்சி வசப்பட்டு, என் சந்தோஷத்தைத் தெரிவித்தேன். மாலியின் ரியாக்ஷன் ஒரு புன்னகை மட்டுமே.

இசைக் கலைஞர்கள் பற்றிச் சொல்லிக் கொண்டு வருகிறபோதே இன்னொருவரையும் இங்கே நான் குறிப்பிட்டு ஆக வேண்டும். அவர் தாராபுரம் சுந்தரராஜன். எங்கள் ஊர்க்காரர். இளம் வயதிலேயே அபார இசைத்திறமை படைத்தவர். தாராபுரத்தில் மரியாதையும் மதிப்புமாய் வாழ்ந்த தேவநேசன்

22

நாகேஷ்

என்பவருடைய மகன்தான் சுந்தரராஜன்.

தாராபுரத்தில் ஒரு திடலில் அவ்வப்போது பொது நிகழ்ச்சிகள் நடைபெறும். அப்போது, சில சமயங்களில் பத்து வயதுச் சிறுவன் ஒருவன், கணீரென்று பாடுவான். அவன் பாடுவதைக் கேட்பதற்கென்றே, பெரிய கூட்டம் கூடும். அந்தச் சிறுவன், அற்புதமாய்த் தமிழ்ப் பாடல்கள் பாடுவான் என்பது சிறப்பு. அவனது ராக ஆலாபனையும், அழகான உச்சரிப்பும் பிரமிக்க வைத்துவிடும். அந்த அற்புதக் குரல் சுந்தர ராஜனுடையதுதான்.

இசை ஆர்வம் காரணமாக, அண்ணாமலைக் கல்லூரியில் இசை பயின்றார். பிரபல தண்டபாணி தேசிகரிடம் சிஷ்யராக இருந்து. மெத்தப் பாராட்டுப் பெற்றவர். ராகங்களில் மிகக் கஷ்டமானது சக்ரவாகம் என்று சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். அதில்கூட அசத்திவிடுவார் சுந்தரராஜன்.

நான் திரையுலகில் சில இயக்குனர்களுக்கும், இசையமைப்பாளர்களுக்கும் அவரை சிபாரிசு செய்தேன். ஜெயகாந்தன், கே.எஸ். கோபாலகிருஷ்ணன் என்று ஒரு சிலர் வாய்ப்பும் கொடுத்தார்கள். ஆனால், பெரிய அளவில் வாய்ப்புகள் கிடைக்கவில்லை. தாராபுரம் சுந்தரராஜன் என்கிற திறமைசாலியை, திரையுலகம் பயன்படுத்திக் கொள்ளத் தவறிவிட்டது, துரதிருஷ்டம் தான்.

தாராபுரம் சுந்தர ராஜனுக்குத் தமது வீட்டில் ஒரு டெலிபோன் வைத்துக் கொள்ள வேண்டும் என்று ஆசை. ஆனால் வெகு நாட்களுக்கு அவருடைய ஆசை நிறைவேறவே இல்லை. கடைசியாக அவர் வீட்டுக்கு டெலிபோன் இணைப்பு கிடைத்தது. தம்முடைய தலைமாட்டிலேயே டெலிபோனை வைத்துக் கொண்டு அது ஒலிக்கும்போது, ஒரு குழந்தைபோல ஆர்வத்துடன் எடுத்துப் பேசுவார். தமது வீட்டுத் திருமணத்துக்குக்கூட, அனைவரையும் டெலிபோன் செய்து, அழைத்தார். ஆனால் பாவம்! டெலிபோன் வந்த சில நாட்களிலேயே அவர் இறந்துவிட்டார்.

எனக்குக் கொஞ்சம் சங்கீத ஆர்வம் இருக்கிறது என்றால், அதற்குக் காரணமானவர் தாராபுரம் சுந்தரராஜன்தான். என்னை கச்சேரிகளுக்கு அழைத்துக் கொண்டு போய், சங்கீதத்தை ரசிக்க வைத்தவர் அவர்தான்.

(சிரிப்பு தொடரும்)

பாச வல்லினம்!



பா.ராகவன் எழுதியதோ 'மெல்லினம்'. அந்தப் பிள்ளை மனசின் உணர்ச்சிகளோ 'இடையினம்'. எங்கள் நெஞ்சில் விழுந்ததோ பாச உணர்வுகளாய் 'வல்லினம்'.

- மயிலை கோபி, சென்னை

ஜக்குவை ஒவ்வொரு வீட்டிலுள்ள குழந்தையுடனும் ஒப்பிடலாம். மிகவும் யதார்த்தமான சொற்கட்டு. பா.ராகவனுக்குப் பாராட்டு!

- ஹரிப்ரியா, சென்னை

சிறார்களிடமிருந்து பெரியவர்கள் கற்றுக் கொள்ள வேண்டிய விஷயங்கள் எவ்வளவு இருக்கின்றன. ஜக்குவால் வாழ்க்கை சூட்சுமத்தைக் கற்றோம்.

- ப. ராமகிருஷ்ணன், காயக்காடு

'சோப்புக்குமிழின் இடையில் கண்ணுக்குத் தெரியாமல் செருகப்பட்ட ஊசியொன்று அவன் மானசீகத்துக்குத் தென்பட்டது' என்ற வரி அற்புதம்!

- வி. திலகம், திருநெல்வேலி



GOKULAM

The magazine for children

CELEBRATE NEW YEAR WITH A CHINESE PLAY

-Cover Story

CALENDAR 2004

JANUARY 2004 Rs.6/-

SPECIAL SUPPLEMENT
16-PAGE BOOKLET
BY FIRST TIME
WRITERS!

NEW SERIAL

THE GUAVA TREE CAPER



For Subscriptions mail to :
Gokulam, 47-NP, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600097
E-mail : subscription@kalkiweekly.com

நர்சுக்கு மவுசு!

கம்ப்யூட்டர் இன்ஜினியர்களையும், ஐடி. நிபுணர்களையும் "போங்கப்பா... ஊரைப் பார்த்து" என்று திருப்பி அனுப்பிக் கொண்டிருக்கும் அமெரிக்கா, வெள்ளைச் சீருடை நர்ஸ் தேவதைகளுக்கு மட்டும், "உங்கள் சேவை யு.எஸ்ஸுக்குத் தேவை" என்று சிவப்புக் கம்பளம் விரித்து, பச்சைக் கார்டையும் கொடுத்து,



* இன்டர்வியூ நடத்துகிறார் ஆருத்ரா

வண்ணமயமாக வரவேற்பைத் தருகிறது. காரணம்... அமெரிக்காவில் அதிக வேகமாக சூடு பரப்பிக் கொண்டிருக்கும் ஹெல்த் கேர் பிஸினெஸ்!

இதுநாள் வரை, பிலிப்பைன்ஸ் நாட்டு நர்ஸுகளுக்குத்தான் அமெரிக்காவில் அதிக அளவில் வேலை கிடைத்து வந்தது. தற்போது அமெரிக்க மருத்துவத் துறையின் முழுக் கவனமும் இந்திய நர்ஸுகள் பக்கம் திரும்பியிருக்கிறது. காரணம், ஊருக்கே தெரிஞ்சதுதான்.

இந்தியர்கள் வம்பு தும்புக்குப் போக மாட்டார்கள்; மாங்கு மாங்கு என்று உழைப்பார்கள்; பொறுமைசாலிகள்; தொழில் திறமை மிக்கவர்கள்; துடிப்பானவர்கள்... இப்படி ஒரு சமர்த்து சர்டிஃபிகேட் எடுத்திருக்கிறோமே!

உடனே அப்ளை பண்ணிட வேண்டியதுதான்" என்று பேனாவைத் தேடாதீர்கள். ஏகப்பட்ட சங்கதிகளைத் தாண்ட வேண்டியிருக்கிறது.

இந்தியா முழுக்க உள்ள, முறையான படிப்பும் அனுபவமும் உள்ள துடிப்பான நர்ஸுகளைத் தேர்ந்தெடுத்து, பயிற்சி கொடுத்து, முழுக்க முழுக்க இலவசமாக அனுப்பும் பணியில் மிகச் சிறப்பாக ஈடுபட்டுள்ள குளோப்மெட் ரிஸோர்சஸ் நிறுவனத்தின் ஆபரேஷன் மேனேஜர் ராம்குமாரைச் சந்தித்தபோது, பல வியப்பூட்டும் தகவல்களைத் தெரிவித்தார்.

"வளர்ந்து வரும் நாடுகளில் உள்ள பலருடைய கனவு, சொர்க்க பூமியான அமெரிக்காவில் செட்டில் ஆவதுதான். குறிப்பாக, இந்திய நர்ஸுகளுக்கு வெளிநாட்டில் வேலை என்பதுதான் வாழ்வின் லட்சியமாக இருக்கிறது. ஆனால் பல பேர், போலி ஏஜெண்ட்டுகளிடம் பணம் கொடுத்து ஏமாந்து போகிறார்கள். இனி, அப்படிப்பட்ட ஆபத்

நம்ம ஊர் மருத்துவமனையில், சுமார் நான்காயிரம் சம்பளம் பெறும், நர்ஸுக்கு, அங்கே தரப்படும் சம்பளம் என்ன தெரியுமா? குறைந்தபட்சம் இரண்டு லட்ச ரூபாய்... மாசத்துக்கு அய்யா, மாசத்துக்கு!

"அதைச் சொல்லு!

* ராம்குமார்



தான குறுக்குவழிகளே தேவையில்லை. அமெரிக்காவின் இன்டர்நேஷனல் மெடிக்கல் ஸ்டாஃபிங் கம்பெனியின் அரசு அங்கீகாரம் பெற்ற இந்தியக் கிளையான எங்களை அணுகி னாலே போதும்" என்கிறார் ராம்குமார்.

இப்படிச் சேர விரும்புவர்களுக்கு விதிக்கப் பட்ட தகுதிகள் என்னென்ன?

"வயது வரம்பே கிடையாது என்பது ஆறுத லான செய்தி. பி.எஸ்ஸி நர்ஸிங் அல்லது டிப்ளமா படித்து மூன்று வருட களப்பணி அனுபவம் இருந்தாலே போதும். விண்ணப் பங்களைப் பரிசீலித்து, முதல் கட்ட இன்டர்வியூ நடத்துவோம். அதில் தேறியவர்களை, சி.ஜி.எஃப்.என்.எஸ் (கமிஷன் ஆஃப் கிராஜு வேஷன் ஃபார் ஃபாரின் நர்ஸிங் ஸ்கூல்ஸ்) என்ற தேர்வு எழுதத் தயார் செய்வோம். அதற்கான பாடத் திட்டம், பயிற்சி வகுப்புகள் எல்லாமே இலவசமாகத் தரப்படும். மருத்துவ அறிவு சம்பந்தப் பட்ட அந்தத் தேர்வில் தேறிவிட்டால், பிரிட்டிஷ் தூதரகம் நடத்தும் 'ஐ.ஈ.எல்.டி.எஸ்' என்னும் ஆங்கிலப் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்துவோம். மருத்துவத் தேர்வில் சுலப மாகத் தேறிவிடும் நர்ஸ்கள், வசமாக மாட்டிக் கொள்வது இந்தத் தேர்வில்தான். எனவே, எங்களிடம் பயிலும் நர்ஸுகளுக்கு, ஆங்கிலச் சிறப்புக் கல்வியைப் போதிக்கிறோம். அந்தப் பொறுப்பை லயோலா கல்லூரி ஏற்று, சிறப் பாகச் செய்து வருகிறது" என்கிறார் ராம்குமார்.

இரண்டு கட்டத் தேர்வுகளிலும் வெற்றி பெற்றவர், அமெரிக்காவுக்குப் போய் விட முடியாதாம். அமெரிக்க சீனியர் நர்ஸ் ஒருவர் ஃபோன் மூலம் இன்டர்வியூ செய் வார். அதில் தேறியதும், சம்பந்தப்பட்ட நர்ஸ், பணியிலிருக்கும்போது எடுக்கப்பட்ட வீடியோ சி.டி அனுப்பி வைக்கப்பட்டு, அதுவும் பரிசீலிக்கப்படுமாம். அதிலும் ஓ.கே ஆகிவிட்டால், அப்பாயின்மெண்ட் ஆர்டர் பக்காவாக, பத்தே நாளில் கிடைத்து விடுமாம்!

அப்புறமென்ன, மூட்டை முடிச்சுகளைக் கட்டிக் கொண்டு, விசா வரும் வரை டாலர் கனவுகளுடன் காத்திருக்க வேண் டியதுதான்!



"எல்லாம் சரி... பரீட்சைக் கட்டணத் திலிருந்து, விமான டிக்கெட் வரை நர்ஸ் ஒருவருக்கு ஆகும் கிட்டத்தட்ட மூன்றரை லட்சம் செலவை, சர்வீஸ் கட்டணம், சம்பளம் பிடித்தம் போன்ற எந்த நிபந்தனை யும் இல்லாமல் முழுக்க முழுக்க ஏற்றுக் கொள்வதாகச் சொல்கிறீர்களே... நம்ப லாமா?" என்றால் புன்னகையுடன் பதில் தருகிறார் மெடிக்கல் ஸ்டாஃபிங் மேனேஜர் ஆருத்ரா ஸ்ரீகாந்த்.

"நம்புங்கள்... எங்களுடைய சேவைக்கு ஆகும் கட்டணத்தையும் அமெரிக்க மருத்துவமனைகளே ஏற்றுக் கொள்கின்றன என்பதால், நாங்கள் கட்டணம் எதுவும் வசூலிப்பதில்லை. இந்த வருஷத்தின் இறுதிக் குள் இருநூறு நர்ஸ்கள் எங்கள் மூலம் அமெரிக்கப் பணியில் அமர்த்தப்படுவார் கள். அவர்கள் ஒவ்வொருவரும் மாதம் இரண்டு லட்சம் சம்பாதித்து, குடும்பத்துக்கு அனுப்பினால், எத்தனைக் கோடி அந்நியச் செலவாணி வந்து குவியும் என்று நீங்களே கணக்கிட்டுக் கொள்ளுங்கள்" என்கிறார்.

நர்ஸுகளுக்கு அடுத்தபடியாக, ஃபார் மஸிஸ்ட், ஃபிஸியோதெரபிஸ்ட், ரேடி யாலஜிஸ்ட் போன்றவர்களுக்கும் மேலை நாடுகளில் ஏகப்பட்ட டிமாண்ட் கிளம்பி யுள்ளதாம்.

"அமெரிக்கா அழைக்குது... நல்ல காலம் பிறக்குது" என்று நம்பிக்கையோடு காத்திருக் கலாம்!

- டாலி


ஜெராக்ஸ் சேலை! சிக்கரி சென்ட்!

"புது வருஷம் வந்தாச்சே! ஷாப்பிங் பண்ணற பழக்கம் உண்டா?" என்று சில அரசியல்வாதிகளிடம் கேட்டபோது...

சோ. பாலகிருஷ்ணன் *(தமிழ்நாடு காங்கிரஸ்)*


மும்பையில் காங்கிரஸ்காரர் ஒருவர் துணையுடன், தாதர் மணீஷ் மார்க்கெட் பக்கம் ஷாப்பிங் போனோம். பேரம் பேசி, ஒரு புடைவை எழுபத்தைந்து ரூபாய் வீதம், பத்துப் புடைவைகள் வாங்கினேன். சென்னை திரும்பிய வுடன் மிகப் பெருமையாகக் காட்டினேன்.

அப்போது என் உறவுக்காரப் பெண், "என்ன மாமா... இதே சேலை நம்ம மதுரையிலே ஐம்பது ரூபாய்க்குத் தரான். நீங்க என்னவோ பெரிசா சொல்றீங்களே" என்று அவர் வாங்கிய சேலையைக் காட்டினார்.



• சோ. பாலகிருஷ்ணன்

நான் வாங்கியதன் ஜெராக்ஸ் மாதிரி இருந்தது அந்தச் சேலை! என்னுடைய ஷாப்பிங்கை புத்தகம் வாங்குவதோடு நிறுத்திக் கொண்டேன்.



• ஏ.சி.சண்முகம்

ஏ.சி.சண்முகம் *(தலைவர், புதிய நீதிக் கட்சி)*

தமிழ்நாட்டிலிருந்து சர்வகட்சியைச் சேர்ந்த எம்.எல்.ஏக்கள் 1980ம் ஆண்டு மலேஷியாவுக்குச் சென்றிருந்தோம். அந்தச் சமயத்தில் அந்நியச் செலாவணிக்கு மிகுந்த கட்டுப்பாடு இருந்தது. எங்களுக்கு ஐந்நூறு டாலர்கள்தான் கொடுத்தார்கள். இந்தப் பணத்தில் என்ன வாங்குவது என்று முழித்துக் கொண்டிருந்தோம். மலேஷிய நண்பர் ஒருவர் எங்களைச் சந்தித்தார். கட்சி வித்தியாசம் பார்க்காமல் எல்லா எம்.எல்.ஏ.க்களுக்கும் கணிசமாக ஒரு தொகை (டாலராக) கொடுத்தார். சென்னையில் இருந்த எம்.ஜி.ஆரின் ஏற்பாடு இது என்று தெரிவித்தபோது, நெகிழ்ந்து போய் விட்டோம்.

கராத்தே தியாகராஜன் : *(துணை மேயர்)*

நான் டீ ஷர்ட்ஸ், சென்ட் ஆகிய

வற்றை விரும்பி வாங்குவேன். பெரும்பாலும் நான் துணி வாங்கச் செல்லும் போது என்னுடைய சலவைக்காரரும் உடன் வருவார். தரம் எப்படி என்பதை சொல்லுவார். குறிப்பாக, வெள்ளைச் சட்டை வாங்கும்போது சலவைக்காரர் ஐ.எஸ்.ஐ முத்திரை குத்தினால் தான் வாங்குவேன். செண்ட் ரகங்களை செலக்ட் செய்யும்போது, இரண்டு ரகங்களுக்கு இடையில் நல்ல சிக்கரி காப்பிக் கொட்டையின் மணத்தை நுகர்ந்த பின்னர் வாசனை பிடித்தால், பல்வேறு செண்ட் ரகங்களின் அசலான மணத்தை உணர்ந்து கொள்ள முடியும் என்பது என் ஷாப்பிங் கண்டுபிடிப்பு.



எஸ். கண்ணப்பன் (தலைவர் : மக்கள் தமிழ்தேசம்)

ஒருமுறை தில்லி சாந்தினி சௌக் பகுதியில் பெரியவர் ஒருவரை கடைக்-



காரர் விரட்டி விட்டுக் கொண்டிருந்தார். என்னுடன் இருந்த நண்பர் பெரிய வரை அழைத்து விசாரித்தார். விடுதலைப் போராட்டத்தில் சிறை சென்ற தியாகியாம் அவர். வறுமை காரணமாக தம்மிடமிருந்த பழைய கடிகாரத்தை விற்பதற்காக வந்திருக்கிறார் என்பதைத் தெரிந்து கொண்டேன். "நீங்கள் போற்றிப் பாதுகாக்கும் கடிகாரத்தை விற்க வேண்டாம்" என்று ஆயிரம் ரூபாய் கொடுத்தேன். அன்று ஷாப்பிங் செய்ததை விட அதிக திருப்தியோடு திரும்பினேன்.

எஸ். ஜெகத்ரட்சகன் (பாராளுமன்ற உறுப்பினர்)

கல்கத்தாவில் ஷாப் பிங் செய்துவிட்டு திரும்பியபோது மூவாயிரம் ரூபாய் மதிப்புள்ள சீக்கோ வாட்ச் மிஸ்ஸாகிவிட்டது. இரவு தூக்கமே வரவில்லை. மறுநாள் காலை தொலைபேசியில் வங்காள மொழியில் ஒருவர் பேசினார். ஒரு கடையில் வாட்சை மறந்து வைத்து விட்டோம். அந்தக் கடைக்காரர் நான் தங்கியிருந்த ஓட்டலைத் தெரிந்து கொண்டு டெலிபோன் செய்தார். தங்கியிருந்த இடம் எப்படி அவருக்குத் தெரிந்தது? கியாரண்டி கார்டில் பெயர் எழுத ஓட்டல் பெயர் போட்ட ஸ்லிப் பேடில் என் பெயரை எழுதிக் காண்பித்தேன். அந்த ஸ்லிப் அவரிடமே இருக்க, கண்டுபிடித்து விட்டார்!

- ஸ்ரீநி

படங்கள்: மீடியா ராமு

• எஸ். ஜெகத்ரட்சகன்



சொர்ணம் ஆச்சி

வந்தியத்தேவன்

"வீணா மனசைப் போட்டு குழப்பிக்காதீங்க சரவணன். பாட்டிக்கு ஒண்ணும் ஆகாது. அப்படியே ஆனாலும், வாழ்ந்து முடிச்சவங்க, ஒரு நாள் போய்த்தானே ஆகணும்?" என்ற சசிரேகா எழுந்தபடி, "சரி... நேரமாச்சு... நான் கிளம்பறேன்... நாளைக்குக் கண்டிப்பா வந்துடுவீங்க தானே...?" கைப்பையில் தேடி கார் சாவியை எடுத்தபடி கேட்டாள்.

"கண்டிப்பா வந்துடறேன்" என்றேன். ஒரு நிமிடம் என்னையே பார்த்தபடி மவுனமாக நின்றவள், "நான் வர்றேன்..." என்று கூறிவிட்டு, கடற்கரை மணலில் கால்கள் புதைய, நடந்து சென்றாள்.

மணி எட்டரை ஆகியிருந்தது. வானத்தில் மின்னல்கள் கீறல்கள் போட்டன. காற்றில் குளிர் கலந்திருந்தது. மழை வரும் போலிருந்தது. நான் அப்படியே கைகளை தலைக்குத் தாங்கி, மணலில் மல்லாந்து படுத்தேன்.

'சொர்ணம் ஆச்சி உடல் நிலை மோசமாக உள்ளது. ஒரு வாரம் கூடத் தாங்காது. ஏதேனும் நடந்தால் தந்தி அடித்தபின் நீ வந்தால் போதும்' என்ற அம்மாவின் கடிதம் வந்து நான்கு நாட்களாகின்றன.

அதிலிருந்தே மனம் கவலையில் ஆழ்ந்தது. சருகுகள் உதிர்வது இயற்கை என்று அறிவுக்கு எட்டினாலும், ஆச்சியின் இறப்பு, இவ்வளவு விரைவில் நெருங்கி வரும் என்று நான் எதிர்பார்க்கவில்லை.

தாத்தா இறந்து ஆறு மாதங்கள்தான் ஆகின்றன. கிட்டத்தட்ட அரை நூற்றாண்டுக் காலமாக தாத்தாவுடன் வாழ்ந்திருந்த ஆச்சி அவரது மறைவுக்குப் பின், தளர்ந்து விட்டாள் என்றே சொல்ல வேண்டும். போன மாதம் நான் ஊருக்குப் போயிருந்த போது, ஆச்சியின் உடல்நிலை சரியில்லாமல் இருந்தாலும் கூட நன்றாகவே பேசினாள். 'உன் கல்யாணத்தைப் பாத்துட்டேன்னா, நிம்மதியா போய்ச் சேருவேன்' என்றாள்.

வெள்ளங்குளி பஸ் ஸ்டாண்டில் இறங்கினால், நடு வகிடு எடுத்தாற் போல் ஊரின் கடைசி வரை செல்லும் பரந்த மண் சாலையில் இடதும், வலதுமாய் வெற்றிலையின் நரம்புகள் போல, தெருக்கள் பிரிந்து செல்லும். முதல் இரண்டு தெருக்களில் வசிப்பவர்கள் அனைவரும், ஒருவருக்கு ஒருவர் உறவினர்களாகவே இருந்தனர். ஆச்சி வீடு இரண்டாவது தெருவின் கடைக் கோடியில் இருக்கிறது.

நல்ல பழங்கால மச்சு வீடு. அகண்ட பெரிய கதவுகள். பின்னால் மாட்டுத் தொழுவம். அளிபாய்ச்சப்பட்ட வராந்தா. மழை பெய்யும் போது அளிக் கம்பிகளைப் பிடித்தபடி, தெருவில் சிறிய ஓடையாய்ச் சுழித்தோடும் மழை நீரை வேடிக்கை பார்க்கலாம்.

ஆச்சி, வீட்டை எப்போதும் சுத்தமாகவே வைத்திருப்பாள். வீட்டில் ஒரு தூசி, தும்பு பார்க்க முடியாது. செய்யும் எந்தக் காரியங்களிலும் ஒரு நேர்த்தி இருக்கும். ஒரு நாள் புட்டு, மற்றொரு நாள் உளுந்தங்களி என்று, தினமும் வித விதமாக தின் பண்டங்கள் செய்து தருவாள். தாராளமாக மாவு ஊற்றி விரல் தடிமனுக்கு அவள் சுடும் தோசைகள், மெத்து மெத்தென்று சுவையாக இருக்கும். அதேபோல் சிறிதளவே பருப்பு, காய்கறிகள் போட்டு சாம்பார் வைத்தாலும், அதன் ருசி அலாதியாக இருக்கும். அவளது கைப்பக்குவம் அப்படி.

விளையாட்டுப் போக்கில் நான் தெருவில் சுற்றிக் கொண்டிருக்கும் நேரங்களில், சாப்பாடு, ஏன், மாலை காஃபி சாப்பிடக் கூட என்னை தெரு முழுக்கத் தேடி அலைவாள் ஆச்சி. நான் கூட அலுத்துக் கொள்வேன். "எனக்குப் பசிச்சா நான் வரமாட்டேனா? ஏன் இவ்வளவு தூரம் வந்து அலையறே?" என்பேன்.

ஆனால், "சாப்பிட்டுட்டு அப்புறம் எங்கயும் போயேன். வேற எங்கயும் சாப்பிட்றக் கூடாதுன்னுதான் தேடி வந்தேன்" என்பாள்.

இனிமேல், ஆச்சியிடம், பேசுவது, அவள் சமையலைச் சாப்பிடுவது என்பதெல்லாம் கனவு தானா?

கடிதம் வந்ததும், ஊருக்கு உடனே போக வேண்டும் என்று மனம் துடித்தது. ஆனால், எத்தனை நாட்கள் லீவ் போடுவது? நான் கேஷியராகப் பணிபுரியும் தனியார் வங்கியில், அடிக்கடி லீவ் தரமாட்டார்கள். தவிர, போன மாதம்தான் ஐந்து நாட்கள் விடுப்பில் ஊருக்குப் போய் வந்தேன். மணலில் கால் நீட்டிப் படுத்தேன்.



சசிரேகா வீட்டுக்குப் போயிருப்பாளா?

சசி, கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன் அறிமுகமானாள். தற்போது எம்.எஸ்.சி., இறுதியாண்டு படிக்கிறாள்.

ஒரு நாள் இரவு பிரார்த்தனா தியேட்டரில் படம் பார்த்து விட்டு, ஆளரவமற்ற கிழக்குக் கடற்கரைச் சாலையில் பைக்கில் வந்து கொண்டிருந்தேன். எதிரே ஒரு லாரி, பிசாசு வேகத்தில் சாலை முழுவதையும் அடைத்துக் கொண்டு வர, அதன் வேகத்தில் மிரண்டு, என் பைக் நிலை தடுமாறி, சாலை ஓரம் இருந்த மரத்தின் மீது பலத்த வேகத்தில் மோதியது. நான் தூக்கி எறியப்பட்டு மயங்கி விட்டேன்.

அந்த வழியே வாகனங்களில் கடந்த பலரும் கண்டு கொள்ளாமல் போய்விட, தன் தோழியின் பிறந்தநாள் விழாவுக்குப் போய் விட்டு, காரில் அவ்வழியே திரும்பிக் கொண்டிருந்த சசி பார்த்து, துணிச்சலாக என்னை எடுத்து காரில் போட்டுக் கொண்டு போய், அடையாரில் ஒரு மருத்துவமனையில் சேர்த்தாள்.

பெரிய காயம் இல்லை. சில தையல்

களுடன் நான்கே நாட்களில் குணமானேன். அந்த நான்கு நாட்களும், சசி தினமும் மருத்துவமனைக்கு வந்து நலம் விசாரித்தாள்.

மருத்துவமனையில் இருந்து திரும்பிய பின்னும், எங்கள் நட்பு தொடர்ந்தது. அடிக்கடி ஃபோனிலும், நேரிலும் பேசிக் கொண்டோம்.

இருவரும் காதலிக்கத் துவங்கிய பின்னரே, சசியின் குடும்பப் பின்னணி முழுமையாக எனக்குத் தெரியவர, நான் பயந்தேன். காரணம், அவள் தகுதிக்கும், எனக்கும் லிஃப்ட் வைத்தாலும் கூட எட்டாது. சசியின் அப்பா சுந்தரமூர்த்தி பெரிய தொழிலதிபர்.

சசி, ஒரே பெண். அம்மா இவளது ஏழாம் வயதிலேயே இறந்து விட, சிறு வயதிலேயே விதவையாகி விட்ட தம் தங்கையின் துணையுடன், சுந்தரமூர்த்தி சசியை வளர்த்துள்ளார். அவர் எங்கே? நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த நான் எங்கே? ஆனால், காதல் தகுதி பார்த்தா வருகிறது?

என் தகுதி பயத்தை சசி நிராகரித்தாள். கண்டிப்பாக நம் காதல் நிறைவேறும் என்றாள். அத்துடன் காதல் விவகாரத்தை தன் அத்தையிடம் சொல்லி விட்டாள்.

"நாளைக்கு எங்கம்மாவோட நினைவு தினம். அன்னிக்கு, எந்தக் கோரிக்கையை வைச்சாலும் அப்பா, மறுப்பே சொல்ல மாட்டார். நாளைக்குக் கண்டிப்பா வந்துடுங்க. அப்புறம் அப்பா ஆஸ்திரேலியாவுக்குப் போயிட்டு, ஒரு மாசம் கழிச்சுதான் வருவார். இதை விட்டா நல்ல சான்ஸ் கிடைக்கவே கிடைக்காது" என்று படிச்சுப் படிச்சு சொல்லிட்டுப் போயிருக்கிறாள் சசி.

மழைத்துளிகள் விழ ஆரம்பித்தன. சட்டென்று எழுந்து மணலைத் தட்டி விட்டபடி விரைவாக நடக்க ஆரம்பித்தேன். திருவல்லிக்கேணி அறையை அடையும் போது, முழுக்க நனைந்திருந்தேன். மாடிப் படியேறி என் அறையின் பூட்டைத் திறந்து கொண்டிருக்கும்போது, கீழே இருந்து குடை பிடித்தபடி வீட்டுக்காரர் படியேறி வந்தார்.

"சரவணா... உனக்குத் தந்தி வந்திருக்கு."

தந்தியைப் பிரித்தேன். ஆச்சி போய்விட்டாள். ஐந்தே கால் அடி உயர ஆச்சி, நான்கே வார்த்தைகளில் அடங்கிப் போயிருந்தாள்.

இன்று மாலைதான் ஆச்சி இறந்திருக்கிறாள். நாளை மதியத்துக்கு மேல் தான் எடுப்பார்கள். மணி பார்த்தேன். இரவு பஸ் பிடித்தால், காலையில் திருநெல்வேலிக்குப் போய் கடைசியாக ஆச்சியின் முகத்தைப் பார்த்து விடலாம்.

மழை இப்போது வலுத்திருந்தது. அவசர, அவசரமாக, துணிகளை எடுத்து பேக்கை ரெடி செய்து நிமிர்ந்த போது தான், சசியின் வீட்டுக்கு நாளை வருவதாகச் சொல்லியிருந்தது நினைவில் எட்டியது. என்ன செய்வது!

கீழே இறங்கிச் சென்று டெலிஃபோன் பூத்தில் இருந்து சசியின் வீட்டுக்கு ஃபோன் செய்தேன். ரிங் போய்க் கொண்டே இருந்தது. யாரும் எடுத்த பாடில்லை. அரைமணி நேரம் முயற்சித்தும் பலனில்லை.

மறுநாள், நான் அண்ணாநகர் போன போது, "ஃபோன் அவுட் ஆஃப் ஆர்டர்" என்றாள் சசி. ○



- அம்பை தேவா

பயமெல்லாம் போச்சு!

போன்ல யாராவது இங்கிலீஷ்ல பேச ஆரம்பிச்சா பயம்.

என் குழந்தைகள் படிக்கிற ஸ்கூலுக்குப் போயி டீச்சர்களிடம் பேச பயம்.

என் ஹஸ்பன்ட் கூட பார்ட்டிக்கு போக பயம். ஏன்னா அங்கே நிறைய பேர் இங்கிலீஷ்ல பேசுவாங்களே!

இப்படி எதுக்கெடுத்தாலும் பயந்துக்கிட்டிருந்த நான் இப்போ தங்கு தடையில்லாம தைரியமா இங்கிலீஷ்ல பேசறேன்னா அதுக்கு காரணம் **விவேகானந்தா இன்ஸ்டிட்யூட்**தான்.

ஆமாம். அவங்களோட **ஸ்போக்கன் இங்கிலீஷ் டிரெயினிங் கோர்ஸ்** பாடங்களை வீட்டிலிருந்துகிட்டே ஓய்வு நேரத்தில் படிச்சு பிராக்டிஸ் பண்ண ஆரம்பிச்சேன். இப்போ எந்தச் சூழ்நிலையா இருந்தாலும் துளிக்கூட பயமில்லாம சர்வ சாதாரணமா இங்கிலீஷ்ல பேச முடியுது. நீங்களும் ட்ரை பண்ணிப் பாருங்க. நான் சொல்றது உண்மை தான்னு நிச்சயம் சொல்வீங்க.

- Mrs ஷீலா சங்கர்

பயிற்சி விவரம்:

இங்கிலீஷ் வார்த்தைகளை ஓரளவு எழுத படிக்கத் தெரிந்தவர்கள் **ஸ்போக்கன் இங்கிலீஷ் டிரெயினிங் கோர்ஸி**ல் சேர்ந்து மிகச் சரளமாக இங்கிலீஷில் பேசப் பயிற்சி பெறலாம்.

இலக்கணம் மற்றும் உரையாடல் பயிற்சிப் பாடங்கள் அடங்கிய இக்கோர்ஸின் கட்டணம் **ரூ. 395/-** மட்டுமே.

அடிப்படையிலிருந்தும் ஆரம்பிக்கலாம்

இங்கிலீஷ் வார்த்தைகளை எழுத படிக்க இயலாதவர்கள் அடிப்படையிலிருந்து ஆரம்பித்து சரளமாக இங்கிலீஷ் பேசப் பயிற்சி பெறலாம்.

அடிப்படை மற்றும் ஸ்போக்கன் இங்கிலீஷ் டிரெயினிங் கோர்ஸின் கட்டணம் **ரூ. 525/-** மட்டுமே.

கீழே உள்ள கூப்பனைப் பூர்த்தி செய்து இன்றே அனுப்புங்கள். பாடங்கள் **V.P.P.** மூலம் உங்களது வீடுதேடி வந்துவிடும். தபால்காரரிடம் பணத்தைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளுங்கள். பாடங்களைப் படித்து பிராக்டிஸ் செய்து மடமடவென இங்கிலீஷில் பேச ஆரம்பியுங்கள்.

இனிமே இங்கிலீஷ்ல தான் பேச்சு!



இதோ கூப்பன்

☐ நான் விவேகானந்தாவின் ஸ்போக்கன் இங்கிலீஷ் டிரெயினிங் கோர்ஸில் சேர விரும்புகிறேன். பாடங்களை **V.P.P.**யில் அனுப்புங்கள். ரூ. **395/-** செலுத்திப் பெற்றுக் கொள்கிறேன்.

☐ நான் அடிப்படை (Basic) மற்றும் ஸ்போக்கன் இங்கிலீஷ் டிரெயினிங் கோர்ஸில் சேர விரும்புகிறேன். பாடங்களை **V.P.P.**யில் அனுப்புங்கள். ரூ. **525/-** செலுத்திப் பெற்றுக் கொள்கிறேன்.

(தேவையான கட்டத்தில் ☑ குறியிடுங்கள்)

பெயர் : ....

முகவரி : ....

....

....பின்கோடு..

விவேகானந்தா இன்ஸ்டிட்யூட்

9, மேட்லி ரோடு, தி.நகர், சென்னை - 600 017.

BKL 11/TAM/03/NAGA

கூப்பனை 15 நாட்களுக்குள் அனுப்பிப் பாடங்களுடன் 416 பக்கங்கள் கொண்ட இங்கிலீஷ் - தமிழ் டிக்ஷனரி ஒன்றினைப் பரிசாகப் பெறுங்கள்.

அழைப்பு மணி ஒலிக்கட்டும்!

படம் : ஸ்ரீஹரி

முன்புற முற்றத்தில்
மலர்ச் செடிகள் வைப்போம்
பின்புறக் கொல்லையில்
தென்னை மரங்கள் நடுவோம்
நடுக்கூடத்தில்
உறவை விதைப்போம்!

வாசல் கதவைப்
பூட்டி வைத்தாலும்
இதயக் கதவைத்
திறந்தே வைப்போம்!

கோபம் வந்தால்
மௌனம் காட்டி
குற்றம் மறந்து
சுற்றம் காப்போம்!

தட்டிக் கேட்பதோடு
விட்டுக் கொடுக்கவும்
கொஞ்சம்
கற்றுக் கொள்வோம்!

வீடு என்பது
கல்லும் சிமெண்டும்
சேர்ந்த சுவரல்ல;
கான்கிரீட் கூரையல்ல;
அன்பும் உறவும்
சேர்கின்ற
அற்புதக் கலவை!

ஜன்னல் வழியே புகும்
வெளிச்சம்
நம் உள்ளத்திலும்
நுழையட்டும்!

பார்க்கும்
பார்வையில்கூட
புன்னகை சிந்தி
விருந்தை அழைப்போம்!

அழைப்பு மணி
ஒலித்தபடி இருக்கட்டும்!

தேவி காந்தன்

நமக்கே உரிமையாம் 10

நாம் நினைப்பதெல்லாம் நடந்துவிட்டது என்று வைத்துக் கொள்ளுங்கள். சுதந்திர நாடு, பேச்சுரிமை, ஒழுக்கமான மக்கள் பிரதிநிதிகள், திறமையான அமைச்சர்கள், மேன்மையான நீதிபதிகள், மனித நேயம் பாராட்டும் சமுதாயம், சமூக நீதி - வேறு என்ன வேண்டும்?

சூரியன் ஏன் கிழக்கே உதிக்கிறது என்ற கேள்வியை எழுப்பி, அதற்கு விடை தேடிய ஒரே இனம் மனித இனம்தான்.



வறுமையே.. போ!



மனிதன் மனிதனாக வாழ வேண்டும்.

மனித வாழ்க்கை என்பது மிருக வாழ்க்கையிலிருந்து வேறுபட்டது. எப்படியாவது வாழ வேண்டும் என்று நினைக்கும் இனம், மனித இனமாக இருக்க முடியாது. இப்படித்தான் வாழ வேண்டும் என்பதே நாகரிகத்தின் அடையாளம். மனிதனின் பரிணாம வளர்ச்சியைக் குறிக்கும் முக்கிய குணங்களில் ஒன்று, 'தேடல்'. உணவு, உறக்கம், புணர்ச்சி ஆகியவற்றுக்கு அப்பால், மனிதன் பல விஷயங்களைத் தேடுகிறான். குறிப்பாகத் தன்னுடைய புலன்களுக்கு அப்பாற்பட்ட, தனக்குப் புரியாத, தனக்குப் புதிராக இருக்கும் விஷயங்களைத் தேடுகிறான்.

யானையும், சிங்கமும், புலியும், நரியும், பன்றியும், நாயும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் எப்படி வாழ்ந்தனவோ, அப்படியே இன்றும் வாழ்கின்றன. மனித உயிரினத்தில் மட்டுமே அற்புதமான மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன.

மனித இனத்தில் பல சமுதாயங்கள் மகத்தான சாதனைகளைப் படைத்திருக்கின்றன. அவற்றில் தலையானது வறுமையை ஒழித்தது. மனித நேயமுள்ள நாகரிக மனித சமுதாயத்தின் முதல் எதிரி வறுமை. ஆகவேதான் வறுமை ஒழிப்பை

ப.சிதம்பரம்

முதன்மையான கடமை என்று - அதில் கண்ட வெற்றியைத் தலையான சாதனை என்று - குறிப்பிடுகிறேன். வறுமையை ஒழித்த சமுதாயங்கள்தாம் முன்னோடிச் சமுதாயங்களாக விளங்குகின்றன.

வறுமையின் அடையாளங்கள் என்ன?

- கல்வி இல்லை.
- கைத்திறன் இல்லை.
- சொத்து இல்லை.
- வேலை இல்லை.
- வருமானம் இல்லை.



ஒரு தனி மனிதன் எப்படி வறுமையிலிருந்து விடுபடுகிறான்? மனிதன் கல்வி கற்கிறான் - எண், எழுத்து, உயர்கல்வி என்று கல்வித் தகுதி உயரும் போது, வறுமையை ஒழிக்கும் தகுதியும் உயர்கிறது. மனிதன் தன்னுடைய திறமைகளை வளர்த்துக் கொள்கிறான் - தச்சுத் தொழில் ஒரு திறமையென்றால், அச்சுத் தொழிலும் ஒரு திறமையே. வேளாண்மை ஒரு திறமை, அதுபோல மேலாண்மையும் ஒரு திறமை. மனிதன் சொத்து சேர்க்கிறான் - நிலம், வீடு என்று தொடங்கியது. பிறகு தங்கம், வெள்ளி என்று வளர்ந்து, இப்பொழுது பணம், பத்திரம் என்று பல உருவங்களைப் பெற்றிருக்கிறது. எல்லாவற்றையும் விட, முக்கியமாக மனிதன் வேலை செய்கிறான், அந்த வேலைக்கேற்ற ஊதியத்தை எதிர்பார்க்கிறான்.

மனித இனத்தின் முக்கியக் குறியீடுகளில் ஒன்று வேலை செய்வது. 'ஓடி விளையாடு பாப்பா, நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா' என்ற பாரதியின் பாப்பா பாடல் நினைவுக்கு வருகிறது. வேலை செய்த பிறகு ஓய்வை விரும்புவது என்பது வேறு, ஓய்ந்திருப்பது என்பது வேறு.

யானை, குதிரை, மாடு எல்லாம் வேலை செய்கின்றன. அவை செய்வது அடிமை வேலை. அடிமைத்தனம் இல்லாத வேலையே உண்மையான வேலை. அந்த வேலைக்கேற்ற ஊதியம் கிடைத்தால்தான், அந்த வேலைக்கு மதிப்பு. வறுமை ஒழிப்பில் வேலையும், வருமானமும் முக்கியமான ஆயுதங்கள்.

உலகில் பல நாடுகள் - பல சமுதாயங்கள், - வறுமையை ஒழித்திருக்கின்றன. ஆயிரம், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரும் செல்வம் இருந்தது; ஆனால் அந்தச் செல்வம் மிகச் சிலரிடம் மட்டுமே குவிந்திருந்தது. வறுமை கடலாகவும், செல்வம் சிறு தீவுகளாகவும் இருந்தன. பல கோடி நூறாண்டு மனித வரலாற்றில், வறுமையை ஒழித்த காலம் என்று இருபதாம் நூற்றாண்டை மட்டுமே குறிப்பிட முடியும். இருபதாம் நூற்றாண்டின் முதல் பாதியில் -1900 முதல் 1950 வரை - பல நாடுகளில் பல கோடி மக்கள் வறுமையிலிருந்து விடுபட்டார்கள். அதற்கு முன் எந்த ஐம்பதாண்டுக் காலத்திலும் இது போன்ற ஒரு சாதனை நிகழ்ந்ததில்லை. இந்த ஐம்பதாண்டுக் காலத்தில்தான் இரண்டு உலகப் போர்கள் நடைபெற்றன. இந்தப் போர்கள் நிகழாதிருந்தால், இன்னும் பல கோடி மக்கள் வறுமையின் பிடியிலிருந்து விடுபட்டிருப்பார்கள். 1950 முதல் 1975 வரை அந்த நாடுகளின் செல்வமும் செழிப்பும் அபரிமிதமாக உயர்ந்தன.

அந்தச் சாதனையை விஞ்சும் ஒரு சாதனை அண்மையில் நடந்திருக்கிறது. 1975 முதல் 2000 வரை - இருபத்தைந்து ஆண்டுக் காலத்தில், மனித இனம் புதிய சாதனையைப் படைத்திருக்கிறது. இந்த இருபத்தைந்து ஆண்டுக் காலத்தில் இன்னும் பல கோடி மக்கள் வறுமையை வென்று, வளமான வாழ்க்கையை அமைத்துக் கொண்டுள்ளார்கள். இவர்கள் ஆசியா கண்டத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் சிங்கப்பூர், மலேஷியா, தென்கொரியா, தாய்லாந்து, தாய்வான், ஹாங்காங், மொரீஷியஸ், மாலத்தீவுகள் ஆகிய நாடுகளில் வாழ்கிறார்கள். இதை நான் சொல்லும்போது,

இயேசு கிறிஸ்துவின் காலத்தில் அவரது சித்திரம் வரையப்பட்டதே இல்லை. அவருடைய முகம் சிற்பமாகக்கூடச் செதுக்கப்பட்டதில்லை. இயேசுவை நேரில் பார்த்தவர்களில் ஒருவரான செயின்ட் பீட்டர் என்பவர் வரைந்த கோட்டுப் படம் ஒன்றை ஆதாரமாக வைத்துக் கொண்டே தீர்மானிக்கப் பட்டது. "இயேசு கிறிஸ்து எப்படி இருந்தார்?" என்று கேட்ட போது, செயின்ட் பீட்டர் தமது கைக் குட்டையில் கோடிட்டு வரைந்து காட்டினாராம்.
- 'உலகச் செய்திகள் ஆயிரம்.'
- எம். அனிதா

இந்த நாடுகளில் ஏழ்மையே இல்லை என்று சொல்லவில்லை. உலகிலேயே பணக்கார நாடான அமெரிக்காவில் கூட, ஏழைகள் இருக்கிறார்கள். இந்த நாடுகள் வறுமையை ஒழித்த நாடுகள் என்று சொல்லும்போது, இந்த நாடுகளில் வாழும் மக்களில் மிகப் பெரும்பான்மையானவர்களுக்குக் கண்ணியமான, வளமான வாழ்க்கை அமைந்திருக்கிறது என்று குறிப்பிடுகிறேன்.

வறுமையை எப்படி ஒழிப்பது?

உலகம் முழுவதும் ஏற்றுக் கொள்ளப்பட்ட பொருளாதாரக் கொள்கைகள், இந்தியாவுக்கு மட்டும் பொருந்தாமல் இருக்க முடியாது. இந்தியா சுதந்திரம் பெற்ற போது, நமக்கு முன் இரண்டு பாதைகள் தென்பட்டன. ஒன்று, மேற்கு நாடுகள் பின்பற்றிய திறந்த, போட்டிப் பொருளாதார முறை. இது முதலாளித்துவம் என்று வர்ணிக்கப்பட்டது. இரண்டாவது, கம்யூனிஸ்ட் அல்லது சோஷலிஸ பொருளாதார முறை. சோவியத் நாடு இம்முறையைப் பின்பற்றி, வியப்பளிக்கும் வளர்ச்சியைப் பெற்று வல்லரசாக உயர்ந்திருப்பதைப் போல் ஒரு தோற்றம் இருந்தது. சோஷலிஸ முறை சுரண்டலில்லாத முறை என்றும், ஏற்றத் தாழ்வுகளை நீக்கக்கூடிய முறை என்றும், மனித நேயத்தை வளர்க்கும் முறை என்றும் கருதப்பட்டது. இந்தியாவின் தலைவர்கள் இரண்டாவது முறையை - சோஷலிஸ மாதிரியை - சில மாற்றங்களுடன் ஏற்றுக் கொண்டனர். அது முற்றிலும் தவறான முடிவு என்று சொல்ல முடியாது.

முதலாளித்துவ முறை என்றாலும், சோஷலிஸ முறை என்றாலும் ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு 'முதல்' (capital) தேவை. இந்த முதலை எப்படித் திரட்டுவது? குறிப்பாக, ஓர் ஏழை நாட்டில் பெருமளவு முதல் திரட்டுவது என்பது எளிதான செயல் அல்ல. பங்கு முதல் கம்பெனிகள், பங்குச் சந்தைகள், வங்கிகள் என்ற கருவிகள் முழுமையாக வளர்ச்சியடைந்திராத நாடுகளில், தனியார் துறையினர் முதல் திரட்டுவது என்பது மிகக் கடினம். எனவே, அரசே முன்னடைவு காட்டி, வரி வசூல் மூலமாகவும், கடன் வாங்குவது மூலமாகவும், முதல் திரட்ட முடியும் என்று கருதப்பட்டது. அப்படித் திரட்டிய முதலைப் பொதுத்துறை நிறுவனங்களில் முதலீடு செய்தால், தொழில் வளர்ச்சி ஏற்படும்; வேலை வாய்ப்புகள் உருவாகும்; வருமானம் பெருகும் என்று கருதப்பட்டது. ஏட்டளவில் இந்த அணுகுமுறையில் குறை காண முடியாது. ஆனால் ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாதே?

பிரிட்டிஷ் காலனி ஆதிக்கத்தின் போது இந்தியாவின் வளமும், இந்தியர்களின் உழைப்பும் சுரண்டப்பட்டன. 1900 முதல் 1950 வரை இந்தியப் பொருளாதாரம் ஆண்டுதோறும் ஒரு சதவிகித வளர்ச்சியையே கண்டது. "வெள்ளைக்காரன் காலம் இதை விட நன்றாக இருந்தது" என்று பெருமைப்பட்டுக் கொள்பவர்கள், இதைக் கவனிக்க வேண்டும். 1950 முதல் 1980 வரை இந்தியப் பொருளாதாரம் சராசரி 3.5% ஆண்டு வளர்ச்சியைக் கண்டது. 1980க்குப் பிறகுதான் 5.0% வளர்ச்சியைத் தொட முடிந்தது. 1991-ஆம் ஆண்டில் புதிய பொருளாதாரக் கொள்கையை நாம் ஏற்றுக் கொண்டோம். அதன் பிறகே ஆண்டு வளர்ச்சி 6.0%ஐத் தாண்டியது..

அடுத்த சில வாரங்களில் புதிய பொருளாதாரக் கொள்கையை விரிவாக விவாதிக்க விரும்புகிறேன்.

(தொடரும்)

புத்தாண்டு ராசிபலன் 20

மேஷம்

ஆகஸ்டு வரையில் மிக நல்ல பலன்கள் நடக்கும். வேலையில் நல்ல திருப்பம் உண்டாகும். புதிய முயற்சிகள் கைகூடும். சுய தொழிலில் விரும்பத்தக்க திருப்பம் ஏற்படும். நெடுநாளாக வரவேண்டிய தொகை வந்து விடும். ஏப்ரல் மே மாதங்களில் வேலையில் சில பிரச்னைகள் ஏற்பட்டு விலகும். ஆகஸ்டு மாதத்துக்கு மேல் எதிலும் கவனம் தேவை. வியாபாரிகளுக்கு ஜூன் மாதம் வரை நல்லதே நடக்கும். அதற்குப் பிறகு பண விஷயத்தில் எச்சரிக்கை தேவை.

கலைத் துறையைச் சேர்ந்தவர்களுக்கு முதல் மூன்று மாதங்கள் யோகம்தான். நவம்பர், டிசம்பர் மாதங்களும் ஆனந்த மானவையே.

மாணவர்கள் அக்கறையுடன் படிக்க வேண்டும். ஞாபக மறதி அடிக்கடி ஏற்படும் என்பதால் அதிக அக்கறை தேவை. உடல் சோர்வுக்கு இடம் கொடுக்கக் கூடாது.

பெண்களுக்கு முதல் நான்கு மாதங்கள் நல்லபலன்கள் உண்டு. வீட்டில் சுப விசேஷங்களால் குதூகலம் ஏற்படும். குழந்தைகளால் மகிழ்ச்சி. கடைசி நான்கு மாதங்கள் சராசரி பலன்கள்தான். அப்போது உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

கணபதி வழிபாடு நல்லது. ஹயக்ரீவர் ஸ்தோத்திரம் படிப்பது உத்தமம். துர்க்கை வழிபாடு துன்பம் விரட்டும்.

ரிஷபம்

ஜனவரி பிப்ரவரி மாதங்களில் சராசரி பலன்கள். மார்ச், ஏப்ரலில் நீங்கள் திட்டமிட்டபடி நல்ல முறையில் காரியங்கள் நடக்கும். அப்போது குடும்பத்தில் சுபகாரியம் நிறைவேறும். மே - ஜூன் மாதங்களில் உடல் நலம், பண விஷயம் ஆகிய இரண்டிலுமே எச்சரிக்கை தேவை. பிரயாணத்தின் போதும் கவனமாக இருங்கள். செப்டம்பர் மாதத்துக்கு மேல் உங்கள் எண்ணங்கள் தடையில்லாமல் நிறைவேறும். புதிய வீடு, புதிய வாகனம் ஆகியவை அமையும் வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சியும் தாராளமான பண நடமாட்டமும் இருக்கும். பதவி உயர்வு அடைவீர்கள்.

சுய தொழில், வியாபாரத்தில் மே - ஜூலை மாதங்களில் நிதானம் தேவை. பொதுவாகவே முதல் எட்டு மாதங்களில் அவசர முடிவுகள் வேண்டாம். வருட முடிவில் நல்ல முன்னேற்றமும் ஆதாயமும் உண்டு.

கலைஞர்களுக்கு முதல் ஐந்து மாதங்கள் சில தடைகள் ஏற்படும் எனினும் ஜூலை, ஆகஸ்டுக்குமேல் முன்னிலைக்கு உயர்வார்கள். பயணங்களில் எச்சரிக்கை தேவை.

மாணவர்கள் சோம்பலை விரட்டி படிப்பில் முழு கவனம் செலுத்த வேண்டும். ஆகஸ்ட் மாதத்துக்குமேல் படிப்புக்காக வெளிநாடு செல்லும் வாய்ப்பு உண்டு.

பெண்களுக்கு வருடத் தொடக்கத்தில் சில கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு மறையும். பேச்சில் கடுமை காட்ட வேண்டாம். சுப காரிய முயற்சிகளை ஜூன் மாதத்தில் செய்வது நல்லது. ஜூலை மாதத்தில் உடல் ஆரோக்கியத்தில் அதிக கவனம் தேவை.

பொதுவாக ஆகஸ்ட் மாதத்துக்குமேல் உற்சாகமான பலன் தொடங்கும்.

சனி பகவானுக்கு அர்ச்சனை, ஸ்ரீ ஆஞ்சநேயர் தியானம் போன்றவற்றுக்கு நன்மை





கிடைக்கும். கோவிந்தபாடி போய் குருபக வானுக்கு அர்ச்சனை செய்யவும்.

மிதுனம்

புதிய வருடம் முழுவதும் நல்ல பலன்கள்தான் என்று சொல்வதற்கு இல்லை. என்றாலும் இதுவரை இருந்த பிரச்னைகள், நெருக்கடிகள் ஆகியவற்றிலிருந்து ஓரளவு விடுபட்டு நிம்மதி அடைவீர்கள். புதிய உற் சாகத்துடன் முயற்சிகளில் ஈடுபடுங்கள். வெற்றி நிச்சயம். பொருளாதார நிலை கட்டுக்கடங்காது எனினும், தக்க சமயத்தில் நண்பர்கள், உறவினர்களின் உதவி கிடைக் கும். முதல் ஏழு மாதங்கள் இழுபறியாக இருந்தாலும், அவ்வப்போது பிரச்னைகள் சரியாகிவிடும். நிதானம் நன்மை தரும். ஆகஸ்ட் மாதத்திலிருந்து நிச்சயம் முன் னேற்றம் உண்டு.

வேலையில் நல்ல பெயர் எடுக்க வேண்டுமானால், கடுமையாக உழைக்க வேண்டியிருக்கும். சக ஊழியர்களிடம் நல்லுறவை வளர்த்துக் கொள்வது அவசியம். சுயதொழில், வியாபாரம் ஆகியவற்றில் பண நெருக்கடி ஏற்பட்டு விலகும். புதிய முயற்சிகளை தள்ளிப் போடுவது நல்லது. முதலீடு செய்வதில் எச்சரிக்கை அவசியம். தொழிலில் முதல் நான்கு மாதங்கள் திருப்தி இருக்காது. கூட்டுத் தொழில் செய்பவர்கள் பங்குதாரர்களிடம் ஒற்றுமையைக் கடைப் பிடிக்க வேண்டும்.

கலைஞர்கள் பொதுவாக நலம் காண் பார்கள். என்றாலும் மார்ச் - ஜூன் மாதங் களில் சில குறுக்கீடுகள் ஏற்படலாம். அளவுக்கு மீறிய சாகசங்களில் (முக்கியமாக ஸ்டண்ட் மாஸ்டர் போன்றவர்கள்) ஈடுபடக் கூடாது.

பெண்களுக்கு மக்களால் மனக் கலக்கம் ஏற்பட்டாலும் நிவாரணம் உண்டாகும். நடுத்தர வயதுப் பெண்கள் உடல் ஆரோக் கியத்தில் தனிக் கவனம் செலுத்த வேண்டும். அக்டோபருக்கு மேல் பெண்களுக்கு நல்ல பலன்கள் உண்டாகும்.

குடும்பத்தில் குதூகலம், வெளியூர்ப் பயணம் உண்டு.


ராமநாம ஜபம் பலனளிக்கும். ஆஞ்ச நேயர் வழிபாடு நல்லது. சனி, குரு ப்ரீதி செய்வது நல்லது.

கடகம்

வருடத்தின் முதல் இரண்டு மாதங்கள் புத்துணர்ச்சியும் உற்சாகமுமாகத் தொடங் கும். துணிவும் தன்னம்பிக்கையும் கூடும். குடும்பத்தில் பிரிந்தவர்கள் ஒன்று சேரு வார்கள். தாராளமான பண நடமாட்டம் உண்டு. உடல் நலம் சீராக இருக்கும். ஜூன் - ஜூலையில் எதிர்பாராத சிக்கல் ஏற் பட்டாலும், அதைக் களையும் வல்லமையும் தானே வரும். சில குடும்பக் குழப்பங்களைக் கண்டு அஞ்ச வேண்டாம். ஆகஸ்ட் முதல் - டிசம்பர் வரை எதிலும் எச்சரிக்கை தேவை - முக்கியமாக பொருளாதார விஷயங்களில்.

உயர் அதிகாரிகளின் ஆதரவும் சக ஊழியர்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும். வருடத்தின் பின்பாதியில் வேலையில் திருப்தி இருக்காது. பொருளாதாரச் சரிவு ஏற்படும். தொழில் மற்றும் வியாபாரம் செய்பவர்களுக்கு, முதல் ஏழு மாதங்களுக்குக் கவலைப்படத் தேவையில்லை. செப்டம்பர் முதல் சிக்கல் ஏற்படலாம். கவனம் தேவை.

முதல் ஆறு மாதங்களுக்கு கலைஞர்



களின் காட்டில் மழைதான். பிறகு நிதானமான பலனும், தொழிலில் இலேசான பின்னடைவும் ஏற்படும். சினிமாக் கலைஞர்கள் ஆகஸ்ட் மாதம்வரை முன்னணிக்கு உயர்வார்கள்.

மாணவர்களுக்கு மேற்படிப்புக்கான வெளிநாட்டுப் பயணம் உண்டு. வருடத்தின் பின்பாதியில் கவனம் தேவை. மாணவ விளையாட்டு வீரர்கள் மேலும் புகழ் பெறுவார்கள்.

பெண்களுக்குக் குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். வெளிநாட்டிலிருந்து மகன், மகள் வருகை, குடும்ப ஒற்றுமை ஏற்படும். உடல் நலத்தில் கவனம் தேவை.

ஹயக்ரீவர் தியானம், சரஸ்வதி வழிபாடு ஆகியவை பலனளிக்கும். சனீஸ்வர ப்ரீதியும் முக்கியம்.

சிம்மம்

தொழில் மற்றும் வியாபாரம் முதல் இரண்டு மாதங்களுக்கு சற்று மந்தமாக இருந்தாலும், ஏப்ரல் முதல் நல்ல பலன்கள். வியாபாரத்தில் எதிர்பாராத ஆதாயமும் மேன்மையும் கிடைக்கும். ஏப்ரல் - மே மாதங்களில் தொழிலில் போட்டி ஏற்பட்டாலும் இறுதி வெற்றி உங்களுக்கே. ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் சாதகமான திருப்பம் உண்டாகும்.

பணியில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். செல்வாக்கு பெருகும். உயர் அதிகாரிகளின் பாராட்டு, விரும்பிய இடமாற்றம் ஆகியவை கிடைக்கும். அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வராதீர்கள். ஏனென்றால், நல்ல பலன் ஏற்படவே வாய்ப்பு உள்ளது. சவால்களை சமாளிப்பீர்கள். இதுவரை உங்களுக்கு தொல்லை கொடுத்தவர்களே, உங்களை நாடி வந்து நிற்பார்கள்.

கலைஞர்களுக்கு மார்ச் - ஏப்ரலில் பெரிய, நல்ல திருப்பம் ஏற்படும். புகழ் கூடும். மற்றபடி அதிக ஆதாயம் வராது. புதிதாக கலைத்துறையில் அறிமுகமானால், நல்ல யோகம். அரசு அங்கீகாரம் கிடைக்கும். நாடகம், சங்கீதம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் முன்னுக்கு வருவார்கள்.

மாணவர்கள் ஜூன் மாதம் வரை கடுமையாக உழைக்க வேண்டி வரும். ஆனால் மார்ச் - ஏப்ரல் தேர்வுகளில் உழைப்பு வீண் போகாது.

தெய்வ தரிசனம், நல்லவர்களுடன் நேசம் ஆகியவை நன்மை தரும்.

கன்னி

பணியில் எதிர்பாராத இடைஞ்சல்கள் வந்தாலும், அவை உடனடியாக விலகிவிடும். மார்ச் - ஏப்ரலில் அலுவலகத்தில் விரும்பத்தகாத திடீர் மாற்றங்கள் ஏற்படலாம். புதிய வேலைக்கான முயற்சிகள், அவசர முடிவெடுப்பது ஆகியவற்றைத் தவிர்க்கவும். வெளிநாடு செல்லும் முயற்சிகளைத் தள்ளிப் போடவும். பணத்தில் புழங்குபவர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

பொதுவாக குடும்பத்தில் அமைதி இருக்கும். என்றாலும் செலவைக் கட்டுப்படுத்துவது கஷ்டமாக இருக்கும். குடும்பத்தில் அதிக வாக்குவாதங்களைத் தவிர்த்துவிடுங்கள். புதிய வீடு, வாகனம் வாங்குவதைத் தள்ளிவையுங்கள். சுபச் செலவுகளுக்கும் வாய்ப்பு அதிகம். பேச்சில் நிதானம் தேவை. கடுமை கூடாது.

தொழில், வியாபாரம் செய்பவர்கள் முதல் மூன்று மாதங்களுக்கு எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அதுவும் தோல், மின் கருவிகள் போன்ற தொழிலில் ஈடுபடுபவர்





கள் நிதானமாகச் செயல்படாவிட்டால், அது வேலை நிறுத்தத்தில்கூட முடியலாம்.

கலைஞர்களுக்கு முதல் மூன்று மாதங்கள் சோதனைக் காலம். மே - ஜூலையில் முன்னணிக்கு வருவார்கள். சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பு ஏற்படலாம். ஆக்ஸ்டுக்குப் பிறகு எதிர்பாராத மாற்றல், அலைச்சல் ஏற்படலாம். வாழ்க்கைத் துணைவரின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. நடுத்தர வயதுப் பெண்களுக்கு ஏதாவது அறுவை சிகிச்சை செய்ய வேண்டி வரலாம். உடல் நலத்தில் கவனம் செலுத்துங்கள்.

அருகம்புல் சார்த்தி, பிள்ளையாரை வணங்கவும். ஏழை எளியவருக்கு தானம் தருமம் செய்ய நினைத்தது நடக்கும்.

துலாம்

குடும்ப அமைதி, சரளமான பணவசதி, சுபகாரியங்கள் உண்டாகும். முதல் மூன்று மாதங்களில் ஈடுபடும் காரியங்களில் தடைகள் விலகி, விருப்பமான திருப்பங்கள் உண்டாகும்.

தாமதமாகி வந்த பதவி உயர்வும் இடமாற்றமும் கிட்டும். மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். புதிய வேலைக்கான முயற்சிகளில் வெற்றி உண்டு. உயர்பதவியில் இருப்பவர்கள் சுதந்திரமாகச் செயல்படும் சூழல் உண்டாகும். வங்கி, சட்டம், காவல், ராணுவம் ஆகிய துறைகளில் இருப்பவர்களின் திறமை வெளிப்பட்டு, புகழ் அதிகரிக்கும். பொதுவாகவே முழு முயற்சியுடன் செயல்பட்டால், பெரிய யோகத்தை அடைய வாய்ப்பு உண்டு. செப்டம்பருக்குப் பிறகு சில தடைகளும், தொழில் சுணக்கமும் உண்டாகும். கவனம் தேவை.

கலைஞர்கள் எதிர்பாராத நிலைக்கு உயர்வார்கள். சுற்றி இருப்பவர்களின் பொறாமை குறித்து கவலைப்பட வேண்டாம். குறிப்பாக பெண் கலைஞர்களுக்கு பெரும் புகழ் கிடைக்கும். மாணவர்களுக்குத் திறமை, உழைப்போடு அதிர்ஷ்டமும் கூடிவரும்.

பெண்களுக்கு ஏப்ரல் வரை சுப பலன் உண்டு. தெய்வீக ஈடுபாடு, புனித யாத்திரை ஆகியவை சம்பவிக்கும்.

அரசியல்வாதிகளுக்கு மதிப்புக் கூடும். ஆனால் அறிமுகமில்லாதவர்களிடம் எச்சரிக்கை தேவை. அரசு ஊழியர்களின் கசப்பான அனுபவம் மாறி, பிரகாசமான எதிர்காலம் உண்டாகும்.

செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் துர்க்கை அம்மனுக்கு விளக்கேற்றி வழிபடவும். பறவைகளுக்கு தினமும் இரை போட்டு வந்தால், மனமகிழ்ச்சி உண்டாகும்.


விருச்சிகம்


ஜனவரியிலிருந்து மார்ச் வரை சாதா வாழ்க்கைதான். அதுவரை அலுவலகத்தில் - முக்கியமாக மேலதிகாரிகளிடம் - சுமுகமாகப் பேசுவது நல்லது. ஏப்ரலிலிருந்து ஜூன் வரை, ஓரளவு நிம்மதியான வாழ்க்கை அமையும்.

வியாபாரத்தில் முதலீடு செய்வதில் மிக மிக எச்சரிக்கை தேவை. புதுத் தொழில் தொடங்கவேண்டாம். எதையும் உங்கள் நேரடிப் பார்வையிலேயே நடக்க விடுங்கள்.

மகன் மகளால் மகிழ்ச்சியும் பெருமையும் உண்டாகும். உல்லாசப் பயணம் இருக்கும். வயதானவர்கள் நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த புனித யாத்திரையை மேற்கொள்வார்கள்.

கலைஞர்களுக்கு வழக்கமான பலன்கள் தான். ஆனால் எதிர்ப்புகள் தோன்றும்.





டிசம்பரில் புகழின் உச்சியை அடைவார்கள்.

ஆஞ்சநேயரை மனத்தில் இருத்தி, வழிபடவும். வெற்றிலை மாலை, வெண்ணெய்க் காப்பு, வாழைப்பழ மாலை என இயன்றதைச் செய்யலாம். ஏழைக் குழந்தைகளுக்குப் பேனா, நோட்டுப் புத்தகம் வாங்கித் தந்து உதவலாம்.

தனுசு

கொடுத்து வைத்தவர் நீங்கள். இந்த ஆண்டு நினைத்தது நடக்கும். எதிர்பாராத சந்திப்புகள் உண்டு. வெளிநாடுகளில் உள்ள மகன், மகளால் மதிப்பு ஏறும். மார்ச் வரை மிகப் பிரகாசமான காலம்.

வேலையில் அங்கீகாரம் கிடைக்கும். வேண்டிய இடமாற்றமும் பதவி உயர்வும் கிடைக்கும். தொழிலில் நல்ல வளர்ச்சி. பொருளாதார நெருக்கடி விலகும். பங்குதாரர்களோடு எதிர்பாராத நல்லுறவும் முன்னேற்றமும் உண்டாகும். வெள்ளி, தங்கம் ஆகிய வியாபாரங்களில் ஈடுபட்டவர்களுக்குப் பொற்காலம்தான். செப்டம்பர் வரை நல்ல பலன்கள். அதற்குப் பிறகு பண விஷயத்தில் எச்சரிக்கை தேவை.

கலைஞர்கள் தங்கள் முத்திரையைப் பதிப்பார்கள். நாடு முழுவதும் அவர்கள் புகழ் பரவும்.

பெண்களுக்கு பெரும் யோகம். எடுத்த காரியங்கள் எளிதாக நிறைவேறும். பத்திரிகை மற்றும் எழுத்துத் துறையில் ஈடுபடும் பெண்கள், பெரும் புகழ் அடைவார்கள். புத்திசாலித்தனத்துடன் அந்தப் புகழைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும்.

மாணவர்களுக்கு முன்னேற்றமான வருடம். மேற்படிப்பும் திட்டமிட்டபடி இனிதே தொடங்கும். கிரக வழிபாடு நலம் தரும். பிரதோஷக் கால பூஜைகளில் தவறாது கலந்து கொள்ளவும். சிவன் அருள் கிட்டும்!

மகரம்

பண விஷயத்திலும், ஜாமீன் கையெழுத்துப் போடுவதிலும், புதியவர்களிடம் பழகுவதிலும் மிகுந்த எச்சரிக்கை அவசியம். வங்கி அதிகாரிகளும், காசாளர்களும், பணம் தொலைந்து போகாமல் கவனத்துடன் இருக்கவும். உடல் நலம் கெடலாம். முக்கியமாக வயிற்று உபாதைகளை அலட்சியம் செய்தால் அறுவைச் சிகிச்சையில் கொண்டு விடும். பயணத்திலும் எச்சரிக்கை தேவை.

பணியில் அதிகமாக உழைக்க நேரும். அதற்குத் தகுந்த ஊதியம் இருக்காது. கப்பல், விமானத் துறையில் வேலை செய்பவர்கள், முதல் ஐந்து மாதங்களுக்கு மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். தொழிலதிபர்களும் ஜூன் வரை அடக்கிவாசிப்பது நல்லது.


கலைஞர்களுக்கு முதல் மூன்று மாதங்களுக்கு எதிர்பார்த்த பலன் இருக்காது. பிறகு நல்ல நிலை ஏற்படும். பண விஷயத்தில் ஜாக்கிரதை. பெண் கலைஞர்கள் உடல் நலத்தைப் பேணிக் காத்தல் அவசியம். சினிமாக் கலைஞர்களின் நிலை தமிழ்ப் புத்தாண்டுக்குப் பிறகு உயரும். பூர்வீகச் சொத்து விவகாரம் சாதகமாகும். குழந்தைகளின் நலனில் அதிக அக்கறை தேவை.


சுமங்கலி பூஜை, துர்க்கை பூஜை, குரு பூஜை ஆகியவை நல்ல பலன் அளிக்கும்.

கும்பம்

புது வருடம் நல்ல வகையில் ஆரம்பமாகிறது. எதிர்பாராத பொருள் வரவு, புதியவர் அறிமுகம், தெய்வபலம், எதிர்ப்புகள் மறைவு என்று பலவித நல்லவை நடக்கும்.

சக ஊழியர்களின் ஒத்துழைப்பும் மேலதி





காரிகளின் பாராட்டும் கிடைக்கும். வங்கி ஊழியர்கள், ஆசிரியர்கள், காவல் மற்றும் ராணுவத்தைச் சேர்ந்தவர்களுக்கு எதிர்பாராத முன்னேற்றமும், அங்கீகாரமும் கிடைக்கும். சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பும் உண்டு. புதிய வேலைக்கு முயற்சி செய்தால் பலனிருக்கும். இப்போதைய பணியிலேயேகூட அதிகப் பொறுப்பும் ஊதிய உயர்வும் கிடைக்கும். விஞ்ஞானிகள் தங்கள் ஆராய்ச்சியில் முன்னணிக்கு வருவார்கள். தொழில் மற்றும் வியாபாரம் செய்பவர்களுக்கு, முதல் ஐந்து மாதங்கள் ஓஹோ என்று இருக்கும். பொருளாதார நெருக்கடி நீங்கும். தோல், எண்ணெய், ஏற்றுமதி இறக்குமதி, ஹோட்டல், டிராவல்ஸ் தொடர்பானவர்களுக்கு லாபம் நிச்சயம். பொன், தங்கம் ஆகியவற்றை வியாபாரம் செய்பவர்களுக்கு, அளவோடு நன்மை கிடைக்கும்.

ஆகஸ்ட் முதல் எச்சரிக்கை அவசியம். பணம் கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. ஆகஸ்டுக்குப் பிறகு யாருக்கும் ஜாமீன் கையெழுத்துப் போட வேண்டாம்.

பெண்களுக்கு முதல் ஆறு மாதங்கள் சாதாரணமான பலன்கள். பிறகு சுபமங்கள காரியம், வெளியூரிலிருந்து மக்கள் வருகை, பிரிந்தவர் கூடுதல், பூர்வீக வாகனம் மற்றும் சொத்து சேர்க்கை ஆகியவை நடைபெறும். செப்டம்பர் மாதத்தில் உடல் நிலை மாற்றம் தோன்றலாம். அலட்சியப்படுத்தாதீர்கள்.

மாணவர்கள் நல்ல நிலைக்கு வருவார்கள். மேற்படிப்பு உண்டு. ஆகஸ்ட், செப்டம்பரில் வெளிநாடு செல்லும் வாய்ப்புக் கிடைக்கலாம். விளையாட்டில் தீவிர ஈடுபாடு கொண்டவர்கள், வருடத்தின் பின்பாதியில் கவனமாக இருக்க வேண்டும்.

ஸ்ரீ விஷ்ணு சஹஸ்ர நாமம் சொல்லி வர, குடும்பத்தில் மேன்மை ஏற்படும்.

மீனம்


ஜனவரி பாதிக்குப் பிறகு நல்லது ஏற்படும். என்றாலும் பணம், உடல்நலம் இரண்டிலுமே எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

பணியில் பிறரோடு சுமுகமாகப் பழகுங்கள். பேச்சில் கடுமை வேண்டாம். இடமாற்றம், புதியபணி போன்ற முயற்சிகளை தள்ளிப் போடுங்கள். வருடத்தின் பிற்பாதி பொற்காலத்தின் தொடக்கம். அரசியல்வாதிகள், அரசு ஊழியர்கள் ஆகியோருக்கு மார்ச்சுக்குப் பிறகு நல்ல செய்தி கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு எதிர்பாராத திருப்பம் உண்டு. தொழில் மற்றும் வியாபாரத்தில் முதலீடு செய்யலாம். எண்ணெய், தோல், இரும்பு, இயந்திரம், போக்குவரத்து ஆகிய துறைகளில் பாதிப்பு இருக்கும். கவனத்துடன் இருந்தால் நஷ்டத்தைத் தவிர்க்கலாம்.

பெண்களால் குடும்பத்தில் சிறு சலசலப்பு ஏற்படும். எனவே கவனத்துடன் பழகவும். வீட்டுச் செலவு அதிகமாகும். அது சுபச் செலவாகவும் இருக்கலாம். வெளிநாட்டிலிருந்து மகன், மகள் வருகை உண்டு. குல தெய்வத்துக்குப் பிரார்த்தனையும், தான தர்மங்களும் கஷ்டத்தை நிவர்த்தி செய்யும்.

மாணவர்கள் இந்த ஆண்டு எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். ஞாபக மறதி, அசதி, சோம்பல் ஏற்படக் கூடும். மிகவும் கடின உழைப்பு அவசியம். உழைப்புக்குத் தகுந்த பலன் கட்டாயம் கிடைக்கும். மேல் படிப்பு, வெளிநாட்டுப் பயணம் ஆகியவை ஆகஸ்ட், செப்டம்பரில் உண்டாகலாம்.

பொதுவாக வருடத்தின் பின்பாதி பிரகாசமாக இருக்கும். ஹயக்ரீவர் ஸ்தோத்திரத்தைக் கூறுவது பலனளிக்கும். தக்ஷிணாமூர்த்தி, ஸ்ரீ ராகவேந்திரர், ஸ்ரீ சாயிபாபா போன்ற குருமகான்களைச் சிக்கெனப் பிடித்துக் கொள்ளுங்கள். நன்மையே நடக்கும்.







மிஸ்டர் நங்கூரம்!

உள்ளூர் புலி என்று கிண்டலடிக்கப்பட்ட இந்தியக் கிரிக்கெட் அணி, இப்போது உலகப் புலியாகி உறுமிக் கொண்டிருக்கிறது. இந்த உறுமலுக்குக் காரணம் ராகுல் ட்ராவிட்!

வெளிநாட்டுப் போட்டிகளில் 'நங்கூர மனிதர்' என்ற பெயரை, மீண்டும் ஒரு முறை உறுதிப்படுத்தியிருக்கிறார் ராகுல்.

''அவரிடம் கான்சன்ட்ரேஷன், மனோதைரியம், டெக்னிக் மூன்றும் இருக்கின்றன. ஓர் ஆட்டக்காரருக்கு இவை அவசியம். மைதானத்துக்குள் நுழைந்து இருபது முப்பது ரன்கள் எடுப்பது வரை, எல்லோரையும் போலவே தடுமாற்றம் இருக்கிறது. ஆனால் அதற்குப் பிறகு நிலைத்து நின்று விட்டால், அவரை அசைப்பது கடினம்'' என்று சர்டிபிகேட் தருகிறார் ஆஸி. கேப்டன் ஸ்டீவ் வா.

''இரண்டாவது இன்னிங்ஸில் நீண்ட நேரம் மைதானத்தில் நிற்பது கடினமாகத் தான் இருந்தது. ஆனால் எனக்கு நானே அட்வைஸ் செய்து கொண்டேன்'' என்கிறார் ட்ராவிட்.

எப்போதுமே சச்சினைத் தூக்கி வைத்துக் கொண்டாடும் ஆஸி. பத்திரிகைகள் கூட, இப்போது டிராவிட் புகழ் பாடுகின்றன.

ட்ராவிட்டுக்கு மிஸ்டர் கூல் என்ற பெயரும் உண்டு. பந்தை சரியாகக் கவனித்து ஆடுபவர், எதிரில் ஆடுபவரையும் பொறுமையாக, நிதானமாக ஆட வைத்து ரன்கள் உயர வழிவகுப்பவர்.

''ஆமாம். பார்ட்னர்ஷிப் முக்கியம். இரண்டு பேரும் நிலைத்து நின்றுவிட்டால் அடித்து ஆடுவதற்கு மனதில் தைரியம் வரும். எதிரணிக்குச் சோர்வை ஏற்படுத்தும். டெஸ்ட் கிரிக்கெட்டில், பொறுமையும் முக்கியமான விஷயம்'' என்கிறார்.

மூன்று வருடங்களுக்கு முன்பு கொல்கத்தா போட்டியில் ஆஸி. ஆஸியின் தொடர் வெற்றிக்கு ப்ரேக் போட்ட லக்ஷ்மணும் ட்ராவிட்டும் இந்த வெற்றிக்கும் உறுதுணையாகியிருக்கிறார்கள்.

''பத்தொன்பது வயதுக்குட்பட்டோருக்கான போட்டிகளில் ஆடுவதிலிருந்தே லக்ஷ்மணை நன்றாகத் தெரியும். அவர் சிறந்த ஆட்டக்காரர்'' என்று புகழும் ட்ராவிட்டை, ''நல்ல ரோல் மாடல்'' என்கிறார் கங்குலி.

''உலகின் இரண்டாவது சிறந்த அணியாக இருக்கும் நாம், அடுத்துவரும் போட்டிகளிலும் வென்றால், நம்பர் ஒன் இடம் நமக்குத்தான்'' என்பது கங்குலியின் ஆசை.

ஆசை நியாயமானதுதான். ஆனால் இந்த வெற்றி மிதப்பில், அடுத்த போட்டிகளில் கோட்டைவிடாமலிருக்க வேண்டுமே!

- அப்பு

Jeeva Coffee

ESTD 1947

வரும் புத்தாண்டு உங்களுக்கு மிகவும்
சிறப்பாகவும், மகிழ்ச்சியாகவும் அமையட்டும்.
2 கிலோ காப்பித் தூள் மொத்தமாகவோ அல்லது
2x1 கிலோ ஆகவோ வாங்கி ஒரு
லக்ஷ்மி பதித்த வெள்ளி காசினை பெற்றுக் கொள்ளுங்கள்.

இச் சலுகை டிசம்பர் 01.12.03 முதல் ஜனவரி 16.01.04 வரை

சுத்தமான தஞ்சாவூர் டிகிரி காப்பிக்கு

ஜீவா காபி

FREE SILVER COIN

Contact :
FREE HOME DELIVERY
28444725/28442667
(Chennai)

திருமணங்கள் மற்றும்
அனைத்து விசேஷங்களுக்கும்

100% பியூர் பில்டர் காபி பவுடர்

தயாரிப்பாளர்கள்:

ஜீவா காபி ஒர்க்ஸ்

28, பி.வி. நாயக்கன் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.

டெல்லி, மும்பை, கொல்கத்தா. E-mail:sales@jeevacoffee.com

?

ஏன்
என்ற
கேள்வி
கேட்காமல்
வாழ்க்கை
இல்லை...

Every Month Our Hattrick Release

ஹெல்த் டுடே	தொழில் முன்னேற்றம்	பில்டர்ஸ் வேர்ல்டு
இது புத்தக வடிவ நர்ஸிங் ஹோம்	தமிழின் நெ. 1 பிசினஸ் இதழ்	கட்டடக்கலையின் அச்சுக்காப்பகம்
மாரடைப்பால் வரும் மரணத்தை தடுப்பது எப்படி?	ஏமாற நாங்கள் ரெடி... -சொல்வது யார்?	சரிகிறது கனவும் கட்டடமும்... -சிக்கல் அகலுமா?

மங்கையர் நாவல் **ரமணிசந்திரன்** எழுதும் வீடு வந்த வெண்ணிலவு

VIVEK PUBLICATIONS
6/84, Mallan Ponnappan Street, Triplicane, Chennai - 5.
Phone : 28487533, 28483163 Telefax : 28480610

குறையொன்றுமில்லை

ஜலத்துக்குள்ளே அக்ரூரர் கண்ட காட்சி என்ன...? ஆச்சர்யமாய் சேஷதல்பம்... அதன்மேல் பகவான் காட்சியளிக்கிறான். இப்படித் திரும்பிப் பார்த்தால் அங்கே ரதத்தில் பலராம - கிருஷ்ணர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள். (சென்ற அத்தியாயத்தின் இறுதிப் பகுதியில் கண்ணன் என்பதற்குப் பதிலாக கம்ஸன் என்று பிழையாக வந்துள்ளது. திருத்தி வாசித்துக் கொள்ளவும். தவறுக்கு வருந்துகிறோம்.) ஜலத்தினுள்ளும் ஆதிசேஷன் ஆஸனமாக, பகவான் காட்சியளிக்கிறான். இரண்டையும் ஒரு சேரப் பார்க்க முடிந்தது அக்ரூரரால். அப்படி இரண்டு வித ஆனந்தத்தையும் பகவான் அவருக்குக் கொடுத்தான். ஒரே சந்தோஷம் அவருக்கு.

ரதத்துக்குத் திரும்பிச் செல்கிறார் அக்ரூரர். அங்கேயிருந்து வந்தவரைப் பார்த்து பகவானே கேட்கிறான்:

"என்ன அக்ரூரரே? உமக்கு இவ்வளவு சந்தோஷம் முகத்திலே... என்ன இவ்வளவு காந்தி? என்ன விசித்திரத்தை நீர் கண்டீர்?..." என்று கேட்கிறான். ஒன்றும் தெரியாத மாதிரி கேட்கிறான்! அப்பேர்ப்பட்ட அனுபவத்தை அக்ரூரருக்குக் கொடுத்தான் பகவான். வேறு யாருக்கு உண்டு அந்த அனுபவம்!

கோகுலத்து ஜனங்களோ, அந்த அக்ரூரரை வைகிறார்கள். "மகா க்ரூராத்மா இந்த மனிதர்... இவருக்குப் போய் யார் அக்ரூரர் என்று பெயர் வைத்தார்கள்!" என்று கோபப்படுகிறார்கள். "எங்களிடமிருந்து கிருஷ்ணனைப் பிரித்தல்லவா அழைத்துப் போகிறார் அக்ரூரர்... மதுரா நகரத்துக்கு அழைத்துப் போகிறார். கிராமத்திலிருந்து நகரத்துக்குப் புறப்பட்டுப் போய் விட்டால், அப்புறம் யாரேனும் திரும்பி வருவார்களோ!" என்கிறார்கள்.

– இதை அடியேன் சொல்லவில்லை. விஷ்ணு புராணமே சொல்கிறது. நகரத்திலே பல விதமான விஷயங்கள் உண்டு. அதன் காரண காரியங்களே வேறு... அதைப் பார்க்கிறவர்களுக்கு மறுபடியும் கிராமத்துக்குப் போகவேண்டும் என்று தோன்றுமா!

– இதை பராசர மஹரிஷி, விஷ்ணு புராணத்தில் கோபஸ்த்ரீகளெல்லாம் சொன்ன வார்த்தையாக நமக்குக் காட்டுகிறார்.

பகவான் மாறிப்போய்விடுவானோ, அவன் மறுபடியும் நமக்குக் கிடைப்பானோ இல்லையோ, என்றெல்லாம் சந்தேகப்பட்டு வருந்துகிறார்கள் கோபஸ்த்ரீகள்.

அதே மாதிரிதான் திருப்பதி யாத்திரை செல்பவரும் செல்கிற வழியை நினைத்து நினைத்து மகிழ்வார்... 'வைகுண்டம் புக்கவரும் காதலிக்கும் வேங்கடமே' என்று சொல்லியிருக்கிறதல்லவா! பிறவியே வேண்டாம் என்று அலுத்துக் கொண்டு மோக்ஷத்துக்குப் போனவர்கள் கூட, அங்கேயிருந்து கீழே பார்த்தால் பூலோகத்துக்கு வந்து, திருவேங்கட யாத்திரை செல்ல வேண்டும் என்று ஆசைப்படுவார்களாம்.

மோக்ஷ வழியைச் சிந்தனை பண்ணுவது என்பதும் இந்த மாதிரிதான் - முமுக்ஷூணாம் பராகதி:

பரா:கதியாய், உயர்ந்த கதியாய் இருக்கக் கூடியவன் பரமாத்மா.

அதனால்தான் 'முக்தானாம் பரமாகதி:' என்று ஸஹஸ்ரநாமம் சொல்கிறது.

கோயில்களில் பிரம்மோத்ஸவம் நடக்கிற போது, வேத மந்திரம் சொல்லி துவஜாரோஹணம் பண்ணுவார்கள்.

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்


21

அப்போது கருட மந்திரம் ஜபிக்கப்படும். கருடனை சாக்ஷாத்காரம் பண்ணுவார்கள். அழகான இறக்கைகளை உடையவன் அவன். திருடமான இறக்கைகள்... பெரிய திருவடி என்று பெயர் இந்த கருடத் மானுக்கு.

திருவகீந்திரபுரம் என்கிற க்ஷேத்திரத்தில், சுவாமி தேசிகனுக்கு கருடன் பிரத்யக்ஷ மானான். 'கருட தண்டகம்' என்ற சுலோ கத்தை அருளினார் சுவாமி தேசிகன்.

அந்த சுலோகம் யாருக்குத் திருப்தி அளிக்கும் என்று கேட்டால், கருடனுக்கு அல்ல...

"கருடத்வஜ தோஷாய...' கருடனை துவஜமாக உடைய எம்பெருமானுடைய திருப்திக்காக இது இயற்றப்பட்டது' என் கிறார். கருடனைத் தோத்திரம் பண்ணி னால் சந்தோஷிக்கிறவன் யார்...? சாக்ஷாத் பரமாத்மா அல்லவா சந்தோஷிக்கிறான்!

கருட பஞ்சாஷத் என்று அழகான ஐம்பது சுலோகங்கள் பண்ணியிருக்கிறார். அதிலே கருடனுடைய தன்மைகள் அத் தனையையும் சொல்லியிருக்கிறார்:

அந்த காயத்ரி மந்திரம் இருக்கிறதே, அந்த மந்திரத்தின் சாரம்தான் கருடனின் நேத்திரங்கள். அதன் திருமேனி மொத்தம் ஸாம வேதமாக இருக்கிறது. அது மட்டு மல்ல... உத்தமமாக இருக்கும்படியான இறக்கைகளின் நுனியெல்லாம் யக்ஞமாக இருக்கிறது. _ ஸர்வ யக்ஞங்களும்! பிரதான யக்ஞஸ்தானமாக அதன் தலை இருக்கிறது. ஹவிஸாக அதன் மூக்கு பாகமானது அமைந்திருக்கிறது. இப்படி சர்வ யக்ஞ மயனாக கருடன் இருக்கிறான்.

ஆளவந்தார் அருளிய ஸ்தோத்திரம். இதற்கு வரத வல்லப ஸ்தோத்திரம் என்று பெயர். மஹாலக்ஷ்மியைக் குறித்த ஸ்தோத்திரம் இது. சாப்பிட உட்காருகிறபோது கோஷ்டியிலே இதை எல்லோரும் அனுஸந்தானம் பண்ணுவார்கள். அதிலே அழகாக கருடன் மேல் எழுந்தருளி பகவான் வருகிற காட்சி, விசேஷமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

நாராயண பட்டத்ரி குருவாயூரப்பனைப் பார்த்து, நாராயணீயத்தில் ரொம்ப அழகான சுலோகம் சொல்கிறார். கர்தம பிரஜாபதி தபஸ் பண்ணியபோது அவர் எதிரிலே பகவான் காட்சி கொடுக்கிறான். அது குறித்துச் சொல்கிறார் பட்டத்திரி:

"ஹே பிரபு! குருவாயூரப்பா! நீ அந்த கருடன் மேலே, விசேஷமான தாமரை புஷ்பத்தைக் கையிலே வைத்துக் கொண்டு, திவ்ய திருமேனியோடு, காளமேகம் போன்று காட்சி கொடுத்தாயாமே! அது வாஸ்தவமா...?" என்று கேட்கிறார்.

உடனே பகவான் பட்டத்திரியைப் பார்த்து, "உமக்கு அந்த ஸேவை பார்க்கணுமா?" என்று கேட்கிறான்.

பார்க்க வேண்டும் என்று அவர் விழை கிறார். உடனே அந்த குருவாயூரப்பன் சன்னிதியில், அந்தச் சின்ன இடத்திலே... கர்தம பிரஜாபதிக்குக் காட்சி கொடுத்த அதே தினுசிலே காட்சி கொடுக்கிறான் பரமாத்மா!

அப்படி அவன் காட்சி கொடுக்க வில்லையானால், இந்த மாதிரி ஒரு சுலோ

பேய்ச் சிரிப்பு!

வாரம் முழுக்க மெகா சீரியல்களில் மூழ்கி, கண்ணீரும் கர்சீப்புமாக இருப்பவர்களுக்கு வாரக் கடைசியில் உற்சாகமூட்டுகிறது ஜெயா



கம் வாக்கிலே வராது. ஏனென்றால், நேரிலே பார்க்காமல் வெறுமே வர்ணித்துச் சொல்ல முடியாது. கவனம் பண்ணி தன் சொந்த சக்தியினாலே அவ்வாறு எழுத முடியாது. இவ்வளவு ஆச்சர்யமான முறையிலே ஒரு சுலோகம் வாயிலே வருகிறது என்றால், அப்படி நேரே பார்த்து அனுபவித்திருக்கிறார் அந்த எம்பெருமானை. கருடாருடனாக எதிரிலே வந்து காட்சி கொடுத்திருக்கிறான்.

சுபர்ன: என்ற இந்த கருடன், பகவானை எங்கும் அழைத்துக் கொண்டு போகிறான். ஸ்ரீவில்லிபுத்தூரில் பார்க்கலாம், கருடத்மான் பகவானோடு ஏகாஸனத்தில் நின்று கொண்டிருக்கிறான். அப்படிப்பட்ட உத்தம ஸ்தலத்திலே தீபாவளி அன்று இந்த உயர்ந்த ஸேவையைப் பார்க்கலாம்.

சம்ப்ரோக்ஷணம் நடந்தது ஸ்ரீவில்லிபுத்தூரிலே. பல மகான்கள் எழுந்தருளியிருந்தார்கள். அந்த ஸ்ரீவில்லிபுத்தூர் ரங்கமன்னார், ஆண்டாள், கருடன், பெரியாழ்வார், எல்லோரும் ஏகாஸனத்தில் தீபாவளியன்று விசேஷமாக ஸேவை...

டீ.வி.யின் விட்டாலாச்சாரி டைப் ஜாலியோ ஜிம்கானா தொடர், கிரேஸி மோகனின் 'விடாது சிரிப்பு'!

அப்பா ஆவி, தாத்தா ஆவி என்று இரண்டு அமானுஷ்ய வில்லன்கள் அடிக்கும் லூட்டிதான் தொடரின் ஹைலைட்! பேய் ஓட்டுபவராக கிரேஸி மோகன். பெயர் மாத்ருபூதம்!

"ஆவி, பேய், பிசாசு, காத்து, கருப்பு இதெல்லாம் நினைச்சு பயப்படுறவங்களுக்குக்கூட, இந்தத் தொடரைப் பார்த்தா, அப்புறமா அதுகளை நிஜத்திலே பார்த்தால் கூட பயமே வராது. மாறா, சிரிப்புதான் வரும். பேய்ச் சிரிப்பு வரும்'' என்றார் கிரேஸி மோகன்.

கிசுகிசு : 'காதலிக்க நேரமில்லை' போன்ற முழு நேர காமெடிப்படம் எடுக்கும் பணியில், காதும் காதும் வைத்தமாதிரி ஈடுபட்டிருக்கிறது கிரேஸி மோகன் குழு.

- அனு

கருடன் வைகுண்டத்திலே பகவானுக்கு விசேஷமாக ஸேவை பண்ணக் கூடியவன். நித்ய சூரிகளிலே அவன் ஒருவன் —

நித்ய சூரிகள், இமை கொட்டுதல் இல்லாமல் பகவானை ஸேவிக்கிறார்கள் என்று வேதம் சொல்கிறது. அப்படிப்பட்ட நித்ய சூரியான கருடன் மேலே பகவான் எழுந்தருள்கிறான். என்றால், வேதத்தினுடைய பொருள் நான்தான், நான்தான், என்று குதித்துக் கொண்டு, குதித்துக் கொண்டு, ஆனந்தமாக பரமாத்மா வருகிறான் என்றல்லவா பொருள்!

இதனால்தான் காஞ்சிபுரத்திலே கருட ஸேவை மிகவும் ஏற்றமுடையது. மற்ற இடங்களில் நடந்தாலும், தேவாதி ராஜன் காஞ்சியிலே காட்சியளிப்பது சிறப்பு. விசேஷமாக பத்து வாகனங்களும் பத்து நாட்கள் கண்டருள, உத்ஸவத்தில் அவனைத் தாங்கி வருவதை ஒரே சுலோகத்தில் பாடியிருக்கிறது.

கருடன் மேலே பகவான் ஆரோகணம் பண்ணியிருக்க, ஸ்ரீபாத தாங்கிகள் "ஹே கேசவா! ஹே மாதவா! கோவிந்தா! வரதா!" என்று கூவியபடி, அப்படி ஒரு தூக்குத் தூக்கி ஓர் உலுக்கு உலுக்குவார்கள்... மேலே குடை அசையும், அவன் கொண்டை அசையும், முத்துமாலை அசையும்... கம்பீரமாய் அப்படி ஒரு ஆட்டம் ஆடுவான் பகவான்!

முன் கோஷ்டியான வேத கோஷ்டியிலே, பிரதிவாதி பயங்கரம் சுவாமி இருப்பார். அவன் அப்படி ஆடுகிறானா இல்லையா என்று திரும்பி ஒரு பார்வை பார்ப்பார்; அதை ரசிப்பார்!

அவர் வாக்கிலேயும் 'ஆடுக ஆடுகவே செங்கீரை..' என்று பிள்ளைத் தமிழ்ப்பாடல் பிறந்திருக்கிறது.

அப்படி கருடாரோஹணம் செய்து விசேஷமாய் ஆடுகிறான் எம்பெருமான்!

கருடத்மான் அப்படி விசேஷமாகத் தாங்கி நிற்கிறான். அந்த உயர்ந்த காட்சி, கண்கொள்ளாக் காட்சி!

பின்னால் சம்ஸ்க்ருத வேதம்; முன்னே தமிழ் வேதம். இரண்டுக்கும் பொருள் நான் தான் நான்தான், என்று அவன் குதிக்கிற அழகு... காஞ்சிமாநகரில் மட்டுமே நாம் காணக் கூடிய கண்கொள்ளாக் காட்சி!

(வளரும்)


குல்லு மல்லு
—கதிர்
... ஆ, குல்லு வரா...
ஹாய்... மல்லு...
ஹாய்... சுமிக் குட்டி... ஏன் என்னப் பாக்க வரதேயில்லை. உன்னை பாக்காம என்னால இருக்கவே முடியல...
நான் ஹாய் சொல்றதுகூட தெரியாம... யாருக்குடா போன்ல ஹாய் சொல்ற?
என்னோட கேர்ள் பிரண்ட் சுமிகூட பேசிக்கிட்டிருந்தேன்.
ஹா... எலிபெண்ட்டுக்கு கேர்ள் பிரண்டா... என்ன சொல்லி ஏமாத்தின...?
யாரும்மா நீ?
என் பேரு சுமி...
ஏண்டா, இவதான் உன்னோட கேர்ள் பிரண்டா...?
ஆமாம்... ஏன்னா... எனக்கு 20. இவளுக்கு 8
தமிழ் சினிமாவை வாழ விடுங்கடா!



மூட்டுவலியா? जोड़ों का दर्द? सांधे दूखी?
ஆர்தோக்யூர் आरतोक्यूर ऑर्थक्यूर
Celery Seeds Extract - First Time in India !
ORTHOCURE™
PROVEN IN AUSTRALIA
100% AYURVEDIC & SAFE
ORTHOCURE LINIMENT
ORTHOCURE
(AN INDO - AUSTRALIAN JOINT VENTURE)
NEW FORTIFIED TABLETS
AN INDO AUSTRALIAN JOINT VENTURE
TABLETS & LINIMENT
FOR ALL YOUR JOINT PAINS
MARKETED BY:
KUREWEL PHARMA
CHENNAI-600083
PH:044-2489 3013, 2471 1719
Product of NATURE REMEDIES (P) LIMITED CHENNAI-600 083

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 * Registered as a Newspaper in Srilanka

கிரி டிரேடிங் ஏஜென்ஸி பிரைவேட் லிமிடெட்

(இந்திய கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்திற்கு

10, கபாலீஸ்வரர் சன்னதி தெரு, மயிலாப்பூர், சென்னை 600 004



❖ ஆன்மீகப் புத்தகங்கள் ❖ ஆடியோ கேஸட், சி.டி.க்கள்

❖ பூஜை பொருட்கள் ❖ திருக்கோயில் சம்பந்தமான பொருட்கள்

அனைத்துப் ஆன்மீகப் பொருட்களும் கிடைக்கும் ஒரே இடம்

கிரி டிரேடிங் ஏஜென்ஸி பிரைவேட் லிமிடெட்

எமது கிளைகள்

சென்னை	❖ மயிலாப்பூர்	✆ (044) 2464 0376, 2494 2530, 2495 3820
	❖ நங்கநல்லூர்	✆ (044) 2231 1735
மும்பை	❖ மாதுங்கா	✆ (022) 2414 1344, 24122316
	❖ கோரேகான்	✆ (022) 2876 7298
	❖ டோம்பிவிலி	✆ (0251) 2861 890
கோயம்புத்தூர்	❖ ஆர்.எஸ்.புரம்	✆ (0422) 254 1523
செகந்திராபாத்	❖ ஸ்கந்தகிரி	✆ (040) 2750 3046
காஞ்சிபுரம்	❖ காஞ்சிபுரம்	✆ (04112) 224415

Email : giritrading@vsnl.com Website : www.giritrading.com